கலை பண்பாட்டு அரசியல் சமூக இதழ் - வயது - 28

# ERIMALAI
# எரிமலை

சனவரி - பெப்ரவரி 2009



நான்
தமிழனாக பிறந்ததால்
இந்த நிலையா...



## "இனப் படுகொலை"
## மீது போர்த்தப்படும்
## "மனித உரிமை மீறல்" திரைகள்

எரிமலை



பத்தா..? நூறா..? எண்ணில் அடங்கா இன அழிவின் மத்தியில்
பாதுகாப்பற்ற இடத்தில் மருத்துவ வசதியற்ற மருத்துவம்.

# நீங்காத நினைவுகள்

**கேணல் .கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 16ம் ஆண்டு நினைவு நாள்**

**16.01.2009**



நம்பிக்கையின் வரிகளாய் நின்று நிலைக்கும் நாயகர்களே..!
உங்கள் நினைவுகளில் நிமிர்கின்றோம்!!
சூழ்ச்சி நெருப்பின் செந்தீ நாக்குகள்...
தீண்டத் துடித்தன..
பொய்க்கா விடுதலைப் பற்றுதல் பற்றிய
விடுதலை நெருப்பாய் கனன்றன புலிகள்.
ஆழ்க்கடலில் எரிமலைக் குமுறல்.
அலையின் இரைச்சலை அதட்டிய உறுமல்.
“வெல்லவா பார்க்கிறாய்?”
இளநகை சிந்திய உதடுகள் உரைத்தன..
“விடுதலைப் புலிகள் வீழவே மாட்டோம்”
“சுதந்திர தமிழீழம் காணாது ஓயோம்”



# வீரவணக்கம்



**20.02.2009**

**வான்கரும்புலி**
**கேணல் ரூபன்**

**வான்கரும்புலி**
**லெப். கேணல்**
**சிரித்திரன்**

வான் ஏறி, வீரவரலாறு வரைந்தவர்!

புதிதாய் எழுதப்பட்ட பக்கங்களின் அகரமானவரே!
விரிந்த வானத்திலும் தியாகப் பெருநெருப்பை வளர்த்து விட்டுச் சென்றவரே!
இருள் கிழித்து வான் எழுந்த திருமுகத்தின் ஒளிமுகங்களே!
எங்கள் வானத்தின் விடிபொழுதுக்கானது உங்கள் பறப்பு.
தாய்மண் மீதுள ஒவ்வொரு உயிர்ப்பிலும் உங்களின் நினைப்பு.

# உள்ளே




## கட்டுரை


'இனப் படுகொலை' மீது போர்த்தப்படும்
'மனித உரிமை மீறல்' திரைகள் - 04
இதயச்சந்திரன்

தமிழீழத் தேசிய விடுதலை போராட்டமும்,
அது தழுவிய சமச்சீரற்ற..... - 24
ம.தனபாலசிங்கம்

இலங்கைத் தீவு 2008 ஒரு பின்நோக்கிய
பார்வை - 32
பொன்.பூலோகசிங்கம்

சர்வதேசத்திற்கு தெரியாத வன்னி
அவலம் - 36
க.பாலகிருஸ்ணன்.

திட்டமிட்டுச் சிதைக்கப்படும்
தமிழீழ மாணவர்களின் கல்வி - 44
அஞ்சலி

நகர்ந்து கொண்டிருக்கும் நகரம் - 48
ஆதிலட்சுமி சிவகுமார்


## கவிதை


மன உலகம் - 09
கு.வீரா

வலியின் வழி- - 15
தெ.றஞ்சித்குமார்

மண்சுமந்தோர் கனவு - 39
புதுவை இரத்தினதுரை


## நேர்காணல்


திரு.பொன்.பூலோகசிங்கம் - 18


## வரலாற்று நவீனம்


வீறு - 16
தமிழ்க்கவி


## வரலாற்று


பிடரிமயிரை வேரோடு
பிடுங்குவேன் - 40
யோ.செ.யோகி


## சிறுகதை


அந்த வழியில் அவளும் - 50
முருகு பாரிமகன்





எரிமலை
சனவரி -பெப்ரவரி 2009

## சிந்தனை விருந்து.......



எமது வெற்றியானது, எமது கையில், எமது பலத்தில் எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக் கின்றது. நீதியும், நியாயமும் எமது பக்கம் இருந்தால் மட்டும் போதாது. நாம் வலிமை மிக்கவர்களாக இருக்கவேண்டும். போராடும் திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். எமது எதிரி யான சிங்கள பேரினவாத அரசு எமது மக்களின் பிரச்சினையை நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் தீர்க்க விரும்பவில்லை. பலாத்கார பிரயோகத்தின் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினை க்கு முடிவுகட்ட முனைகிறது. சிங்களப் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இராணுவப் போக்கு காரணமாக தமிழரின் இனப்பிரச்சினை நாற்பது ஆண்டு காலத்துக்கு மேலாகத் தீர்வின்றி, முடிவின்றி இருக்கின்றது. நீண்ட நெடுங்காலமாக தீர்வு கிடைக்குமென காத்திருந்த தமிழர்கள் சாவையும், அழிவையும், தாங் கொணாத துன்பத்தையும் சந்தித்ததைத் தவிர வேறொன்றும் காணவில்லை. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை வழங்கப்போவதில்லை என காலங் காலமாக நாம் வலியுறுத்தி வந்த அரசியல் உண்மையை எமது மக்கள் இன்று ஆழமாக உணரத் தொடங்கியுள்ளனர்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்** அவர்கள்
1993மாவீரர் நாள் உரையில் இருந்து....

# தலைவாசல்

## ஒரேயோரு தீர்வை மட்டும் நோக்கி...

காத்திருந்து எங்கே புலிகள் தாக்குதல் நடத்திவிடுவார்களோ என்ற அச்சத்தின் மத்தியில், அதியுச்ச பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கிடையே, வழமைக்கு மாறான இறுக்கமான உணர்வு நிலைப்பாட்டுத் தளத்தில் நின்றபடி, சிறீலங்கா தனது அறுபத்தியோராவது சுதந்திரநாளை பெப்ரவரி நாலாம் திகதி கொண்டாடியது. கடந்த ஆண்டின் இறுதி மாதங்களில் இருந்து, அதிதீவிரம் பெற்றுவிட்ட தமிழின அழிப்பின் அறுவடை அரங்கேறிவிடுமோ என்ற அச்சம் சிங்களத்தை அலைக்கழித்தது.

சுதந்திர தினத்தின் போது, கண்ணாடிக் கூட்டுக்குள் நின்றபடி, உரையாற்றிய அதன் சனாதிபதி மகிந்த ராஜபக்ஸ்ச, '1948இல் சிறீலங்கா சுதந்திரம் அடைந்ததை விடவும், சுதந்திரத்தின் வாயிற்படிக்கு அப்பால் உள்ள மிகவும் கருத்துள்ள, அர்த்த புஷ்ட்டியான சுதந்திரத்தை நோக்கி நாம் இப்போது நகர்ந்துள்ளோம்' என்று பிரகடனப்படுத்தினார்.

சிறீலங்கா அரசுகளின் இனஅழிப்புப் போர் முன்னெடுப்புக்களின்போது, கடந்த காலங்களில், இலங்கைத்தீவுக்குள், இடம்பெயர்ந்த மக்கள், பன்னெடுங்காலமாக, இன்னும் அகதிகளாக அலைந்துகொண்டிருக்கின்றனர். வடமராட்சியில், வலிகாமத்தில்,யாழ் தீவகப்பகுதிகளில், தென்மராட்சியில், மன்னாரில், திருகோணமலை, மட்டக்களப்பு, மணலாறு, அம்பாறை என, தமிழர்களின் தாயகத்தில், தமிழர்கள், இன்று வரைக்கும் அகதிகள். பல பத்தாண்டுகளாக, தமிழர்கள், தமது சொந்த வீடுகளுக்குச் சென்று வாழமுடியாத அவலம் தொடர்கிறது. அவர்கள் தமது பூர்வீக நிலங்களைச் சென்று பார்ப்பதற்குக்கூட அனு மதியில்லை. அவர்கள், பரம்பரை பரம்பரையாக உழைத்துவாழ்ந்த பூமியில், கடலில் தொழில்செய்ய. இன்றுவரை சிங்கள அரசு அனுமதியளிக்கவில்லை.

இந்த நிலையில், ராஜபக்ஸ்ச புலம் பெயர்ந்தவர்கள் நாடுதிரும்பவேண்டும் என்று இனிமையான அழைப்பு. ஆனால், இதற்கு தமிழ் மக்களிடம் இருந்து கடுமையான மிகக்கடுமையான பதில்.

கடந்த காலங்களைவிட, இந்த ஆண்டு, மிகவும் தீவிரமுனைப்புடன், சிறீலங்காவின் சுதந்திர தினத்தை, உலகமெல்லாம் பரவிவாழும் தமிழ் மக்கள், கறுப்பு நாளாகக் கடைப்பிடித்தனர். புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் மாத்திரமன்றி, தமிழக மக்களும், ஏனைய நாடுகளில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களும் சிறீலங்காவின் சுதந்திர நாளை, கறுப்பு நாளாகக் கடைப்பிடித்தனர்.

கடந்த காலங்களில், சற்று அடங்கிக்கிடந்த எழுச்சி, தற்போது, மிகத் தீவிரம் பெற்றிருக்கின்றது. நூறு ஆயிரமாக அணிதிரண்ட மக்கள், இன்று, பல இலட்சங்களாக வீதிகளில் இறங்கி, சிங்கள எதிர்ப்புக் களங்களை அமைத்துப் போராடுகின்றனர்.

பொய்ப்பிரச்சாரங்களாலும், சிங்களத்தின் போர்வெற்றி பற்றிய மாயைத் தோற்றங்களாலும் புலம்பெயர் தமிழர்களை, சோரச் செய்து, போராட்டத்தில் இருந்து அன்னியப்படச் செய்துவிடலாம் என்ற சிங்கள இனவாத ஆட்சியின், திட்டம், தோற்றுப்போனது மட்டுமின்றி, அச்சம் தரும், பிரமாண்டமான மக்கள் எழுச்சி என்ற பேரெதிரியை சந்திக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

புதிய களம் திறக்கப்பட்டுவிட்டது.
அறுபத்தொரு ஆண்டுகளின் பின், மேலும் கூர்மை அடைந்துவிட்டது இனமுரண்பாடு.

எரிமலை ERIMALAI
கலை பண்பாட்டு அரசியல் சமூக இதழ் - வயது- 28
சனவரி - பெப்ரவரி 2009

ஆக்கங்கள், அபிப்பிராயங்கள் மற்றும் தொடர்புகட்கு
E-mail: editor@erimalai.info - erimalai@gmail.com

# "இனப் படுகொலை" மீது போர்த்தப்படும் "மனித உரிமை மீறல்" திரைகள்

– இதயச்சந்திரன்



இனப் படுகொலை குறித்த வரையறைகள் யாவும், அவை நடந்து முடிந்த பின்னர் தீர்மானிக்கப் படுவதே வரலாறாகி விட்டது. இரண்டு இலட்சம் மக்கள் கொன்று குவிக்கப்படும் போது அதனை இனப் படுகொலை என்று கூறாமல் மௌனம் சாதித்த சர்வதேசம் இன்று சூடான் அதிபர் அல் பசீர் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக தன்டனை வழங்குகிறது.

70.000 மக்கள் கொல்லப் பட்டதாகப் பல வருடங்களாகக் கூறிவரும் சர்வதேசம் 2006ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சிங்களத்தால் அழிக் கப்பட்ட பத்தாயிரத்துற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் குறித்து பேச விரும்புவதில்லை. நாளொன்றிற்கு ஐந்து பத்து என்று ஆரம்பித்த கடத்தல்கள். படுகொலைகள் பாதுகாப்புவலயப் பகுதிகளில் நூற்றுக் கணக்காக விரிவடைந்து விட்டது.

சிலங்காவின் இறையாண்மைக்குள் இருக்கும் சிறைச் சாலைகளில் பாதுகாப்புத் தேடும் அளவிற்கு, தமிழ் மக்களின் மனித உரிமைள் சிங்களத்தால் நிமாணயிக்கப்படுகின்றன. மக்களிற்கும், சிங்களத்தின் யாழ்ப்பாணச் சிறைச்சாலைகளுக்குமிடையே இடைத்தரகராச் செயல் படும் மனித உரிமைகள் மையத்தின் பரிதாபநிலை குறித்து, ஐ.நாவின் மனித உரிமைச் சங்கத் தலைவர்கள் கவலைப் படுவதில்லை. மக்கள் கொல்லப்படும் போதுமட்டும் கவலை தெரிவிப்பதே அவர்களின் கடமையாகி விட்டது.

ஐ.நா.சபையில் ,மனிதர்களின் உரிமைகளைப் பாதுகப்பதற்கென்று ஒரு பிரிவு ஏன் இருக்கின்றதென்கிற கேள்வி தமிழ் மக்களின் மனங்களில் ஏற்படுவது தப்பில்லை போல் தெரிகிறது.

மனித உரிமை தொடர்பாக விடுக்கும் காட்டமான அறிக்கை களால், சிங்களம் அதிர்ந்து விடுமென்ற கற்பனையில், தற்காலிக ஓய்வினை போராட்ட முனைப்பிற்கு வழங்கலா மென்று சிலர் எண்ணுகிறார்கள் .

ஆனாலும் நடைபெறும் அப்பட்டமான இனப்படுகொலை யை, மனித உரிமை மீறல்கள் என்கிற சிறு வட்டத்துள், வல் லரசாளர்களின் ஐ. நா. சன்னிதானம் அடக்குவதை, தமிழ் மக்கள் தெளிவாகப் புரிதல் வேண்டும்.ஓர் இனத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்படும் ஒடுக்குமுறைகள், கலாச்சார சிதை வாகவும், கல்வி மறுப்பாகவும், நில அபகரிப்பாகவும் விரி வடைகின்றன .

உடல் ரீதியாக மட்டுமல்லாமல்,கலை,கலாச்சார,மொழி மற்றும் நில ரீதியான சிதைவுகள் யாவையும் ஓர் இனப்படு கொலைக்குள் உள்ளடக்கப்படும். தமிழர் தாயக கிழக்குக் கிராமங்களில் அரச படைகளும், ஜிகாத் அமைப் பினரும் நிகழ்த்திய கூட்டுப் படுகொலைகளும், ஓர் இனப் படுகொலை யின் உச்ச வடிவங்களே. தமிழ் மக்களின் குடிசனப் பரம்பலை சிதைக்கும் சிங்களக் குடியேற்றங்களால், நிகழ்ந்த மனித இடப்பெயர்வுகளின் அடுத்த கட்ட படிநிலையிலேயே ,இந்தக் கூட்டுப் படுகொலைகள் நடந்தேறின .

சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக, ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்ற காலத்தில்தான் 77,81,83 இனப்படுகொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன .

இதனைக் ‘கலவரங்கள்’ என்கிற வரையறைக்குள் தள்ளி விட்டு, வேடிக்கை பார்த்த பிராந்திய நலனில் அக்கறை கொண்ட வல்லரசாளர்கள், ஒடுக்குமுறையாளனிற்கு இற்றைவரை உதவிபுரிவதை நாம் உணரவேண்டும். அதா வது இறையாண்மையை நிலை நிறுத்தும் அராஜக அரசு களிற்கு மியன் மாரிலும் பாகிஸ்தானிலும் சீனா துணை நிற்கின்றது.

ஆனாலும் உலக வரலாற்றில், முன்னெப்பொழுதிலும் நிகழ்ந் திராத அதிசய நிகழ்வொன்று ஸ்ரீலங்காவில் அரங்கேறு வதைக் காணலாம் .

அதாவது ஒன்றோடொன்று முரண்பட்டு, முட்டிமோதும் சர்வதேச அணு ஆயுத வல்லரசர்களான சீனா ,இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மேற்குலக நாடுகள், சிறிலங்கா விவ காரத்தில் ஒரு பாதையில் பயணிப்பதைத் தரிசிக்கலாம்.



தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தி னை அழிப்பதற்கு,தமக்கிடையே காணப்படும் உரசல்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்து ,சிங்களத்திற்கு ஆயுத நிதி உதவிகளை தொடர்ந்தும் வழங்குவதை காணலாம் .

சிறிலங்காவைத் தனது கட்டுபாட்டிற்குள் கொண்டுவர, ஈழ விடுதலை இயக்கங்களுக்கு வலிந்து சென்று ஆதரவினை வழங்கியது இந்தியா. 87இல் ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் போ ராட்ட இயக்கங்களை கைகழுவிவிட்ட இந்தியா, இலட்சிய வேட்கை யோடு உறுதியாக நின்ற விடுதலைப்புலிகளை அழிக்க முயன்றது.

சீனாவைப் பொறுத்தவரை ,இந்தியாவின் கழுத்தைச் சுற்றிப் போடப்பட்ட முடிச்சுகளில்,தவறவிடப்பட்ட ஸ்ரீலங்கா என்கிற மையத்தில் முடிச்சுப்போடும் காலத்திற்காக காத்திருந்து, 2000 ஒப்பந்தத்தோடு ,அதற்கான வேலையையும் ஆரம்பித்தது.

அமைதிப்படை வெளியேற்றத்தோடு, பார்வையாளர் அந்த ஸ்தினைப் பெற்ற இந்தியா, ஜே.வி.பியினுடாக புதியகாய் நகர்த்தல் ஒன்றினை மேற்கொண்டு, இடையில் நுழைந்த மேற்குலக சக்திகளை களத்திலிருந்து அகற்றியது. தற்போது தமிழர்களுக்கு எதிரான சிங்களத்தின் போரினை, இந்தியா நிகழ்த்துவதே யதார்த்த நிலையாகும். சீனாவின் உள்நுழை வினை, இந்தியாவல் தடுத்து நிறுத்த முடியுமென்கிற எதிர் பார்ப்பில், நடை பெறும் கொடூரங்களை அமைதியாக ஏற்றுக்கொள்கிறது இந்த மேற்குலகம்.

இந்நிலையில் மனித உரிமை மீறல்களை முன்வைத்து, சிறிலங்கா அரசினை மேற்குலகின் வல்லரசாளர்கள் அச்சுறுது வார்களென்று கனவு காணுதல் கூடாது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு பதிவுகளெல்லாம், கால்பதிப்பதற்கான துருப்புச் சீட்டுக்களாகவே இவர்களால் இதுவரை பயன் படுத்துவதை அவதானிக்கலாம்.

பிராந்தியங்களையும் அதன் சந்தைகளையும் கூறு போடு வதற்கே, உலக யுத்தங்களும், பிராந்தியப் போர்களும் முன்பு நிகழ்த்தப்பட்டன. பக்கத்து நாட்டில் எதிரிகள் பலமாக இருந் தால், பங்களாதேசத்தையும் உருவாக்குவார்கள், அதே போன்று சிங்களம் சீனாவிடம் சரணடைந்தால் தமிழீழத்திற் கும் ஆதரவு வழங்குவார்கள். இதுதான் பூகோள அரசிய லின் புதிய ஒழுங்குமுறைகள்.

சிறிலங்காவின் இனப் பிரச்சனை குறித்து, சர்வதேச வல்ல ரசர்களின் தற்போதைய நகர்வுகளை அவதானித்துப் பாருங் கள். புலம் பெயர் ஈழத் தமிழ் மக்களின் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டங்களின் எதிர்வினையாக ,சர்வதேச நாடுகளிலும் அதன் உயர் மூலஸ்தானங்களிலும் சில அசை வுகள் ஏற்படுவது போன்று தென்படுகின்றன.

அவையாவும் அழிக்கப்படும் தமிழினதிற்கு சார்பான, நேர்மை யான நகர்வுகளாவென்பதை ஆழமாக நோக்க வேண்டும் ஏற்கனவே ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இருதடவைகள் சிறிலங்கா விவகாரம் பேசப்பட்டபோதும் சீனாவும் ரஷ்யாவும்



அதனை எதிர்த்தன.சிங்களத்தின் மீதான இந்த முன்னாள், இன்னாள் சோசலிச கோமான்களின் காதலை இவ்விவகாரம் வெளிப்படுத்தியிருந்தது.

மனித உரிமை வாதிகள் காட்டமான அறிக்கை வெளியிட்டு, சிங்களவர்களிடமிருந்து மோசமான பதில் அறிக்கை ஒன்றினையும் பெற்றுள்ளார்கள்.

ஆனால் ஒரு விடையத்தை மட்டும் எல்லோரும் மிகத் தெளிவாக உரத்துக் கூறுகின்றனர். அதுதான் 'மனிதக் கேடய' விவகாரம் யுத்தத்தை நிறுத்த வலுவில்லாத, அல்லது விரும்பாத இந்த சர்வதேசம், மனிதம் கேடயத்தை தூக்கிப் பிடித்து, மனித உரிமை மீறல் என்கிற கூரிய வாளால், இனப்படுகொலையினை நிகழ்த்துமாறு சிங்கள சிங்கத்திடம் கூறுவது போல் தெரிகிறது.

ஆகவே இப்படியே காலத்தை ஜெனிவாவிலும், நியூ யோர்க் பாதுகாப்புச் சபையிலும் இழுத்தடிக்கும் கால இடைவெளியில், மகிந்தர், தமிழர்களின் பாதுகாப்பு அரணை உடைத்து விடுவாரென்று இவர்கள் கற்பிதம் கொள்கிறார்கள் .

பாலஸ்தினர் போன்று, கல்லறிந்து போராடும் நிலைக்கு, விடுதலைப் புலிகளை கொண்டு வந்து விட்டேனென, நோர்வே அமைச்சர் எரிக் சொல்கேயும் கனவு காணத் தொடங்கியுள்ளார்.

இந்நிலையில் புலம்பெயர் தமிழர்களின் தன்னியல்பான எழுச்சிப் போராட்டங்கள் வெடித்தெழ ஆரம்பித்துள்ளது.

இறுதிப்போரின் தளங்கள் விரிகின்றன, சர்வதேசத்தின் சதியைப் புரிந்து கொண்ட இளந்தலை முறையினர் ,புதிய போராட்டக் களங்களுள் புகுந்து, அக்கினிக் குஞ்சுகளை வல்லரசாளர்களின் வாசல் வரை கொண்டு செல்கின்றனர்.

தேசியத் தலைவனின் மாவீரர் தின உரை விளம்பிய தீர்க்க தரிசனம், இளந்தலை முறையூடாக நிதர்சனமாகிறது.

சிறப்புப் படையணிகளின் சிதைவுகள் வழங்கிய சீற்றத்தால், இந்தியக் கூலிப்படைகளின் துணையுடன், அழிவாயுதங் களை பிரயோகிக்கத் தொடங்கிறது சிங்கள பேரினவாதம் .இதனை அங்கீகரிக்கும் மேற்குலகம் தமது காவல் துறையினை ஏவிவிட்டு, இளையோரின் போராட்டங்களை நசுக்க முற்படுகிறது.

இவர்களால், கொதிநிலை எய்தியுள்ள தமிழ் மக்களின், உணர்வு களைக் கைது செய்ய முடியாது .

சிங்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு, வாழ்வின் விளிம்பு நிலையில் அந்தரிக்கும் மூன்று இலட்சம் வன்னி மக்களும், 12 இலட்சம் புலம்பெயர் ஈழத் தமிழர்களும் , ஆறு கோடி தமிழக உறவுகளும் தமது இறுதிச்செய்தியை இப்பூவுலக மனிதர்களுக்குச் சொல்லும் காலம் அண்மித்து விட்டது.

வாழ்வுரிமைக்கான போராட்டம், உயிர் காத்தலிற்கான போராட்டமாக மாறிவிட்டது. இழப்பதற்கு உயிரைத் தவிர வேறேதுமில்லை. ஆனால் பெறுவதற்கோ எம் பரந்த தேசமுண்டு. உணர்வினைத் தக்க வைத்தால், போராட்டம் நகரும். இல்லையேல் போராடாமல் தன் வாழ்வைத் தொலைத்து விட்டது தமிழினமே சரித்திரம் கூறும்.■








# மன உலகம்

நெருப்புக்குளத்து நீசல்
இருப்பிழந்து போன எரிசல்
எல்லாம் சேர்த்து
இறுக்கப் பார்க்கிறது மனங்களை.

போரின் நீட்சி
பொருள் முடக்கம்
வாழ்வின் வலி
வதையுறும் வம்சம்
இடர்நிறை சூழல்
எங்கும் பொழுதுகள்
எந்த மனங்களையும்
வெந்திட வைக்கும்.

நெருங்கி மூலையில்
முடங்கிட வைக்கும்
உயிரைப் பிசையாக்கி
உளறிட வைக்கும்.

சாவின் பயமும்
சண்டைகள் ஒலியும்
கேவி அழுதடி
கீழ்ப்படிய வைக்கும்.

மனந்தானே எல்லாமும்!
சூழலில் தாக்கம்
உனக்குள் புதைய
உனது தாக்கம்
மனசைப் பிசைய
எல்லாம் முடிந்ததாய்
எண்ண வரும்.

மனந்தானே எல்லாமும்!

உர்ணவுகளின்
கலவைதான் மனம்
அதில் உறுதியை
நிரப்பினால் திறம்
எதையும்
எளிமையாக்குவதும்
கனமாக்குவதும்
மனதின் மாயங்களே.

வலியால் துடிக்கும் மனம்
வலுவிழந்து அழிகிறது
வலிமை நிறைந்த மனம்
வரலாறாய் ஆகிறது.



அறிவின் கதவுகளை
அகலத் திறப்பவனுக்கே
மனசின் முக்கன்
மர்மங்கள் விலகுகின்றன.

அறிவின் கட்டளைக்கு
மனசைப் பழக்கினால்
குவியும் இலக்கெதையும்
குறிப்பிட்டு வென்றிடலாம்.

மனந்தானே எல்லாமும்!

போராட்டப் பாதையை
மனதில் துணிவிருந்தால்
பூப்பூக்க வைக்கலாம்
எந்த இறுக்கத்தையும்
மனதில் திறனிருந்தால்
இலகுவாக வென்றிடலாம்
துயரின் பாரங்களை
மனதில் வலுவிருந்தால்
தூக்கியே வீசிடலாம்.

மனம்

மூன்றெழுத்து சொல்தான்
ஆனால் அதுவே உன்
மூளையத்தின் வில்
இலக்கை நோக்கி
வில்லை வளைத்தால்
எய்யும் அம்பு
என்றும் தவறாது.

மனந்தானே எல்லாமும்!

மனம்
உனக்குள் சுற்றும்
ஓர் உலகம்
அதை அறிவால் இயக்கு
உன்னை சுற்றிலும்
இவ்வுலகம்.

- கு.வீரா -





தாக்குதலுக்குள்ளான உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடம். (படம்:ஏ.எல்.பி)





# முதலாவது வான் கரும்புலி தாக்குதல்

20.02.2009 - இரவு 9.10 மணி

காற்றிலேறி
விண்ணையும் சாடுவோம்

விடுதலைப்புலிகள்
வான் படை

SKY TIGERS









வான் கரும்புலித் தாக்குதலில் பங்கேற்று வீரச்சாவைத் தழுவிய வான் கரும்புலி கேணல். ரூபன், வான் கரும்புலி.லெப்.கேணல் சிரித்திரன் ஆகியோர் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன்.

20.02.2009ம் திகதி இரவு 9.10 மணியளவில் கொழும்பில் உள்ள சிறிலங்கா இறைவரி திணைக்கள தலைமை அலுவலகத்தின் மீதும், விமானப்படை தலைமையக அலுவலகத்தின் மீதும் வான்புலிகளின் இரு விமானங்கள் குண்டு வீசி தாக்கியது.

இந்தத் தாக்குதலின் போது அலுவலகங்களுக்கு சேதம் ஏற்பட்டதுடன் இருவர் கொல்லப்பட்டதுடன் 50 பேருக்கு மேல் காய மடைந்ததாக சேத விபரம் முழுமையாக வெளிவராதநிலையில் கொழும்பு தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு பகுதி எவ்வேளைகளிலும் வான் கண்காணிப்பில் உள்ள இடமாகும் என்பது குறிப்பிடத்தக்கத்துடன், இப் பகுதியில் உள்நுழைந்த வான்புலிகள் தாக்குதல் நடத்தி விட்டு கரும்புலி கேணல். ரூபன், வான் கரும்புலி. லெப்.கேணல் சிரித்திரன் ஆகியோர் தங்களை தமிழீழவிடுதலைக்கு வித்தாகினார்கள்.








# வான் கரும்புலி
# கேணல் ரூபன் அவர்கள்
## மக்களுக்கு எழுதிய மடல்

15.02.2009
தமிழீழம்.

**அன்புள்ள எனது தமிழீழ மக்களே குறிப்பாக வன்னியில் வாழும் மக்களே,**

நீங்கள் அனுபவிக்கும் கொடும் வலி கண்டு எனது மனம் குமுறுகிறது, கலங்குகின்றது. எமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றுதான் எமது தேசியத் தலைவர் போராட்டத்தைத் தொடங்கினார். அவ்வேளை நீங்கள் தான் அவரிற்கு உத்வேகம் கொடுத்து ஆதரித்து போராட்டத்திற்கு வலுச்சேர்த்து உங்கள் பிள்ளைகளை போராட்டத்தில் இணைத்து எமது அமைப்பை வளரச் செய்தீர்கள்.

நாம் காலங்காலமாக வாழ்ந்த மண்ணில் சுதந்திரமாக வாழத் தான் ஆசைப்பட்டோம். அது தவறா? உலகத்தில் வாழும் மக்களில் எமது தமிழ் இன மக்களின் உயிர் உயிரில்லையா? எவ்வளவோ நாடுகள் சுதந்திரம் அடைந்ததற்கு காரணமாக இருந்த உலக நாடுகள் எமது தமிழினத்தை மட்டும் சிங்களதேசம் அழிக்கவிட்டு வேடிக்கை பார்ப்பதன் காரணம் தான் எனக்குப் புரியவில்லை.

**அன்புக்குரிய மக்களே!**

எமக்காக தமிழகத்தில் இருக்கும் மக்களும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கும் மக்களும், உங்களின் விடிவிற்காக தீக்குளிப்புக்களிலும் பலவகையான அகிம்சைப் போராட்டங்களையும் நடத்தி வருவது உங்களிற்கு தெரிந்ததே. அவர்களால் வெளியே இருந்து செய்யக் கூடியதை செய்கின்றார்கள். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களை போராட்டத்தில் இணைத்து உங்கள் விடிவிற்கான இறுதிப் போரில் போராட வேண்டும்.

தேசியத்தலைவரின் கைகளைப் பலப்படுத்த வேண்டும். அன்புக்குரிய மக்களே எதிரியானவன் பல்வேறு சூழ்ச்சிகள் செய்து அதாவது படிப்படியாக உங்களை உங்களது இடங்களில் இருந்து இடம்பெயர வைத்து உணவுத்தடை, மருந்துத்தடை போட்டு உங்களின் மேல் குண்டுமழை பொழிந்து தினம் சாவுக்குள் வாழவைத்து, பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதற்குள் உங்களை விட்டு குண்டுமழை பொழிந்து உங்கள் உறவுகளை கொன்று உங்களை தனது திறந்த சிறைச்சாலைக்கு வரச்செய்கின்றான். ஏன் தெரியுமா? யூத இனத்தை கிட்லர் பல வதை முகாம்களை அமைத்து யூத இனத்தை அழித்தது போல் மகிந்தவும் உங்களை அழிக்கப் போகின்றான்.

அது தெரியாமல் நீங்கள் அதற்குள் அகப்படக்கூடாது. கோத்தபாய இராணுவத்திற்கு கூறியிருப்பது தெரியுமா? தமிழரில் பெண்கள் உங்களுக்கு ஆண்கள் கடலிற்கு என்று. அதனடிப் படையில் இங்கிருந்த எத்தனை பெண்கள் கற்பழிக்கப்பட்டு இராணுவ மருத்துவமனைகளில் இராணுவத்தை பராமரிப்பதற்கு விடப்பட்டுள்ளார்கள் என்று தெரியுமா. இதை விட எவ்வளவோ கொடும் செயல்கள் வெளியே தெரியா வண்ணம் உள்ளது.

**அன்புக்குரிய மக்களே**

எமக்கு இந்த இழிவுநிலை தேவையா? நிச்சியமாக இதை நீங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். ஏனென்றால் அதற்காக தான் நீங்கள் போராடி வருகின்றீர்கள். அதற்காக 24,000 மேற்பட்ட மாவீரர்களை அர்ப்பணித்திருக்கின்றீர்கள். இவர்கள் யார் போராளிகளாக பிறந்தவர்களா இல்லை. காலம் தான் போராளிகளாக்கியது.

போராளிகள் பிறப்பதில்லை அவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். யார் உருவாக்கியது. சிங்கள தேசம் எமக்குரியதை தந்திருந்தால் எமது தேசியத்தலைவர் ஆயுதமேந்த தேவை ஏற்பட்டிருக்காது.

**அன்புக்குரிய மக்களே**

நாம் விரும்பியோ விரும்பாமலோ எம்மை போராட சிங்கள

தேசம் பணித்துவிட்டது. 30 வருடங்களாக போராடி உங்க ளது இறுதி இலட்சியமாம் தமிழீழத்தை அடையும் நேரம் வந்திருக்கும் வேளை நீங்கள் போராட்டத்தை விடப்போ கின்றீர் களா? உங்கள் விடிவிற்காக நீங்கள்தான் போராட வேண் டும். நீங்கள் போராடாவிட்டால் உங்களுக்காக யார் போராடுவது? If we don't fight for our freedom who else will?வன்னியில் இருக்கும் 2,50000 பேரில் 50,000 பேர் போராட வலுவில்லாமலா இருக்கிறீர்கள்? சிந்தித்து பாருங்கள் 50,000 இளைஞர் யுவதிகள் போராட்டத்தில் இணைந்து போராடினால் சிங்கள இராணுவம் வந்த இடம் தெரியாமல் பறந்திடும்.

அன்புக்குரிய தம்பி, தங்கை அக்கா அண்ணா உறவுகளே

போராட்டத்திற்கு வயதெல்லை கிடையாது. வயது பார்த்தா இராணுவம் உங்களை கொல்கின்றது. 1990ம் ஆண்டு 14 வயதில் நான் போராட புறப்பட்டேன். காரணம் இடப்பெயர்வு பாடசாலை இல்லை. நாம் நிம்மதியாக வாழ எமக்கென்று ஒரு தேசம் வேண்டுமென்பதால் நீங்களும் அதேபோல்தான் நினைப்பீர்கள்.

உங்களது வலியை நேரில் தினம் தினம் கண்டு மனம் வெதும்பி குமுறுவதுபோல் இன்னொன்றையும் நினைத்து குமுறுகிறது. நீங்கள் தாங்குகின்ற வலியை உங்களது வயதில் நான் தாங்கவில்லை. அப்படியிருந்தும் என்னைப் போராட உந்தியது. ஆனால் நீங்கள் எவ்வளவோ வலியை ஏற்படுத்திய சிங்கள இராணுவத்திற்கு எதிராக போராட ஏன் இன்னும் கிளர்ந்தெழாமல் இருக்கின்றீர்கள் என்பதை நினைக்க நினைக்க மனம் வெதும்புகின்றது.

சிங்கள இராணுவம் ஏற்படுத்திய வலி காணாதா? இன்னும் வலியை ஏற்படுத்தினால் தான் நீங்கள் போராடுவீங்களா?

**அன்புக்குரிய மக்களே**

எமது தேசியத்தலைவர் காலத்தில் நீங்கள் சுதந்திரம் அடை யாவிட்டால் ஒரு காலமும் நீங்கள் சுதந்திரமாக வாழமாட்டீர் கள் என்பதை தெளிவாக புரிந்துகொள்ள வேண் டும். தமிழீ ழ தேசியத்தலைவர் கூறியது போல் ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென் றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சி கொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டமாக தேசியப் போராட்டமாக முழு மையும் முதிர்ச்சியும் பெறுகின்றது.

அப்பொழுதுதான் விடுதலையும் சாத்தியமாகின்றது. "கேளு ங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்" கேட்டோம் தந்தார் களா? இல்லை என்னத்தை தந்தார்கள் தாங்கொணா வலியை தந்தார்கள். அதன்பின்னர் என்ன செய்யவேண் டும் தட்டுங்கள் நிச்சியமாக திறக்கப்படும்.



**அன்புக்குரிய மக்களே**

எல்லோரும் சேர்ந்து ஆயுதம் ஏந்தி விசைவில்லை தட்டுங் கள் நிச்சியமாக சுதந்திரம் கிடைக்கும்.

**அன்புக்குரிய மக்களே**

தமிழரிற்கு இருந்த போர்க்குணம் குன்றிவிட்டதா இல்லை. அதை நீங்கள் இன்னும் வெளிக்காட்டவில்லை. அந்தத் தருணம் வந்துவிட்டது. நான் யார்? நாங்கள் யார்? உங்களது பிள்ளைகள் நீங்கள் வளர்த்துவிட்டவர்கள் நாங் கள் வெளிநாடுகளில் இருந்து வந்து போராடவில்லை.
எனவே

**அன்புக்குரிய தாய்மாரே தந்தைமாரே**

எனது குடும்பத்தில் ஒரு மாவீரர் எனது குடும்பத்தில் இரு மாவீரர் என பார்க்காதீர்கள். போராட வலுவுள்ள உங்களது பிள்ளைகளை நீங்கள்தான் அனுப்பி வைக்கவேண்டும். அப்பொழுதுதான் இளஞ்சந்ததிக்கு சுதந்திரமான வாழ்க் கையை அமைத்துக் கொடுக்கலாம். எமக்கென்று ஒரு தேசிய இராணுவத்தை கட்டி எழுப்புங்கள்.

இந்தப் பூமிப்பந்திலே இருப்பை, பலம் தான் தீர்மானிக்கின் றது. வலிந்தவன் பிழைப்பான் என்ற தத்துவத்திற்கேற்ப எல்லோரும் சேர்ந்து தேசியத்தலைவரின் கையை பலப்படுத்துங்கள். எம்மிடம் தேவையான ஆயுதம் உள்ளது. மிகுதி எதிரியிடம் உள்ளது. எமக்கு தேவையானது எல்லாம் ஆளணி ஒன்றுதான்.

பல மடங்கு கொண்ட ஆளணியையும் உலக நாடுகள் வழங்கும் இராணுவ தளபாடங்களையும் கொண்டுள்ள சிங்கள இராணுவத்திற்கு எதிராக குறைந்த ஆளணியை வைத்து இரண்டு வருடத்திற்கு மேலாக நாம் போராடுகின்றோம் என்றால் யாரிற்கு வெற்றி நீங்கள் நினைத்துப்பார்த்தீர்களா?

நாங்கள் அழிவது போல் சிங்கள தேசமும் அழிந்துகொண்டு தான் இருக்கின்றது பொருளாதாரத்தில், இந்தத் தருணம் நீங்கள் திரண்டெழுந்து ஓங்கி ஒரு அடி அடித்தால் எழும்ப முடியாமல் சிங்களம் நொருங்கும்.

**அன்புக்குரிய இளைஞர் யுவதிகளே**

உங்களிற்கு உங்களது பெற்றோரை பார்க்கும் பொறுப்பு இருக்கு என்பது தெரியும் தாய் தந்தைமாரை காப்பாற்ற வேண்டும் என்றால் தாய்நாட்டை காப்பாற்றினால் தான் முடியும். இது கற்பனையல்ல இதுதான் நிஜம். நாம் எவ்வளவு காலம் சாவிற்குள் வாழ்வது? தினம் தினம செய்தியில் சிங்கள இராணுவத்தின் எறிகணை வீச்சில் விமானத் தாக்குதலில் இத்தனைபேர் படுகொலை செய்யப்பட்டு காயப்பட்டுள்ளனர் என்பதை தான் கேட்கின்றோம், பார்க்கின்றோம்.

இவர்களில் அரைவாசிப்பேர் போராட வலுவுள்ளவர்களாகத் தான் இருக்கின்றார்கள். அந்த வயதில் இவர்கள் ஏன் அநியாயமாக சாகவேண்டும். செத்தவர்கள் வீதியோரங் களிலும் காணிகளிலும் புதைக்கப்படுகின்றார்கள்.

ஏன் இந்த அவலம். இவர்கள் எல்லாம் எமது அமைப்பில் இணைந்து ஆயுதம் ஏந்தி இராணுவத்தை கொன்று வீரச்சாவு அடைந்தால் தமிழன் வீரத்தோடு வாழ்ந்தான் அல்லது வீரத்தோடு மடிந்தான் என்று வரலாறு சொல்லும்.

**அன்புக்குரிய மக்களே**

சுதந்திரத்திற்கான காலம் கனிந்துகொண்டிருக்கின்றது. வெண்ணை திரண்டுவரும்பொழுது பானையை போட்டு உடைத்துவிடாதீர்கள். ஒவ்வொருவரும் தன்நம்பிக்கையாக இருங்கள். உங்களது இன்னல்கள் வலியை கண்டுதான் தலைவர் போராட்டத்தை தொடங்கினார்.

உங்களிற்கு ஏற்படும் வலியைக் கண்டு அவரது மனம் அப்பொழுதிலிருந்து இப்பொழுதுவரை குமுறிக்கொண்டு தான் இருக்கிறது. அதில் எள்ளளவும் குறையவில்லை. நாங்கள் (மாவீரர்கள்) திரும்பத் திரும்ப உங்களிடம் கேட்பது எல்லாம் தலைவரை பாதுகாருங்கள். அவரின் கையை பலப்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகளை போராட விடுங்கள். தலைவர் நிச்சியமாக உங்களிற்கு சுதந்திரம் பெற்றுத்தருவார்.

எமக்கும் சிங்கள இராணுவத்திற்கும் தான் யுத்தம் சிங்கள மக்களுக்கல்ல. ஆனால் இராணுவமோ எமது மக்களை குண்டு வீசி கொல்கின்றது. எமக்கும் சிங்கள மக்களை கொல்ல முடியும். சிங்கள மக்கள் இதை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் நாம் அப்படிச் செய்யவில்லை.

நாம் தலைவரை சந்தித்து குண்டு போடப்போகும் பொழுது திரும்பத் திரும்ப வலியுறுத்துவது மக்கள் மீதோ மருத்துவமனைகள் மீதோ தவறியும் குண்டு போடாதீர்கள் என்று.

ஆனால் சிங்கள வான் கழுகுகள் எமது மக்களையும் மருத்துவமனைகளையும் தேடித் தேடி குண்டு போடுகின்றது. நாம் சிங்கள தேச மக்களுக்கு ஒன்றை தெளிவாக சொல்ல விரும்புகின்றோம். தமிழினத்தை அழித்துவிட்டு நீங்கள் நிம்மதியாக வாழலாம் என்று கனவு காணாதீர்கள்.

எமது தலைவிதியை நாமே தீர்மானித்து உங்களுடன் ஒற்றுமையாக வாழத்தான் நாங்கள் விரும்புகின்றோம். இதைத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம். நாம் எமது மண்ணில் சுதந்திரமாக வாழத்தான் ஆசைப்படுகின்றோம்.

**அன்புக்குரிய வன்னிவாழ் மக்களே**

நாம் சிங்கத்தின் குகைக்குள் வெடி சுமந்து போகின்றோம். நாம் யார், தமிழன் யார் எனக் காட்டுவோம். நான் எப்பொழுதும் அநியாயமாக சாவதை விரும்பியதில்லை. அந்தவகையில் நான் மாவீரனாக அதிலும் கரும்புலி வீரனாக எனது தாய்நாட்டிற்கும், மக்களிற்கும் பெருமை சேர்ப்பதை நினைத்து நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திலீபன் அண்ணை கூறியது போல்

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் அமையும்”

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் தமிழரின் தாகமும் அதுதான்”

இப்படிக்கு,
தம்பி, அண்ணா, மகன், போராளி
இ.ரூபன்.



# வலியின் வழி

*பிறப்பில் முதல் வலி.*
*தமிழனாய்ப் பிறந்தது அடுத்த வலி*
*1956 இல் தொடங்கிய வலி*
*58, 61, 77, 83 என தொடரும் வலி*
*ஊரைவிட்டு*
*உறவை விட்டு*
*நாட்டை விட்டு*
*அகதியாய்*
*இடம்பெயர்ந்த வலி.*
*கூட்டைவிட்டு*
*கூலிக்காய் கலைத்த வலி*
*சேனநாயக்க முதல்*
*மகிந்த ஐயா வரை*
*மலிவாய்க் கிடைக்கும் வலி*
*மழை*
*வெய்யில்*
*பனி என இயற்கை வலி*
*நின்மதியாய்*
*உண்டு*
*உறங்க*
*பிணியின் வலி.*
*நிவாரணத்திற்காய் சங்கத்தில் தூங்கும் வலி*
*பட்டினியில் பிள்ளையின் வலி*
*படுக்கையில் பாம்பின் வலி*
*வீதியில் வாகனத்தின் வலி*
*தொழிலை இழந்த வலி*
*கிபீரின் இரைசல் வலி*
*நித்தம் எறிகணைகளின் ஓசை வலி*



........................

*தொடரும் மக்கள் வலிகள்!*
*இத்தனைக்குள்ளும்*
*வலியின் வலியை*
*உடைக்கும் வழி*
*பலம் கொண்டு*
*ஈழத்தில் ஒன்றாவோம்.*
*திறன் கொண்டு*
*பாரினில் வாழ்வோம்.*



**- தெ.றஞ்சித்குமார்**



# வீறு -15

– தமிழ்க்கவி

தன் கையிலிருந்த குறுவாளை எடுத்து அருகிலிருந்த பந்தத்தின் வெளிச்சத்தில் பார்த்த இருளன் திகைத்துப் போனான் எனினும் அதையும் அப்படியும், இப்படியுமாக அசைத்துப் பார்த்தான். புரட்டி அதன் மீதிருந்த இலச்சனையை மறுபடியும் ஆராய்ந்தவன் "சந்தேகமேயில்லை"

என முணுமுணுத்தான். "என்ன இருளா! குறுவாளை இப்போது தான் கண்டது போலப் பேசுகிறாய்."

"ஆமாம் இப்போது தான் பார்க்கின்றேன்."

என்றவன். முன்னும் பின்னுமாக நடந்தவாறே சிந்தித்தான். பின்னர் ஏதோ நினைவுக்கு வந்தவனாக "மேகா! எங்கே உன்னடைய குறுவாளை எடு" என்றான்.

மேகன் தனது குறுவாளை உறையிலிருந்து எடுத்துக் கொடுத்தான். அதை வாங்கிய இருளன் தன் கையிலிருந்த குறுவாளை ஒப்பிட்டுப் பார்த்தான்.

"மேகா இங்கே வா இதில் எது உனது வாள்" என்றும் கேட்டான். ஏன் இப்படிக் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளாமலே.. வெளிச்சத்தை நெருங்கிய மேகன் இரு குறுவாள்களையும் பார்த்து விழித்தான். அளவில் கைப்பிடியில் அதன் மீது பொறித்துள்ள முத்திரையிலும் கூட எதுவித வேறுபாடும் தென்படவில்லை.

திருதிருவென விழித்த மேகன் இன்னமும் நெருங்கி அவற்றைத் தொட்டுப்பார்த்தான். "என்ன ஆச்சரியம்"

"இதில் ஆச்சரியம் என்ன? மேகா இன்னும் எத்தனை பேரிடம் இது போன்ற குறுவாள்கள் இருக்கும்."

"அடடா நான் அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லையே" என்றவன் கண்களை ஒரு தடைவ சிமிட்டி விட்டுச் சொன்னான். நாகதேவன் மகன் இருளன், மேகன் இன்னும் மண்ணாற்றுக்கு அதிபதியாகி விட்ட இளங்குமரனுக்கு இதே போன்றதொரு குறுவாள் உண்டு.

இருளன் தன்னுடைய இடையிலிருந்த குறுவாளையும் ஒருபுறம் எடுத்துவைத்தான். சற்றுநேரம் மூன்றையும் பார்த்த இருளன் மேகனிடம் அவனது குறுவாளைக் கொடுத்தான். தனது வாளை இடையில் சொருகிக் கொண்டு மற்றதைக் கையில் எடுத்தவன்,

"சரி மேகா நான் போகின்றேன். நீ உறங்கச்செல்" என்றபடி புறப்பட்டான்.

இருளனின் மனம் எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை. அவனுடைய குழம்பிய மனதில் ஒருபுறம் தெளிவு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணப் பேரரசின் முன் எழுந்து வரும் சதிமுயற்சிகளும், அந்நியரின் ஊடுருவல்களும் கட்டு மீறி விட்டதாகவே அவன் கருதினான்.

ஊர்காவற்றுறை மன்னர் வன்னியர்தான். இவரும் மண்ணாறின் மன்னன் இளங்குமரனும் வெள்ளைத்தோல் போர்த்த புதிய மனிதர்களுடன் குருதியின் நிறத்தில் மதுவையும், மாமிசத்தையும் அருந்தி தலைகால் தெரியாமல் புசத்தியதை அவன் ஒருதடவை ஊர்காவற்றுறைக்குப் போனபோது கண்டிருந்தான். ஆயினும் நெடுந்தீவு, ஊர்காவற்றுறையின் ஆளுகைக் குட்பட்டது. அதைப்பற்றி இருளன் பேசுவது விசுவாசமாகாது. இன்னமும் நெடுந்தீவின் அதிபதி இதுபற்றி என்ன முடிவை எடுப்பான். என்பதும் தெரியவில்லை. இந்தக்குறுவாள் யாருடையது என்பதை அறியாமல் எதுவும் கூற முடியாது.

அவனுக்கென்றிருந்த அந்தச் சிறிய குடிலில் உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த இருளனின் நினைவில் அன்றைய சம்பவங்கள் திரும்பத் திரும்ப நினைவில் வந்தன. செல்லியின் அந்தக் கன்னங்கரு விழிகளின் காந்தமல்லவா அவனை அங்கு கொண்டு சென்றது. குழந்தைத்தனமான அவள் பேச்சுக்களும் அவன் மனதை அலைக்கழித்தன. இந்த நாட்டின் பிரச்சினைகள் மட்டும் இல்லையெனில் அவள் எப்போதோ அவன் மனைவியாகி விட்டிருப்பாள். அவளுடைய எண்ணங்கள் தந்த சுகத்தில் அவன் உறங்கிப் போனான்.

அதிகாலையாவதற்குள் அல்லோலகல்லோலப்பட்டது நெடுந்தீவுக்கரை. யாரோ புதியவன் ஒருவன் படுகாயப்பட்டுக் கிடந்தான். அவனைக் காப்பாற்றும் முயற்சியில் சிலர் ஈடுபட்ட போது அவன் தான் இந்த நாட்டு வாசியல்ல என்று

கூறித்தன்னைப் படகில் ஏற்றி மண்ணாற்றுக்கு அனுப்பு மாறு கேட்டிருக்கிறான். ஆயினும் தண்டநாயகன் கலந்து கொள்ளாமால் அப்படிச் செய்யமுடியாது என்ற காவலர்கள் அவனை அவ்வூர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார் கள்.

காலையில் இந்தச் செய்தியைச் செல்லிதான் கொண்டு வந்தாள். மச்சானிடம் உள்ள அன்பு மட்டுமல்ல நேற்று நடந்த சம்பவங்களின் நிரலையும் அறிந்வளாகையால் அவளுக்கு இருளனிடம் சில செய்திகள் கூற வேண்டியி ருந்தது.

இரவெல்லாம் கனவில் செல்லியுடன் சல்லாபித்துக் கொண் டே உறங்கிய இருளன் தன்னை இவ்வளவு மூர்க்கமாகத் தட்டியெழுப்பிய செல்லியைக் கனவில் காண்பதாகவே எண்ணி அவளை எட்டி இழுத்துத் தன்னுடன் இறுக்கினான். அந்த இரும்புக் கரங்களுள் சிக்கித்திணறிய போதும் தன்னை விடுவிக்க முயலாத செல்லி அவன் தோள்மீது தன் முல்லைமொட்டுப் போன்ற பற்களால் கடித்தாள். கடியின் வேகத்தில் சுரணை வரப்பெற்ற இருளன்.. செல்லியின் மூச்சுக்காற்று தன் மீது படர்வதை உணர்ந்து தன் கைகளைத் தளரவிட்டான்.

“ம்..” என்ற சிறு முனகலுடன் எழுந்து உட்காந்தாள் செல்லி “என்ன செல்லி இந்த நேரத்தில்?”

“ஏன் உங்களைத் தேடிவரக் கூடாதா?”

“நான் அப்படிச் சொன்னேனா..?”

“ம்.. நீங்கள் இங்கே உறங்கிக் கொண்டிருக்கின்றீர்கள் அங்கே கரையில் அவன் பிடிபட்டு விட்டான்”

“யார்?”

“யாரா..? நன்றாக இருக்கிறது இரவு என்னைத் தொடர்ந்து வந்தவன்.

“அட ஆமாம் அதை அறியமுன் உனக்கு ஏதாவது நடந்து விட்டதோ என அறியத்தான் வீட்டுக்கு வந்தேன். நீ வீட்டிலிருந்தாய்.. ம்... அப்புறம் ... நீ எப்படித் தப்பினாய்.”

“இருளா எனக்கு வேறு வழியில்லை. நான் ஆங்காங்கே பதுங்குவது போலப் பாவனை செய்தாலும் அவன் என்னைப் பிடித்து விட்டான்.”

“ம்... அப்புறம்...” அவன் சாதாரணமாகக் கேட்டான்.

“என்ன அப்புறம்” உனக்குப் பதற்றம் ஏற்படவில்லையா?

“ஏன் பதற்றம் உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா...? அவனுக்கு சேதம் எவ்வளவு?”

“போக இருளா.. எனப் பொரிந்தவள். லேசாக ஊனப்படுத்தி விட்டேன்.? என்றாள்.

“அடக்கடவுளே... என்று பதறியவன் இப்போ எங்கேயாவது யாரிடமாவது அகப்பட்டுத் தொலையப் போகிறானே எங்கே நடந்தது?” இருளன் தன் குறுவாளுடன் கூடிய இடைக்கச் சையைக் கட்டியவாறே வா தேடலாம் என்றபடி புறப்பட்டான்.”

“அய்யோ இருளா அவன் அகப்பட்டு விட்டான் அதைச் சொல்லத்தான் ஓடிவந்தேன்.” என்றாள்.

“அவன் யார் தெரியுமா?”

“ஊகும்..”

சற்று யோசித்த பின்னும் இருளன் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்த செல்லி “இருளா அவனை நமது வைத்தியர் வீட்டில் விட்டிருக்கிறார்கள்.” என்றாள்.

இருள் நன்கு விலகியிருந்த நேரத்தில் வெறுவனே அரைக்குந்துகளும் பனை மட்டைகளால் இறுக்கி வரியப் பட்டிருந்த மேல் மறைப்புகளுமாக தென்னை மட்டைகளா லும், பனையோலைகளாலும் வேயப்பட்ட கூம்புவடிவக் குடில்கள் அடர்த்தியான பனைகளின் கீழ் அடுக்கடுக்காக அமைந்திருந்தது. அக்கிராமத்தின் எல்லைப்புறத்தே அமைந் ததும், புல்வேயப்பட்டதுமான வைத்தியர் சம்புநாதனின் குடிசை வாசலில் அரச காவலர்கள் இருவர் நின்றனர். இருளனைக் கண்டதும் எழுந்து பனிந்தவர்கள் ஒதுங்கி நின்றனர்.

“நீங்கள் போகலாம்” என்ற இருளன் வைத்தியரின் வாயி லைத் திறந்து உள்நுழைந்தான். உடலை முறுக்கிக் கொண்டு முக்கலும், முனகலுமாகக் கிடந்தவனையும், வைத் தியரையும் மாறிமாறிப் பார்த்த இருளன் அங்கு படுத்திருந்த வனை திருப்பினான். இருளனின் சர்வநாடியும் ஒடுங்கி அச்சத்தில் உறைந்து போனான்.

நீயா...?



தொடரும்....



# நேர்காணல்



முன்னாள்

இலங்கை

உயர் நீதிமன்ற

சட்டத்தரணியும்,

யாழ்ப்பாணப்

பல்கலைக்கழக

விரிவுரையாளருமான

## திரு.பொன்.பூலோகசிங்கம்

(B.Dev.S.(Hons) Cey : LL.B (Srilanka)

நேர்கண்டவர் :— தெ.றஞ்சித்குமார்

**உங்களுடைய சேவை பன்முகத்தன்மை வாய்ந்த வை யாக இருக்கின்றன அவை பற்றிக் கூறமுடியுமா?**

நான் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி யில் கல்விகற்றேன். அந்தக்காலகட்டத்தில் அங்கு வெளி யான "இள ஞாயிறு" என்ற சஞ்சிகையின் ஆங்கிலப் பதிப் பின் பிரதம ஆசிரியராக இருந்தேன். அவ்வாறு கல்விகற்றுக் கொண்டிருந்த காலகட்டத்திலே உதயதாரகை பத்திரிகையில் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் அரசியல் விமர்சனக் கட்டுரைகள் எழுதினேன். இதன் பின்னர் நான் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு உயர்கல்வி கற்பதற்காகச் சென் றேன். அவ்வாறு கல்வி கற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் காலஞ்சென்ற கோவை மகேசன் அவர்களின் தொடர்பு எனக்குக்கிடைத்தது. இதனால் சுதந்திரன் பத்திரிகையிலும் அரசியல் கட்டுரைகளை எழுதினேன் அதன் பின்னர் அதன் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். இதன் பின்னர் நான் சட்டக்கல்வி பயின்று சட்டத்தரணியானேன். இதன்பின் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை, மல்லாகம் ஆகிய நீதி மன்றங்களில் ஏக காலத்தில் பதில் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டேன். இதே காலப்பகுதியில் யாழ்ப்பாண பல்க லைக்கழகத்தில் சட்ட விரிவுரையாளராக 18வருடங்கள் கடமையாற்றினேன். இன்று எனது செயற்பாடுகள் அங்கே முடக்கப்பட்டமையால் யாழ்ப்பாணக் குடாநாட்டைவிட்டு வெளியேறி தற்போது எனக்குப் பாதுகாப்பான இடத்தில் இருந்து எழுத்துப்பணிகளை செய்து வருகின்றேன்.

**நீங்கள் ஆரம்பத்திலிருந்தே மனித உரிமைகள் சட்டவாதியாக இருந்து வந்திருக்கிறீர்கள். மனித உரிமைகள் பற்றிய உங்கள் செயற்படுகளை விளக்கமுடியுமா?**

தமிழ்த் தேசிய வாதத்தில் மிகுந்த நம்பிக்கையுடையோன். தமிழ்த்தேசிய வாதமே ஈழத்தமிழர் வாழ்வின் ஆதாரமாகும். இதன் அடிப்படையில் தமிழ்த்தேசிய வாதத்திற்கு எதிராக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோதெல்லாம் அவற்றைச் சிதைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் எல்லாம் அவ்வப்போது கண்டித்து வந்தபோதும் தமிழ்த்தேசியவாத செயற்பாட்டாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறை களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வாதாடி அவர்களை விடுத லை செய்திருக்கின்றேன். உதாரணத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் மீதான வழக்கு, பல்கலைக்கழக மாணவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்ட கெடுபிடிகள் வழக்கு, 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் அரசியல் பணிகளுக்காக யாழ்ப்பாணம் வந்த தமிழ்ப் போராளிகள் மீதான கெடுபிடி வழக்குகள் இவை எல்லாவற்றிலும் மனித உரிமைகளையும் நீதியையும் நிலைநாட்ட வாதாடி இருக்கின் றேன்.

**நீங்கள் ஊடகவியலாளன் என்ற முறையில் உங்களு டைய ஊடகப் பணிகள்பற்றி சொல்லுங்கள்?**

ஆரம்பத்தில் சுதந்திரன் பத்திரிகையில் துணை ஆசிரியராகச் சேர்ந்தேன். இதே காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சற்றடே றிவியூ (Supreme Power) என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆவணப்பிரிவிலும் கடமையாற்றி னேன். இதேகாலகட்டத்தில் சிரித்திரன், புதிய உலகம், சுடர், போன்ற சஞ்சிகைகளிலும் எழுதிவந்தேன் இதன் பின்னர் இந்திய இராணுவ காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வெளி வந்த திசை பத்திரிகையிலும் கட்டுரைகள் எழுதினேன். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு, உதயன், முர



சொலி, போன்ற பத்திரிகைகளிலும் அரசியல் கட்டுரைகளை எழுதிவந்தேன். 1987 இல் ஈழமுரசு, 1990களில் ஈழநாதம், 2002இல் நமது ஈழநாடு, ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றி இருக்கின்றேன். இதைவிட 1983 தொடக்கம் 1985 வரை உள்ள காலகட்டத்தில் கருத்து சுதந்திரம் தமிழ் மக்களுக்கு மிக மோசமாக மறுக்கப் பட்டபோது தமிழின விடுதலை என்ற வாராந்தப் பத்திரிகை யை வெளியிட்டு மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங் களை வெளிக் கொண்டுவந்தேன். இவற்றைவிட வானொலி, தொலைக்காட்சி இணையத்தளம் என்பவற்றிலும் பணி யாற்றியிருக்கின்றேன். தற்போது புலம்பெயர்ந்த நாடுகளில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தமிழர் களின் நியாயங்களை எழுதிவருகின்றேன்.

**தற்போது சிறிலங்காவில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், உச்ச உயர் நீதிமன்றத்திற்கும் இடையில் எரிபொருள் தொடர்பான பிணக்கு தீவிரம் பெற்றுள்ளது. இது தொடர்பாக என்ன சொல்கிறீர்கள்?**

ஒரு நாட்டின் அரசியல் சட்டம் தான் தாய்ச்சட்டமாகும். அந்த மூலச்சட்டத்திலிருந்து தான் எல்லாச்சட்டங்களும் ஊற்றெடுக் கின்றன. ஊற்றெடுக்கும் எல்லாச்சட்டங்களும் தாய்ச்சட்டத் தோடு முரண்படக்கூடாது. சிறிலங்காவில் தற்போது நடை முறையில் இருக்கும் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு தன்னுடைய இறைமையை நான்கு நிறுவனங்களுக்கூடாக பிரயோகிப்பதற்கு உரிய சட்ட விதிகளையும் அதற்கான பொருள் கோடல்களையும் கொண்டிருக்கின்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, சட்டவாக்கு அதிகாரம் கொண்ட




பாராளுமன்றம் சுயாதீனமுடைய உயர் நீதிமன்றம், பொதுசன வாக்கெடுப்பு ஊடான மக்கள் மன்றத்தின் முடிவு கள் என நான்கு நிறுவனங்களுக்கு இந்த இறைமை பகிர்ந்த ளிக்கப்பட்டுள்ளது. இலங்கை உயர்நீதிமன்றத்தின் எரிபொ ருள் தொடர்பான முடிவை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியோ, சட்டவாக்கு அதிகாரம் கொண்ட பாரளுமன் றோ ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள் என்றால் அதன் அர்த்தம் சட்டவாட்சித் தத்துவம் சிறிலங்காவில் தோல்வி கண்டுவிட்டது. அதாவது சட்டவாட்சித் தத்துவம் என்பது எந்தவொரு தனி மனிதனும் சட்டத்திற்கு மேம்பட்டவன் அல்ல. சட்டவாட்சித் தத்துவத்தின் இந்தப் புனிதமான கோட் பாட்டை நிலை நாட்டுவதற்கு மீயுயர் (Supreme Power) அதிகாரம் கொண்ட சிறிலங்காவின் உச்ச உயர் நீதிமன்றம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஊடாக நீயாயதிக்கம் உடை யாதாகும். அதை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதி மறுப்பாராக இருந்தால் அவர் சர்வாதிகாரப் பாதையில் செயல்பட கொடிகாட்டிவிட்டார் என்பதே அதன் அர்த்தமாகும். இது பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முசாராப் பாகிஸ்தானின் உயர் நீதிமன்றின் நீதிபதிகளை அலட்சியம் செய்து சிறையில் அடைத்த செயலுக்கு ஒப்பானது. முஷாரப்பின் ஆட்சியில் அழிவின் ஆரம்பம் அங்கு தான் தொடங்கியது. இங்கும் சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலப் படுகிறதா? என்ற கேள்வி ஏற்படுவது தவிர்க்க முடியாத தாகும்.

**இன்று வன்னி மக்கள் எதிர்நோக்கியுள்ள பேரவலமம் பற்றி உங்களுடைய கணிப்பீடு எவ்வாறு உள்ளது?**

இன்று வன்னி மக்கள் எதிர்நோக்கியுள்ள அவலம், எனது 38 வருட பொதுவாழ்வில் நான் ஒருபோதும் கண்டிராத பேர் இடர் நிறைந்த பேரவலமாகும். இது பல பரிமாணங்களைக் கொண்டது. வன்னியில் இருக்கின்ற 4 இலட்சம் மக்களும் இன்று தமது உயிர் வாழ்வதற்கான (Survival) ஜீவ மரணப் போராட்டத்தை நடாத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அவர் கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நூற்றிற்கும் மேற்பட்ட கிராமங்களைவிட்டு வெளியேறி மிகக் குறைந்தளவான நிலப்பரப்பில் வாழும் நிலைக்கு உள்ளாகி உள்ளார்கள். இங்கு அவர்கள் எதிர்நோக்குகின்ற முதல் நெருக்கடி அவர்களுடைய இருப்பிடம் தொடர்பானது. அடுத்ததாக அவர்கள் சுயவிருத்திப் பொருளாதாரத்தை முற்றாகவே இழந்து நிவாரண உதவிகளில் தங்கிவாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தொழில் இல்லை, எந்தவித வருமா னங்களும் இல்லை, சுகாதார சீர்கேடுகள், குடிநீர்ப்பிரச்சி னைகள், மருத்துவவசதிகள் மறுக்கப்பட்ட நிலை, மருந்துப் பொருட்களுக்கு பெருந்தட்டுப்பாடு, விலைவாசி ஏற்றம், பணப்புளக்கமில்லை, தொற்று நோய்களின் ஆபத்து, முழு மையான வைத்திய வசதிகள் இல்லை, பாடசாலைகள் இடம் பெயர்ந்திருக்கின்றன, பாடசாலை காணிகளுக்குள் வெள்ள த்தின் மத்தியில் வெள்ளைச்சீருடைகள் அழுக்கேறிய நிலையில் கல்வி கற்கும் அவல நிலைமை, ஒரு பாடசாலை வளாகத்தில் இடம்பெயர்ந்த பல பாடசாலைகள் இயங்கும் துர்ப்பாக்கிய நிலைமை, எரிபொருள் தடைகாரணமாக எரிபொருள் விலை ஏற்றம் பெரும் போக்குவரத்து நெருக் கடிகளை ஏற்படுத்தியிருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் வன்னிப் பெருநிலப்பரப்பில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்ந்த மக்கள் தமது முகவரிகளை இழந்ததோடு ஒரு சாதாரண மனிதனுக்குத் தேவையான சகல விதமான ஜீவா தார தேவைப்பாடுகளையும் முற்று முழுதாகவே இழந்து நிற்கின்றார்கள். இனி இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையில் ஏக்கத்துடன் வாழும் இம்மக்கள் மீதுதான் பேரினவாதிகள் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் களையும், கொடிய எறிகணை வீச்சுக்களையும், துப்பாக்கிச் சூடுகளையும் மேற்கொண்டுள்ளார்கள். இவர்களை பேரின வாதம் ஒரு புறத்தில் கொடுமைப்படுத்துகிறது. பெரும் வெள்ளமும், இயற்கை அனர்த்தங்களும் பெரும் துயரங் களை உருவாக்கிவிட்டுள்ளன. ஆனாலும் அவர்கள் மத்தி யில் நம்பிக்கையும், விடா முயற்சியும் அற்றுப்போகவில்லை. அவர்களுடைய பலம் முழுவதுவுமே எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையில் தான் இழையோடி நிற்கின்றது.

**உங்களுடைய இலக்கியப் பணி பற்றி குறிப்பிட முடியுமா?**

நான் மிக இளம்வயது தொடக்கம் இலங்கையில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பல இலக்கிய விடயங்களை எழுதி வந்திருக்கின்றேன். ஆரம்பத்தில் சுடர் சஞ்சிகை தொட்டு கலைபண்பாட்டுக்கழகத்தின் வெளிச்சம், புள்ளி சஞ்சிகை வரை முன்னூறுக்கும் மேற்பட்ட எனது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. ஈழத்தில் வெளிவந்த சிரித்திரன் மாத சஞ்சிகையில் ஈழத்து கலை இலக்கியவாதிகளை செவ்விகண்டு நான் வெளியிட்டேன். அது பின்னர் "தேன் பொழுது" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்தது. நூலாக வெளிவந்தபோது பேராசிரியர் சிவத்தம்பி, கே.எஸ்.சிவகுமாரன், கலாநிதி சொக்கன் மாஸ்ரர், மல்லிகை மற்றும் பல பத்திரிகைகள் அதைப்பாராட்டி விமர்சனங்களை வெளியிட்டன. இந்த நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த உலகப் புகழ்பெற்ற சித்தார்வாத்திய மேதை ரவிசங்கர் அவர்கள் அவுஸ்திரேலியா நாட்டிலிருந்து ஒரு பாராட்டுப் பத்திரத்தை எனக்கு அனுப்பியிருந்தார். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத்தந்தது. ஜப்பானில் உள்ள நாகசாகி பல்கலைக்கழகமும் ஒரு பாராட்டுப் பத்திரத்தை அனுப்பி வைத்தது. எனது இலக்கியப் பணிகளுக்காக 1989ஆம் ஆண்டு மொரிசியஸ் அரசாங்கம் அங்கு இடம் பெற்ற பண்பாட்டு விழா ஒன்றில் "யாழகச்செல்வன்" என்ற விருதை வழங்கியது. தமிழ் நாட்டில் கலைஞர் ஆட்சியின் போது தமிழ்ப் பணிச்சுடர் என்ற விருது வழங்கப்பட்டது. இதைவிட மலேசிய அரசாங்கமும் இலக்கியப் பணிகளுக்காக பாராட்டுப் பத்திரம் ஒன்றை அங்கு இடம்பெற்ற சிலப்பதிகார விழாவின் போது நேரிலே வழங்கி கௌரவித்தனர்.

**சிறிலங்காவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் இடர்பாடுகள் பற்றி கூறமுடியுமா?**

சிறிலங்காவின் இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் வாழ்கின்ற தமிழர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பொதுவானவையாகவும் தனித்துவமானவையாகவும் இருக்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தளவில் கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், காணாமல் போதல் இவை அரசபடைகளாலும் அவர்களோடு இணைந்து செயற்படுகின்ற துணை இராணுவக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மனித உரிமை மீறல்கள் தற்போது பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு, நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் காப்பகம், மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை போன்றவை இவற்றை சர்வதேச மயப் படுத்தி இருக்கினறன. இதேவேளையில் மட்டக்களப் பைப் பொறுத்தளவில் அங்கு உருவாக்கப்பட்ட கிழக்கின் உதயம் என்ற பிரச்சார முன்னெடுப்பு அங்கு போட்டி ஆயுதம் தாங்கிய இராணுவக் குழுக்களை உருவாக்கி உள்ளது. ஒரே அமைப்பைச்சேர்ந்த இரண்டு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் போட்டிக்கொலைகளை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதன் விளைவாக 2008ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கடைசிவாரம் 72 மணித்தியாலங்களுக்குள் 26 அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்கள். இதனை ஊர்ஜிதப்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஜோன் அமரதுங்க 03.12.2008 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது இந்தப் போட்டி இராணுவக் குழுக்களே இக்கொலைகளுக்கு காரணம் எனக்குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அங்கு உரையாற்றிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வி தங்கேஸ்வரி கதிர்காமர் 2008 கார்த்திகை மாதம் மொத்தமாக மட்டக்களப்பில் 60 தமிழ்ப்பொதுமக்கள் சுட்டுப்படு



கொலை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். சிறிலங்காவின் தலைநகரைப் பொறுத்தளவில் அங்கு கடத்தல், காணமல் போதல் என்பன அடிக்கடி நிகழ்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டையும், கிழக்கு மாகாணத்தையும் கொழும்பு உட்பட்ட தென்னிலங்கைப் பிரதேசங்களிலும் இராணுவச் சுற்றிவளைப்புக்கள், காரணமற்ற கைதுகள், வெள்ளை வான் கடத்தல்கள், மிரட்டிக் கப்பம்பெறுதல், பாலியல் வல்லுறவுகள் என்பன நாளாந்த நிகழ்வுகளாகிவிட்டன. மக்கள் பயப்பீதியினாலும் மிகுந்த அச்சத்தோடும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கத்தோடும் வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது இந்தக்கொடுமைகள் தமிழ்பேசும் மக்களாகிய இஸ்லாமியர்களையும் பாதிக்கத் தொடங்கிவிட்டன. இந்த நீதிக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவோர்களை சட்டத்தின் பிடியிலிருந்து அரச உயர் பீடங்கள் காப்பாற்றி வருகின்றன. நீதிக்குப் புறம்பான கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல், மிரட்டிக் கப்பம் பெறுதல் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் விசாலிப்புப் பெற்றுள்ளன. சட்டம் ஒழுங்கு யாவுமே முற்றாகவே சீர்குலைந்து போயுள்ளன. நீதிமன்றங்களும் மௌனித்து நிற்கின்றன.

**சர்வதேச சமூகம் தமிழின அழிப்பிற்கு மகிந்த ராஜ பக்சாவுடன் கூட்டுச்சேர்கிறதா? இது தொடர்பில் உங்கள் பார்வை என்ன?**

தமிழ் மக்கள் தங்களுக்கு பிறப்புரிமையை நிலைநாட்டக் கூடிய சகல அடிப்படை உரிமைகளும் தமது சொந்தத் தாயகத்தில் வழங்கப்பட வேண்டும் என்றும் அதன் அடிப்படையில் தமது பிரதேசங்களினுடைய மேம்பாட்டையும் மனித வாழ்வியலின் விழுமியங்களையும் காப்பாற்றவே போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இந்தப்போராட்டம் என்பது சர்வதேச சட்டங்களுக்கோ, சர்வதேச நியமங்களுக்கோ, சர்வதேச பட்டையங்களுக்கோ எந்த வகையிலும் முரண்பாடானது அல்ல. சர்வதேச சமூகம் இன்று அனுபவிக்கின்ற சகல வாழ்வியல் உரிமைகளையும் தமிழ் மக்களும் கோருவதற்கு ஐக்கிய நாடுகள் சபையினுடைய 1945ஆம் ஆண்டு பட்டையம் அங்கீகாரம் அளிக்கின்றது. இதனையே தமிழ்மக்கள் தங்களுடைய சுயநிர்ணய உரிமைப் போராட்டம் எனக்குறிப்பிடுகிறார்கள். ஆனால் இவற்றை முற்றாக நிராகரித்து தமிழ் மக்களது நியாயமான உரிமைக் கோரிக்கைகளை பேரினவாதிகள் ஆரம்பத்தில் குண்டர் படைகளை ஏவி, இராணுவ ரீதியாக ஒடுக்கி வந்தார்கள். இது படிப்படியாக விசாலிப்புப் பெற்று இன்று தமிழ் மக்களது பாரம்பரிய வாழ்விடங்கள் எல்லாம் இராணுவ ஆட்சியும் இனப்படுகொலைகளும் மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன. மகிந்த சிந்தனை என்ற பெயரில் சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினுடைய ஆட்சியானது பேரினவாத ஒடுக்குமுறைகளை சகல மட்டங்களிலும் விஜாபித்து நிற்கின்றது. யூதர்களை ஒடுக்குவதற்கு ஆடோப் கிட்லர் தனது சிந்தனைகளை மெயின் காம் (Mein Kampt) என்ற பெயரில் வெளியிட்டார் யூத இன அழிப்புப் படுகொலைக்கு கிட்லர் வகுத்த இந்த சித்தாந்தத்திற்கும் மகிந்த சிந்தனை என்ற பெயரில் ராஜபக்சா கம்பனியினர் நடைமுறைப்படுத்தும் தமிழினப்படுகொலைகளுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது. யூதப்படுகொலைகளை சர்வதேச சமூகம் இன்றும் மனித நாகரீகத்தின் உச்ச உயர் அரக்கத் தனமான செயல் (Babeerinism) எனக்குறிப்பிடுகிறது. இதே செயலைச்செய்யும் சிறிலங்காவின் இனவாத அரசுக்கு சர்வதேசசமூகம் ஏன் ஆலோசனை வழங்குகின்றது? ஏன் மனித குலத்திற்கு ஒவ்வாத ஆயுதங்களை வழங்குகின்றது? 2008 டிசம்பர் நடுப்பகுதியில் சிறிலங்காவிற்கு வந்து சென்ற சர்வதேச இராணுவ ஆலோசகர்கள் தமிழர் தாயகத்தின் இராணுவ ஆக்கிரமிப்பிற்கும் வந்து சென்றிருக்கின்றார்கள். இதற்கு முழுமையாகச் சான்றுதல்கள் இருக்கின்றன. சர்வதேச சமூகம் இவ்வாறு ஒரு இரண்டக




"எரிமலை சஞ்சிகையானது எங்கள் தேமதுரத் தமிழை உலகமெல்லாம் பரவச் செய்வதில் கடந்த கால்நூறாண்டுக்கு மேலாக மிகப்பெரிய பணியைச்செய்து வருகின்றது. இது மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்ல பாராட்டுதற்கும் உரியது. ஒரு அச்சு ஊடகம் என்றளவில் தாய்த்தமிழக மக்களுக்கும் புலம் பெயர்ந்த உறவுகளுக்கும் இடையில் எரிமலை ஒரு கலை இலக்கியப் பாலம் ஒன்றை அமைத்துள்ளது."

நிலைப்பாடுகளை கொண்டிருப்பது ஏன்? தமிழ்த்தேசிய இனம் முற்றாகவே ஒழிக்கப்படுவதைத்தான் சர்வதேச சமூகம் விரும்புகிறதா? இந்த விடயத்தில் தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தியாவும் பாகிஸ்தானும் கூட்டாக தமது இராணுவ ஆலோசகர்களை சிறிலங்காவிற்கு அனுப்பியது ஏன்? இவர்கள் இணைத்தலைமை நாடுகளான பிரித்தானியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளோடு கூட்டுச்சேர்ந்தது ஏன்? மற்றொரு இணைத்தலைமை நாடான நோர்வே இந்தக் கூட்டிலிருந்து விலக்கி வைக்கப்பட்டதேன்? இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு ஏகோபித்த முடிவை எடுக்க முடியாத இந்த ஏழு நாடுகளும் தமிழின அழிப்பிற்காக கைகோர்த்து நிற்பதேன்?

**தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் எவ்வாறு மேலும் விசாலிப்புப் பெறவேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?**

தமிழ் மக்களுடைய போராட்ட சக்திகள் தமிழர் தாயக மக்கள், புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் உறவுகள், தாய்த்தமிழகத்தில் இருக்கக்கூடிய தமிழ் உணர்வாளர்கள், மலையகத்திலே இருக்கக்கூடிய தமிழ் அபிமானிகள் இலங்கைவாழ் முஸ்லீம் சகோதரர்கள், இன்னும் தென்னிலங்கையிலே வாழ்கின்ற சிங்களமொழி பேசுகின்ற புலமையாளர்கள் அதாவது தமிழர் போராட்டத்தையும் அதன் நியாயத்தன்மையையும் வெளிப்படையாகவே ஆதரித்து நிற்கின்ற பேராசிரியர்களான சுசரித்த கம்லத், றோகான் எதிரிசிங்க, ஜெயதேவ உயங்கொட மற்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன போன்ற அறிவு ஜீவிகள் ஒருங்கிணைக்கப்பட்டு அவர்களது குரல்களும் ஓங்கி ஒலிக்க வேண்டும். உலகம் பூராகவும் வாழ்கின்ற புலம்பெயர்ந்த உறவுகள் ஒவ்வொருவரும் இந்தப் போராட்டம் ஆனது அவர்களுக்கும் உரியதுதான் அவர்கள் தாயக விடுதலை மூலம்தான் முழுமையான சுதந்திரத்தையும் சுபீட்சத்தையும் அடைய முடியும் ஆகவே அவர்களது பங்களிப்பானது போராட்டங்களுக்கூடாக மட்டுமன்றி ஏனைய பிற செயற்பாடுகளுக்கூடாகவும் தமிழர் தாயகத்தை வந்தடைய வேண்டும். இதுவே மனித குலத்தின் விடுதலைக்கான கரு கட்டிமாகவும் அமையும்.

**கடந்த 25வருடங்களுக்கு மேலாக மேலத்தேயத்திலிருந்து தொடர்ந்து வெளிவரும் ஒரு சஞ்சிகையாக எரிமலை இருந்து வருகின்றது. இச்சஞ்சிகை பற்றி உங்கள் கணிப்பீடு என்ன?**

மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை என மகாகவி சுப்பிரமணியபாரதியார் ஆதங்கப்பட்டார். மேலும் அவர் கூறுகையில் திறமான புலமை எனில் அதனை மேல்நாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இன்று மேலைத்தேய புலமைத் தளத்தில் தரமான ஆக்கங்களோடு வெளிவரும் எரிமலை சஞ்சிகையானது எங்கள் தேமதுரத் தமிழை உலகமெல்லாம் பரவச்செய்வதில் கடந்த கால்நூறாண்டுக்கு மேலாக மிகப்பெரிய பணியைச்செய்து வருகின்றது. இது மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்ல பாராட்டுதற்கும் உரியது. ஒரு அச்சு ஊடகம் என்றளவில் தாய்த்தமிழக மக்களுக்கும் புலம்பெயர்ந்த உறவுகளுக்கும் இடையில் எரிமலை ஒரு கலை இலக்கியப் பாலம் ஒன்றை அமைத்துள்ளது. மிக நேர்த்தியான தரத்திலான அச்சக வடிவமைப்பு ஆழமான கருத்துச் செறிவுள்ள அதன் ஆக்கங்கள், அற்புதமான தெளிவான ஒளிப்படங்கள், மிகவும் தரமான என்றென்றும் பேணிப் பாதுகாக்கக் கூடிய அச்சுத்தாள்கள் என பன்முகப்பட்ட இதன் பரிமானங்கள் எவரையும் இதன்பால் ஈர்ப்பதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பக்கங்களையும் மிக உயர்ந்த தரத்தில் வெளிக்கொணர்வதில் மிகப்பெரும் ஆர்வம் காட்டும் இதன் ஆசிரியர் குழுவினர், பாராட்டுதல்களுக்குரியவர்கள் மட்டுமல்ல அனைத்துலக தமிழ்பேசும் சமூகத்தினரது நன்றிக்குரியவர்களுமாவார்கள். இந்த வகையில் எரிமலை யானது தொடர்பாடல் துறையில் மிகப்பெரும் முக்கியத் துவத்தை பெற்றுள்ளதென துணிந்து கூறலாம். அதன் கருத்துப் பரம்பல் தமிழ்த்தேசிய விழிப்புணர்ச்சிக்கு ஒரு அசைவியக்கமாக அமைந்துள்ளமை ஆனந்தமளிப்பதாக இருக்கிறது.



இந்த புதிய ஆண்டில் எல்லாவற்றையும் இழந்த போதும் எதிர்கால சுதந்திர வாழ்வுபற்றி பூரண நம்பிக்கை யோடு வாழ்கின்ற எங்களுடைய தமிழ் மக்களுக்கு எதிர் காலத்திலும் உந்து சக்தியாக ஊக்க மாத்திரையாக எரிமலை அமைய வேண்டும் என்பது எங்கள் எல்லோரதும் பேரவாவாகும். ■

# தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும்,

# அது தழுவிய சமச்சீரற்ற வல்லரசுகளுக்கிடையிலான புதிய பனிப்போரும்.

" எமக்கு நிரந்தரமான நண்பர்களும் இல்லை, நித்தியமான பகைவர்களும் இல்லை. எங்கள் நலன்கள் நிரந்தரமானவை. அவை தொடர்ந்தும் இருப்பவை. அந்த நலன்களைப் பேணுவதே எமது பணி"

பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் பாமஸ்ரன் பிரபு (1784 - 1865)
We have no eternal allies and we have no perpetual enemies. Our interests are eternal and perpetual, and those interests it is our duty to follow." - British Foreign Secretary, Lord Palmerston (1784-1865)

உலகம் தர்மச்சக்கரத்தில் சுழலவில்லை என்பதை நாம் அறிவோம். இந்த உலகத்தில் ஒவ்வொரு நாடும் தத்தம் நலன்களையே பேணுகின்றனர். இன்றைய உலக ஒழுங்கை பொருளாதார வர்த்தக நலன்களே தீர்மானிக்கின்றன, நீதிக்கான சட்டங்களோ மக்களின் உரிமைகளோ அல்ல. இத்தகைய நலன்களே நாடுகளுக்கிடையேயான உறவுகளையும் இராசதந்திரத்தையும் தீர்மானிக்கின்றன. இதனால் எமது போராட்டத்தின் ஞாயத்திற்கான அங்கீகாரத்தை சர்வதேச சமூகத்திடம் உடனடியாக நாம் எதிர்பார்க்கமுடியாது. உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி எம்மிலே தங்கியுள்ளது, உலகத்தில் அல்ல. எமது வெற்றி எங்கள் முயற்சிகளில், எமது பலத்தில், எமது உறுதியில் மட்டுமே தங்கியுள்ளது என தமிழீழத்தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் கூறியுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

"We are fully aware that the world is not rotating on the axis of human justice. Every country in this world advances its own interests. Economic and trade interests determine the order of the present world, not the moral law of justice nor the rights of people. International relations and diplomacy between countries are determined by such interests. Therefore we cannot expect an immediate recognition of the moral legitimacy of our cause by the international community... In reality, the success of our struggle depends on us, not on the world. Our success depends on our own efforts, on our own strength, on our own determination." Velupillai Pirabakaran, 1993

இலங்கைத் தீவில் இன்று இரண்டு போராட்டங்கள் இடம் பெறுகின்றது. ஒன்று சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயான போராட்டம். மற்றது இப் பிராந்தியத்தில் தமது நலன்களைப் பேண தமிழர்களின் போராட்டத்தை கருவியாக்கும் வல்லரசுகளுக்கிடையேயான போராட்டம்.

இலங்கை காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றது முதல் ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர் நிரந்தரமான ஆள்வோர்களாகவும் எண்ணிக்கையில் குறைவான தமிழ் மக்கள் நிரந்தரமாக ஆளப்படுவோர்களாகவும் ஆக்கப்பட்டனர். நாட்டின் அரசியல், பொருளாதாரம், மற்றும் சமூக கலாச்சார வாழ்வில்



தமிழ் மக்கள் புறம் தள்ளப்பட்டனர். இதற்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் பாராளுமன்றத்தின் உள்ளே வாதங்களாகவும் பாராளுமன்றத்திற்கு வெளியே அகிம்சைப் போராட்டங்களாகவும் வடிவம் பெற்றன. அரசியல் கோசமாக சமஸ்டிக் கோட்பாடு முன் வைக்கப்பட்டது. இவையாவும் அரச பயங்கரவாதத்தால் நசுக்கப்பட்டன.

முடிவில் சமஸ்டிக்கோரிக்கையை முன்வைத்து காந்திய வழிப்பட்ட அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த தமிழ்த் தலைவர் தந்தை செல்வா அதனை கைவிடுவதாக 1976 ஆம் ஆண்டு அறிவித்து தன் பாராளுமன்றப் பதவியைத் துறந்து தேர்தலில் குதித்தார். அவர் ஈட்டிய அமோக வெற்றியைத் தொடர்ந்து சமஸ்டிக் கோரிக்கையை கைவிட்டு பிரிந்துபோகும் தனி நாட்டுக்கான பிரகடனத்தை அறிவித்தார்.

"We have completely abandoned the Federal concept, we have decided to separate. If we don't separate we can never win back our lost rights. We will try in every way to set up a Separate State. This is certain. As the voice of my people I tell this to Sri Lanka and the world from this house. We know this is not an easy task. We know it is a difficult path. But either we must get out of the rule of the Sinhalese or perish. This is our ideal."

"சமஸ்டிக் கோட்பாட்டை நாம் முற்றாகக்கைவிட்டு விட்டோம். பிரிந்து போவதாக நாம் முடிவு செய்து விட்டோம். நாம் பிரிந்து செல்லாது விட்டால் இழந்த எமது உரிமைகளை ஒரு போதும் திரும்பப் பெற முடியாது. தனிநாடு ஒன்றை உருவாக்க நாம் எல்லா வழிகளையும் முயற்சிப்போம். இது நிச்சயம். என் மக்களின் குரலாக நான் இந்தச் சபையில் இருந்து கொண்டு சிறிலங்காவிற்கும் உலகத்திற்கும் கூறுகின்றேன். இது ஒரு சுலபமான காரியம் அல்ல என்பது எமக்குத் தெரியும். இது ஒரு கடினமான காரியம் என்பதும் எமக்குத் தெரியும். ஆனால் ஒன்றில் நாம் சிங்களவரின் ஆட்சியில் இருந்து வெளியேற வேண்டும் அல்லது அழிந்து போகவேண்டும். இது எமது இலட்சியம்"

தந்தை செல்வா நாம் பிரிந்துபோவதைத் தவிர வேறுவழி இல்லை என்பதை சிங்களவருக்கு மட்டுமல்ல உலகத்திற்கும் அறிவிக்கிறார். ஒரு நாட்டின் பிறப்பிற்கும் அதற்கான அங்கீகாரத்திற்கும் சர்வதேசத்தின் ஆதரவு வேண்டும் என்பதை அவர் அறியாமலா என்ன. தனிநாட்டை அமைக்க நாம் எல்லா வழிகளையும் நாடுவோம் என அவர் கூறியபோது ஆயுதப் போராட்டத்திற்கான சாளரம் திறக்கப்படவேண்டிய வரலாற்றின் நிற்பந்தத்தையும் அவர் அறியாமலா இருந்திருப்பார்..



**"உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கின்றது , தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது , தமிழீழத்திலே தான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கின்றது."**

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஆனால் தந்தை செல்வா இறந்தபோது யாழ் ஆயர் அம்பலவாணர் கூறியதுபோல்
He died like Moses himself , without reaching the promised land but the vision he saw, he leaves behind as the heritage and challenge to his people "

"யூதர்களின் மோசசைப் போல் இவர் மரணம் இவரால் உறுதியழிக்கப்பட்ட தனிநாட்டை அடையமுன்பே நிகழ்ந்து விட்டது. ஆனாலும் இவர் கண்ட காட்சி தன் மக்களுக்கு இவரால் விட்டுச்செல்லப்பட்ட பாரம்பரியமும் சவாலுமாகும்."

இந்தப் பாரம்பரியத்தை சுமந்தவண்ணம் இதற்காக உயிரையே அர்ப்பணிக்கும் தொன்மமாக நச்சுக் குப்பியை கழுத்தில்



பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் பாமஸ்ரன் பிரபு (1784 - 1865)

கட்டிய தலை முறையொன்று தமிழ் மண்ணில் வேர்விட்டு எழுந் தது.

" In the long history of the world only a few generations have been granted the role of defending freedom in its hour of maximum danger " JFK

உலகின் நீண்ட வரலாற்றில், சுதந் திரத்திற்கு கடுமை யான அபாயம் ஏற்படும்போது அதை பாதுகாக்கும் பொறுப்பு சில தலைமுறையினருக்கு மட்டும் வழங்கப்படுகிறது எனக் கூறினார் ஜோன் எவ் கெனடி. ஈழத் தமிழர்களைப் பொறுத்த வகையில் வரலாறு அந்தச் சுமையை எம் பிள்ளைகளான புலிகளுக்கு அளித்துள்ளது.

இந்த எழுச்சியின் விளைவான தேசிய விடுதலைப் போராட் டம் மூன்று தசாப்தங்களாகத் தொடர்கின்றன. இந்தப் போராட் டம் சிங்களவருக்கும் தமிழர்களுக்கும் இடையேயான போ ராட்டமாக இருந்திருப்பின் அது எப்போவோ ஒரு முடிவிற்கு வந்திருக்கும். இங்குதான் மற்றவர்களின் போராட்டம் நிகழ் கின்றது.

இன்று சர்வதேச சமூகத்தில் இருந்து இப்பிரச்சனைக்கான தீர்வாக நீதியுடன் கூடிய சமாதானம் என்ற குரல்களும், இராணுவத் தீர்வல்ல அரசியல் தீர்வே என்ற குரல்களும் ஓங்கி ஒலிக்கின்றபோதும் தத்தம் நலன்களைப் பேணும் அவர்களின் நடைமுறையானது தமிழ் மக்களுக்கு நீதியி னை வழங்க மறுக்கின்றது. ஒருபுறம் சர்வதேச சக்திகள் இலங்கைத்தீவில் இடம் பெறும் முரண்பாட்டால் ஏற்பட்டுள்ள வாய்ப்புக்களை தமது நலன்களைப் பேணுவதற்காகப் பயன் படுத்துகின்றனர். மறுபுறம் சிங்கள ஆட்சியாளர் இதனால் கிடைத்துள்ள அரசியல் வாய்ப்பினைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நட வடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது இன்றுள்ள கசப் பான உண்மையாகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இன்று ஒரு புதிய பனிப்போரில் இறங்கியுள்ள அமெரிக்கா - இந்தியா - சீனா ஆகிய மும் மூர்த்திகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்பி னைப் பயன்படுத்தி அவர்கள் மூவரதும் ஆதரவுடன் தமிழ் மக்களை மீளா அடிமைகளாக வைத்திருக்க சிங்கள ஆட்சியாளர் கங்கணம் கட்டி நிற்கின்றனர். இதற்காக தீவின் பல பகுதிகளையும் அவைசார்ந்த கடல்பகுதிகளையும் சிங்கள அரசு ஏலம் போடுகின்றது.

இந்தியாவிற்கு திருகோணமலை எண்ணைக்குதங்கள், சீனா விற்கு அம்பாந்தோட்டையில் துறைமுக அமைப்பு, அமெரிக் காவுடன் இராணுவம் சம்பந்தமான பத்து வருட ஒப்பந்தம் (Ten year Acquisition and cross-servicing Agreement) அத்தோடு அமெரிக்க ஒலிபரப்பு (Voice of America) சம்பந்தப்பட்ட இணைப்புக்கள். ஆத்திலை போற தண்ணீ லை அண்ணை குளி தம்பி குளி என எல்லோருக்கும் மன்னார் கடல் வேள்வியில் கூறுகள் என ஏலவிற்பனை தொடர்கிறது.

இந்த வல்லரசுகளை தன்வசப்படுத்த சிறிலங்காவும் இவர் களுக்கிடையே ஒரு வலுச் சமநிலையை கையாள முனை கிறது. ஆனால் சிலரை சில நேரங்களில் ஏமாற்றலாம் எல்லாரையும் எல்லா நேரங்களிலும் ஏமாற்ற முடியுமா? குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியா இதனை அனுமதிக் குமா. அத்தோடு வந்திருக்கும் மும்மூர்திகளும் தமக்குள் ஒத்துழைப்பார்களா. எதில் ஒத்துச் செல்வர். எதில் போட்டி போடுவர். யார் யாருடன் ஒத்துழைப்பர். யாருடன் போட்டி போடுவர். 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு அமெரிக் கா அளித்த ஆதரவு போல் இனியும் ஆதரவு நல்குமா? அது பனிப்போர்க்காலம் மட்டுமல்ல இந்தியா மூக்கு உடைபட்டு வெளியேறும் என்பதும் அமெரிக்காவால் எதிர்பார்க்கப் படாத ஒன்றா?

பேராசிரியர் நவரட்ண பண்டார கூறுவதுபோல் தமிழ்த் தேசிய முரண்பாடு எண்பதுகளில் சிறீலங்கா என்னும் தீவைக் கடந்து இந்திய வல்லரசின் கரைகளை வலம்வந்தபோது இந்தியாவே தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிட்டது. இப்போது இந்தக் கிள்ளலுக்கும் தடவலுக்கு மான ஏகபோக உரிமையை அவர்கள் உதாசீனம் செய்து விட்டார்கள். இப்போது மேற்கு உலகம் இதனை கையாளத் தொடங்கியுள்ளது. சிங்களத்தின் மனித உரிமை மீறல்கள் தொடக்கம் பல அழுத்தங்களை இவர்கள் இப்போது அடக்கி வாசிப்பதில்லை. இது எதற்காக?

இந்த வல்லரசுகள் ஏன் இங்கு நங்கூரம் இடத் துடிக்கின்றன? ஆசியாவில் வலிமை பெற்று வரும் சீனாவும் இந்தியாவும் 21 ஆம் நூற்றாண்டின் முக்கிய நாயகர்கள் எனவும் இந்து சமுத்திரம் 21 ஆம் நூற்றாண்டினை வசப்படுத்தும் திறவு கோலை தன்னகத்தே கொண்டுள்ளதெனவும் அமெரிக்க மற்றும் இராணுவ பொருளாதார வீயூகங்களுக்கான கற்கை களில் ஈடுபட்டுள்ள பலரும் கூறுகின்றனர். துரித வளர்ச் சியினைப் பெற்று வரும் சீனா இந்தியா உள்ளிட்ட நாடுகளு க்கு அதற்கான எரிபொருள் ,எண்ணை என்பன தங்கு தடை யின்றி ஓட இந்து சமுத்திரத்தின் கடல்வழிப் பாதைகளும் போக்குவரத்துப் பாதைகளும் முக்கியமாகின்றன. எண்ணை

மற்றும் எரிபொருள்களை கொண்டுள்ள நாடுகளின் முக்கிய மான ஓடுபாதை இந்து சமுத்திரமே. இந்தச் சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் அமைவிடம் அதன் கேந்திரச் சொத்தாகும்.

இந்தக் கடல்வழிப் பாதையை தன் வசப்படுத்த சீனா கையாளும் வியூகத்தை முத்துச்சரம் என்பர் (The string of perls strategy) ) பர்மா, பங்களாதேஸ், மடகாஸ்கர், பாகிஸ் தான் என்னும் நாடுகளில் கடல்சார் தளங்களை அமைத்து வரும் சீனாவிற்கு சிறீலங்காவின் அம்பாந்தோட்டையும் அதில் கோர்க்கப்படும் ஒரு முத்தாகும். இந்தக் கோர்ப்பு இந்தியாவைச் சுழ இடம்பெறுவது அங்கு பதட்டத்தை ஏற் படுத்தியுள்ளதை அவர்களின் செயல்பாடுகள் காட்டுகின்றன. சீனாவை சுற்றிவளைத்து கட்டுப்படுத்த முயலும் அமெரிக் காவிற்கும் இது ஒரு சவாலாகிறது.

சிறிலங்காவின் கேந்திர அமைவிடம், அதன் அமைவு ஒரு பெரும் தொடர்பாடலுக்கான மையமாக அமைந்திருத்தல், பிரித்தானிய கடற்படைத்தளபதி நெல்சனால் உலகின் அற்பு தமான துறைமுகம் என வர்ணிக்கப்பட்ட திருகோணமலைத் துறைமுகம் என்பன இந்த வல்லரசுகளுக்கிடையே ஒரு புதிய பனிப்போரை உருவாக்கியுள்ளது எனலாம். இவர்க ளோடு பாகிஸ்தான், ஈரான், ரஷ்சியா, ஜப்பான், பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தங்கள் மூக்குகளையும் நுளைத் துள்ளன. முடிவில் இவர்கள் ஏதோ ஒரு வகையில் அந்த மும் மூர்த்திகள் பின்னே விரும்பிச் செல்லும் கூட்டாளி களாக இடம்பிடிக்கலாம். தம்மைத் தாமே இணைத்தலைமை நாடுகள் என்று சிலர் கூறவில்லையா.

இந்தப் பகைப்புலத்தில் நிகழ்வதே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமாகும். தேசத்தை நோக்குவதால் இது தேசியம். அன்னிய சிங்கள அடக்குமுறையில் இருந்து விடுபடுவதால் இது விடுதலைப் போராட்டம். இதனால் சர்வ தேச அங்கீகாரம் எமக்கு வேண்டும். நாடுகளுக்கு நிரந்தர மாகவும் தொடர்ச்சியாகவும் இருப்பவை அவர்களின் நலன் களே. அந்த வகையில் எமது எதிரிகள் நாளை நமது நண்பர்களாகலாம். தராக்கி டி.சிவராம் கூறியதுபோல் சிறி லங்காவில் உறுதிநிலையை ஏற்படுத்த முயலும் இந்தியாவி னதோ அமெரிக்காவினதோ நலன்களுக்காக எம் முந்தை யர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த எம் தந்தையர் மண்ணை, அவர் தங்கமதலைகள் ஈன்று அமுதூட்டி பின்னர் அங்கவர் மாய அவர் உடல் பூந்துகள் ஆர்ப்பரித்த எம் தாய்நாட்டை நாம் எவர்க்கும் தாரைவார்க்கமாட்டோம். எல்லோர் நலன் களும் எம்நலன்களாக வாழ நாம் தயாராக உள்ளோம்.

" யாவரும் கேளீர் " என்பது எமது பாரம்பரியம். சிவராம் கூறியதுபோல் ஒரு நாட்டு மக்கள் பிளவுபட்டு இருக்கும் போதே அன்னியப் படைகள் நுழைந்து வெற்றிபெற முடியும். மக்களை அரசியல் விழிப்புணர்ச்சி கொண்டவர்களாகவும் இனப்பற்றுள்ளவர்களாகவும் அவர்களின் புத்தியை, சிந்த னை ஆற்றலை வளர்ப்பதற்கான செயல்களை நாம் ஊக்கு



விக்க வேண்டும். இந்த வகையில் பொங்குதமிழ் நிகழ்வுக ளோடு நின்றுவிடாது கலாச்சாரம் பண்பாடு தழுவிய உன்ன தங்களால் மக்களை ஆகர்சித்து நிற்கவேண்டும். எமது இலட்சியம் புனிதமானது. அதில் உறுதியாக இருப்போமே யானால், யார் வலைப்பின்னல்களை பின்னினாலும் அதை மனித ஆற்றலால் உடைத்து வெளியேற முடியும் என்பதற்கு வரலாறு சாட்சி.

1505 ஆம் ஆண்டு லொறன்ஸ் டஷ அல்மைடா என்னும் போர் துக்கேய மாலுமி புயலால் சிக்குண்டு காலித்துறை முகத்தை வந்தடைந்ததும் அவர்கள் முதலில் கேட்டது ஒரு வெறும் பண்டகசாலையே என்பதும் அதை கோட்டை மன்னன் புவனேகபாகு கொடுத்ததும் அதன் விழைவுகளும் பழையகதை. ஆனாலும் The Life of Reason என்னும் நூலின் ஆசிரியர் George Santayana கூறும் "Those who cannot remember the past are condemned to re-peat it " வரலாற்றை ஞாபகத்தில் வைக்காதோர் அதனை மீண்டும் எழுத நிற்பந்திக்கப்படுவர் என்பதை இங்கு சிங்கள ஆட்சியாளர்களுக்கு அழுத்திக் கூறுவதில் பிழையில்லை.

தேசிய விடுதலைக்காகப் போராடும் மக்கள் இத்தகைய பின்புலத்தில் மிகவும் விழிப்புடன் செயல்படவேண்டும். தேசிய விடுதலைப் போராட்டமே வரலாற்றில் அந்தத் தேசத்தினை அதற்குரிய பங்கைச் செலுத்த வழிசமைக்கின்றது. தேசியப் பிரக்ஞையின் இதயத்தில்தான் உலகம் தழுவிய பிரக்ஞை வாழவும் வளரவும் முடியும். இதற்காக நாம் எமது இலட்சியத்தில் உறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் ஏனெனில்?

**"உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும் தமிழீ ழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கின்றது, தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது, தமிழீழத்திலேதான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புற நிலை தோன்றியிருக்கின்றது."**
தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஆயின் எமது தேசிய விடுதலை, தேசநிர்மாணம் என்பன மனிதத்தின் உன்னதங்களைத் தட்டி எழுப்பும்போதே, வீறு ணர்ச்சி பெறும்.

சங்ககாலத்து ஔவையார் கூறுவதுபோல் ஒரு நாட்டின்

பெருமை அதன் வளங்களைப் பொறுத்தன்று. அது அங்கு வாழும் மக்களைப் பொறுத்தது.

வீரம், தன்மானம், தாராளமான நட்பு, விரிவான கலைப் பயிற்சி, பயனுள்ள தொழில் முயற்சி, சாதிமத பிடிவாதங்கள் அற்ற சுதந்திரமான நிமிர்ந்த நடை , செல்வச் செருக்கற்ற சரளமான உறவு என்பவற்றை வலியுறுத்தியவள் ஔவை. வீரயுகம் ஒன்றின் கவியரசி அல்லவா அவள். நாடு என்பது மக்களைத் தழுவியது என்கிறாள் ஔவை. நாடாக இருந் தால் என்ன, காடாக இருந்தால் என்ன, மேடாக இருந்தால் என்ன, பள்ளமாக இருந்தால் என்ன எங்கு மக்கள் நல்லவர் களோ அந்த மக்களைக் கொண்ட நிலமே நீ வாழ்வாயாக.

“நாடா கொன்றோ, காடா கொன்றோ
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழியநிலனே (புறநானூறு 187)

சர்வதேசம் சிங்கள மக்களை நேசிக்கவும் இல்லை தமிழ் மக்களை வெறுக்கவும் இல்லை. அவர்கள் தங்கள் நலன் களைப் பேணவே வந்துள்ளனர். அதனை வெளிப்படை யாகப் பேசுவோம் என நாம் கேட்கவேண்டும். ஏனெனில் இலங்கைத் தீவில் அவர்கள் வேண்டும் உறுதிநிலையை ஏற்படுத்த இது அவசியம் மட்டுமல்ல இதுவே சரியான வழியுமாகும். பேராசிரியர் ஜோன் நீல்சென் (Prof.John P Neelsen) கூறவது போல் வரலாறும் புவியியலும் சிங்கள வரையும் தமிழரையும் முஸ்லீங்களையும் அருகருகே வாழ விதித்துள்ளது. அளவால், கலாசாரத்தால், செழிப்பால் வேறு பட்ட பல நாடுகளை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஐரோப்பா முன்னணியில் நிற்கின்றது. அதிகாரங்களையும் வளங்க ளையும் பகிர்ந்தும் குவித்தும் செயல்படும் தேசங்களே சுபீட்சமடையும் என்கிறார் இவர். இந்த வகையில் பல நூற்றாண்டுகளாகக் குரோதப்பட்டும் போரிட்டும் வந்த ஜேர்மனியும் பிரான்சும் சிறிலங்காவிற்கும் தமிழீழத்திற்கும் மாதிரியாக அமையலாம் என்ற இவரது கருத்து முரண் பாட்டை தீர்ப்பதற்கான உரத்த சிந்தனை மட்டுமல்ல, புதிய ஓடுபாதையும்தான். ஒருமக்கள் தம்மைத் தாமே ஆள்வதும் , இன்னொரு மக்களை ஆள மறுப்பதும் சனநாயகத்தின் முதிர்ச்சியாகும். அங்குதான் உறுதியான ஸ்திரத்தன்மை நிலவும். எல்லோரும் வெல்ல முடியும். எல்லோரதும் நிரந்தரமான நலன்கள் பேணப்படுவதோடு எல்லோரும் பரஸ்பர நண்பர்களாவும் புதியதோர் உலகம் செய்வோம்.

**ம.தனபாலசிங்கம்**
சிட்னி – அவுஸ்திரேலியா

பயன்பட்டவை
1. International Dimensions of the Conflict in Sri Lanka (CJPD )
2. tamilnation.org
3. Envisioning New Trajectories for Peace in Sri Lanka
4. புறநானூறு

கடும் இனப்போர்மத்தியில் வன்னியில் இருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரிகை தலையங்கம்.



**சிந்தனைக்கு**

அடக்குமுறையாளர்கள் போராளி களை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட, பொதுமக்களின் ஆன்மீக உறு தியை உடைக்கவேண்டும் என்பதில் தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

தமிழீழத் தேசியத் தலைவர்.

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி.
01.02.2009
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஐ.நா.விடம் சில கேள்விகள்...

மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று வன்னியில் மோதல் இடம்பெறும் பகுதி யிலுள்ள மக்கள் வெளியேறிச் செல்ல விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் ஐ. நா. தரப்பிலிருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் மக்கள் வெளியேற விடுதலைப்புலிகள் தடை விதித்துள்ளார்களா? வன்னியிலுள்ள மக்கள் தமது நிலத்தைவிட்டு வெளியேறிச் செல்ல விரும்பு கின்றார்களா? என்பவை எல்லாம் ஒருபுறம் இருக்க, வன்னியிலுள்ள மக்களை வவுனியாவிற்கு அழைக்கும் ஐ. நா. போன்ற அமைப்புக்களிடம் கேட்கப்படவேண்டிய சி ல கேள்விகள் உண்டு.

முதலில் விடுதலைப்புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு எனக் கூறும் சிறிலங்கா, இந்தியா மற்றும் ஐ. நா. தரப்பும் விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் மக்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு கொண்டுசெல்ல முற்படுவது ஏன்?

அதாவது, வன்னிவாழ் தமிழ் மக்கள் - புனர் வாழ்வு முகாம் என்ற ரீதியில் தடுத்துவைக்கப்பட வேண்டியதேன்? அவர்கள் செய்த தவறுதான் அழைக்கும் ஐ. நா. போன்ற அமைப்புக்களிடம் கேட்கப்படவேண்டிய சி ல கேள்விகள் உண்டு.

முதலில் விடுதலைப்புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு எனக் கூறும் சிறிலங்கா, இந்தியா மற்றும் ஐ. நா. தரப்பும் விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் மக்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு கொண்டுசெல்ல முற்படுவது ஏன்?

தொடர்ச்சி- 32 ஆம் பக்கம்....



# எதிரியிடம் விலைபோகாத விதைகளையே நாங்கள் விதைக்கின்றோம்



## நாட்டுப்பற்றாளர்
## புண்ணியமூர்த்தி – சத்தியமூர்த்தி
## 30.10.1972 – 12.02.2009

ஒரு பெரும் ஊடகச் சமராடியை நாம் இழந்து நிற்கிறோம்.எம்மினத்தின் அவலத்தை 'ஐ.பி.சி வானொலி' ஊடாக, உலகம் முழுவதும் தெரியப்படுத்திய அந்த அற்புதமான மனிதநேய ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் பிரிவு எமையெல்லாம் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவர் 'ஈழமுரசு' வாரப்பத்திரிகையில் வாராந்த ஆய்வுக் கட்டுரைகளும், 'தமிழீழத் தேசியத் தொலைக் காட்சி' யில் தினமும் நடாத்திய நாளிதழ் நேரம் நிகழ்ச்சியும், நிலவரத்தில் கு.வீராவுடன் நிகழ்த்திய கலந்துரையாடல்களும் எமது நினைவை விட்டு நீங்காத விடயங்கள் எம் தேசத்தின் ஊடகக் குரல்கள் பலதடவை நசுக்கப்பட்டன. நிமலராஜன் முதல் தராகி சிவராம் வரையான இழப்புக்களின் வரிசையில் சத்தியமூர்த்தி என்கிற அரிய மனிதனும் இணைந்துவிட்டார்.

சிங்களத்தின் பேரினவாத எறிகணை வீச்சினால், சுதந்திரபுரத்தில் கொல்லப்பட்ட, சுதந்திர சிந்தனையாளன் சத்தியமூர்த்தியின் இழப்பினை, தமிழ்த் தேசியத்தின் பேரிழப்பாகக் கருத வேண்டும். ஒரே வழித் தடத்தில் நடந்த சகபயணி சத்தியமூர்த்தியின் இழப்பினை ஈடுசெய்வது மிகக் கடினம்.

உள்வாங்கிக் கொண்ட சமூக அவலங்களை, எளிய தமிழில், மிகச் சுருக்கமாகவும் அதேவேளை ஆழமாகவும் வெளிப்படுத்தும் பேராற்றல் சத்தியமூர்த்திக்கு உண்டு. குறிப்பாக, பேரினவாதத் தாக்குதலில் குழந்தைகள் கொல்லப்படும் போது, அந்த அவலத்தை வார்த்தைகளில் விபரிக்கையில் மூர்த்தியின் மானுட நேசிப்பும், வதைக்கெதிரான போர்க் குணமும் மிகத் தெளிவாக வெளிப்படும்.

'மனிதனாக இருக்கக் கற்றுக்கெள்' என்கிற மானுடத் தத்துவத்தையே அவர் அடிக்கடி வலியுறுத்துவார். அவலத்தை கண்டு வெகுண்டெழாத மனிதன், உயிர் வாழும் தத்துவத்தை இழக்கிறான்



என் கிற உயர் கருத்தினை சத்தியமூர்த்தி கொண்டிருப்பதே, என்னை அவர்பால் ஈர்த்த முதன்மைக் காரணியாகக் கருது கின்றேன்.

மண் மீதான தீராக் காதலும், தலைவன் மீது கொண்ட ஆழ மான பற்றும், மக்கள் சக்தி மீது கொண்ட நேசிப்புமே, சத்திய மூர்த்தியின் ஊடகப் பணிக்கு உறுதுணையாகவும், உந்து சக்தியாகவும் திகழ்ந்திருக்கிறது.

இன்று ஒரு கவிதை படித்தேன்

'அப்பா வித் தமிழர்கள் மீது
பேரினவாத இராணுவம் நடத்திய கொலை வெறித்
தாக்குதலில்
50 பேர் பலியானார்கள்
500 பேர் பலியானார்கள்.'
உரம் ஏறிய வன்னி மண்ணில் விதைக்கும் இடமெல்லாம்
முளைக்கும்.
தாயக விடுதலையை நெஞ்சில் சுமந்த உன் பணியை,
நாம் தொடர்ந்து சுமப்போம்.
எறிகணைக்கு எழுத்தாளன் என்ன? ஏதிலிகள் என்ன?
எல்லாமே ஒன்றுதான்.
உன்நினைவுகளை எம்மண்ணில் விதைக்கின்றோம்.
எதிரியிடம் விலைபோகாத விதைகளையே
நாம் விதைக்கின்றோம்.
அது வளரும்.... விருட்சமாகும்....
அதன் சுவாசத்தில் நீ
நித்திமாய் நிலைபெற்று நிற்பாய்
சத்தியமூர்த்தி.

**-இதயச்சந்திரன்.**
நன்றி- ஈழமுரசு



31 ஆம் பக்க தொடர்ச்சி.

அதாவது, வன்னிவாழ் தமிழ் மக்கள் - புனர் வாழ்வு முகாம் என்ற ரீதியில் தடுத்துவைக்கப்பட வேண்டியதேன்? அவர்கள் செய்த தவறுதான் என்ன? அதாவது ஐந்து மாவட்டங்களிலும் பல்லா யிரம் சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் வாழ்ந்த மக்களை 900 ஏக்கர் நிலப்பரப்பில் தடுத்து வைக்க முற்படுவது ஏன்?

தற்பொழுது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களில் பெரும்பான்மையோர் தமது சொந்த நிலங்களிலும் குடியிருப்புக்களிலும் இல்லை. அவர்கள் இடம்பெயர்ந்து பெரும் துன்பத் தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இம்மக்கள் மீது சிறிலங்கா அரசு அனுதாபம் கொண்டிருப்பின் முதலில் போரை நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளத் தயாராகவில்லை. அப்பாவி தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடாத்தியவாறே தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்து அது பேசி வருகின்றது.

ஆனால், யுத்தம் நிறுத்தப்படாது எவ்வாறு தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியுமென ஐ. நா. கேள்வி எழுப்பியிருக்கவேண்டும். அடுத்ததாக, சொந்த நிலமும், வீடும் உள்ளவர்கள் ஏன் புனர்வாழ்வு நிலையங்களில் தங்கவைக்கப்பட வேண்டும் என ஐ.நா. கேள்வி எழுப்பியிருக்க வேண்டும்.

ஐ. நா. அவ்வாறு கேள்வி எழுப்பியதாகத் தகவலில்லை. கிழக்கு மாகாணத்தில் இடம் பெயர்ந்த மக்கள் விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் நடந்துகொண்டது மாதிரி குறித்துக்கூட ஐ. நா. கவனத்தில் கொண்டதாக இல்லை.

இந்த வகையில் பார்க்கையில், நிலையில், ஐ. நா.வின் நடவடிக்கைகூட ஒரு தலைப்பட்சமான தாகச் சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறைக்கு ஒத்துழைப்பதாகவுமே உள்ளது. அவ்வாறு இல்லா விடில், முதலில் சிறிலங்கா அரசினால் புனர்வாழ்வு என்ற பெயரில் அமைக்கப்பட்ட தடுப்பு முகாம்களில் என்ன நடக்கின்றது என்பது குறித்து முதலில் அறிந்துகொள்வது நல்லது. பின்னர் வன்னியி லுள்ள தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்துப் பேசுவது விரும்பத்தக்கது.

- - - - - - - - -



# இலங்கைத் தீவு 2008

# ஒரு பின் நோக்கிய பார்வை.

– பொன்.பூலோகசிங்கம் –





ஒரு சமூகப்பொருளாதார அரசியல் இராணுவ ரீதியிலான கண்ணோட்டம் இது. 2008 ஆம் ஆண்டை மகிந்த ராஜபக்ச ஒரு யுத்தஆண்டாக பிரகடனம் செய்தார். இதற்காக யுத்த ஆண்டு செலவாக பதினாறாயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் உண்மையில் 2008 யுத்த செலவாக இருபதுநாயிரம் கோடி ரூபா செலவிடப்பட்டதாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு தொகை இலங்கை வரலாற்றில் முன்னெப் போதுமே இல்லாத ஒரு தொகையாகும். 1965 ஆம் ஆண்டு காலஞ்சென்ற டட்லி சென நாயக்க பிரதமராக இருந்தபோது பாதுகாப்பு செலவீனமாக அறுபத்தொரு கோடி ரூபாதான் ஒதுக்கியிருந்தது பலருக்கும் ஆச்சரியம் தரும் விடயமாக இருந்தது. ஆனால் இந்தத் தொகை 1970 ஆண்டுக்குப் பின்னர் காலஞ்சென்ற பிரதமர் சிறிமாவோ பாண்டாரநாயக்க காலத்தில் ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சியை அடக்குகின்ற நோக்கோடு அதிகரிக்கப்பட்டது. இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு இன்று இலங்கை யின் பாதீட்டில் ஆறிலொரு பங்கை பாதுகாப்புச் செலவீனங்கள் விழுங்கிக் கொண்டி ருக்கின்றன.

1977ம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசாங்கம் பதவிக்கு வந்தது. அவர் 1978ம் ஆண்டு இலங்கையை இரண்டாவது குடியரசாக பிரகடனப்படுத்தியதோடு தன்னை ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மக்கள் முன் நிலைப் படுத்திக்கொண்டார். இதன் பின்னர் சந்திரிக்கா அம்மையாருடைய காலத்திலும் மகிந்தராஜபக்ச காலத்திலும் பாதுகாப்புக்கென வரவுசெலவுத்திட்டத்தில் கோடிக்கணக் கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டே வந்தன இன்று இத்தொகையானது ஐந்து இலக்கங் களைக்கொண்ட கோடிக்கணக்கான ரூபாய்களாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 2008ம் ஆண்டு இலங்கைத்தீவில் தமிழர் தாயகத்தில் இனப்படுகொலையானது பல்வேறு பரிமாணங்களிற்கூடாக விசாலிப்புப்பெற்றது. விமானக்குண்டுகளை வீசி பெருமளவில் தமிழ்பொதுமக்களை படுகொலை செய்யும் நிகழ்வு 2008ம் ஆண்டு தான் நிகழ்ந்தது. இதுவரை ஆறாயிரம் தடவைகளுக்குமேல் தமது விமானங்கள் வன்னிப்பெருநிலப்பரப்பின் மீது குண்டுகளை வீசியதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச பெருமிதப்பட்டுக்கொண்டார். இந்தக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட அப்பாவிப்பொதுமக்கள் பற்றி அவர் கிஞ்சித்தேனும் அவர் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை.

எறிகணைவீச்சு, காணமற்போதல், கடத்தல், கப்பம்பெறுதல் என சட்டவிரோதமான செயல்பாடுகள் மிக உயர்மட்டத்தின் ஆசீர்வாதத்தோடு நடைபெற்றது. ஒட்டுக் குழுக்களுக்கூடாகவும் இராணுவத்தின் ஊடாகவும் இந்த சட்டவிரோதமான செயற் பாடுகள் விசாலிப்புப்பெற்றன. இத்தகைய சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் குற்றத்தீர்ப்பில் இருந்து (Impunity) விதிவிலக்களிக்கப்பட்டார்கள். 2008 என்பது

இராணுவ ரீதியாக தமிழர் தாயகத்தின் நிலப்பரப்புக்களை சிங்களப் பேரினவாதம் ஆக்கிரமித்து நின்ற ஆண்டாகும். இந்த ஆக்கிரமிப்புக்காரணமாக இந்தஆண்டு தொடக்கத்திலிருந்து மக்கள் படிப்படியாக இடம்பெயரத்தொடங்கினார்கள். இலங்கை அரசாங்கம் அவர்களை தமது கட்டுப்பாட்டுப்பிரதேசங்களிற்கு வருமாறு அழைப்புகளை விடுத்தபோதும் அவற்றை தமிழ்மக்கள் முற்றாகவே நிராகரித்தார்கள் வவுனியாவில் ஏற்படுத்தப்பட்ட நலன்புரி நிலையங்கள் யாவும் திறந்தவெளி சிறைச்சாலைகளாக தமிழ் மக்களால் பார்க்கப்பட்டன. இதனால் பேரினவாதத்தால் மடு பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டபோது மன்னார் மாவட்ட மக்கள் அங்கிருந்து வெளியேறி முல்லைத்தீவு மேற்குப்பிரதேசங்களிற்கு இடம்பெயர்ந்தார்கள் அப்பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டபோது மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தார்கள் மக்கள் எப்பொழுதுமே 2008ம் ஆண்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டார்கள். இதன்மூலம் தமிழ்மக்கள் சிங்களப் பேரினவாத அரசிற்கு ஒருசெய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். தாம் எந்த விதமான இராணுவ ஆக்கிரமிப்பிற்கோ அடிபணிந்துசெல்ல தயாராக இல்லை. தமது சுயாதீனத்தை பேணிப்பாதுகாக்கவே தாம் எப்போதும் உறுதியோடு இருப்பதாக சர்வதேச சமூகத்திற்கு வெளியரங்கப்படுத்தியிருக்கிறார்கள். இதன்மூலம் மகிந்தராஜபக்ச அரசாங்கம் கிழக்கின் உதயம் என்றபெயரில் தென்தமிழீழத்தை ஆக்கிரமிப்புச் செய்ததுபோல் வடக்கின் வசந்தம் என்றபெயரில் வடதமிழீழத்தை ஆக்கிரமிப்புச்செய்ய முடியாமல் போய்விட்டது. வன்னிதளம் என்பது பல நூற்றாண்டு காலமாக எத்தகைய ஆட்சியாளர்களிற்கும் அடிபணியாத ஒரு மண்ணாகவே இருந்து வந்திருக்கிறது. ஒல்லாந்தர் காலத்தில் கைலைவன்னியனும், இதன்பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் பண்டாரவன்னியனும் அந்நிய ஆதிக்கசக்திகளுக்கு எப்பொழுதுமே சிம்மசொப்பனமாகவே இருந்துவந்தார்கள். கைலைவன்னியனை ஒரு காக்கைவன்னியனும் பண்டாரவன்னியை ஒரு கதிர்காமசேகர முதலியும் காட்டிக்கொடுத்த கயமத்தனம் காரணமாகவே வன்னி அரசுகள் வீழ்ச்சியடைந்தன. ஆனால் வன்னிமக்கள் ஒல்லாந்தரையோ ஆங்கிலேயரையோ ஏற்றுக்கொள்ளவில்லை "யானையை அடக்கிய அரியாத்தையின் கதை" குருவிநாச்சியாரின் கதை, அன்னிய ஏகாதிபத்திய சக்த்திகளை எதிர்த்து வன்னிமக்கள் நடாத்திய வீரம்செறிந்த போர் முறைகளை வெளிக்கொணர்கின்றன. இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தை 1987ம் ஆண்டு வல்வளைப்புச் செய்தபோதும் தமிழ்த்தேசியத் தலைமையை அழித்துவிடுவதற்கு பல்வேறு குறியீட்டுப்பெயர்களில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் வன்னி மண் தமிழர் தேசியப்போராட்டத்தையும் தமிழ்த்தேசியத் தலைமையையும் பாதுகாத்தமை இன்று வரலாற்றுப் பிரசித்தமாயிற்று. 2007ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ம் திகதி எமது தேசியத்தலைவர்ஆற்றிய மாவீரர் நாள் உரையில் மிகச் சுருக்கமாகக் கூறியவாசகம் தற்போதைய இராணுவ சூழ்நிலையை தமிழ்த்தேசியத் தலைமை எவ்வாறு நோக்குகின்றது என்பதற்கு கட்டியம் கூறுவதாக அமைகிறது. இன்றைய சூழ்நிலை எமக்குப் புதியவையுமல்ல எமக்கு அவை பெரியவையுமல்ல என்ற அவரது வாசகம் தமிழ்மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த உரையில் அவர் சொல்லாமல் சொன்ன செய்திகள் இனி அடுத்துவரும் காலங்களில் போராட்டத்தின் போக்கை எதிர்வுகூறுவதாக அமைந்துள்ளன.









### இலங்கை சமூகங்களின் உறவுகள்

2008 இல் இடம்பெற்ற சில மாகாணசபைத் தேர்தல்களின் பெருமளவு மோசடிகள் ஆள்மாறாட்டங்கள் அடாவடித்தனங்கள் என்பன இடம்பெற்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மாகாணசபைத்தேர்தலில் ஒரு ஒட்டுக்குழு ஒன்றை வெல்லவைப்பதற்காக அங்குள்ள வாக்காளர்களது அடிப்படை மனிதஉரிமைகள் முற்றாகவே பறிக்கப்பட்டன. கொலைகள், கொள்ளைகள், அச்சுறுத்தல்கள், கடத்தல்கள், காணமல் போதல், பாலியல்வல்லுறவுகள் இப்பொழுது அங்கு சர்வசாதாரண மாக இடம்பெறுகின்றன. கிழக்கின் அபிவிருத்தி என்ற மகுடவாசகம் இன்று வெறும் வெற்றுக்கோசமாகிப்போய்விட்டது. வடமத்திய மாகாண சபைத்தேர்தலிலும் சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தலிலும் இடம்பெற்ற மோசடிகள் ஜனநாயக விழுமியங்களை கேலிக்குரியதாக்கிவிட்டுள்ளன. இந்த இரண்டு மாகாணத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றி

பெற்றபோதிலும் சிங்களமக்கள் அதற்கு ஆதரவளித்த போதிலும் யுத்த முனைப்புக்கள் தீவிரம் பெற்றிருக்கின்றன. சிங்களப் பேரினவாத அரசு இனிமேல் இலங்கை வாழ் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் இன ஒற்றுமையென்பது எந்தவகையிலும் ஏற்படாத வண்ணம் பிளவுகளை 2008ம் ஆண்டு ஏற்படுத்தியுள்ளதாக ஊடகவியலாளர் சுனந்த தேச பிரிய செனநாயக்க குறிப்பிட்டுள்ளார். இது பொருள் பதிந்த வாசகமாகும். சிங்கள மக்கள் மத்தியில் வடக்கே இறக்கும் சிங்கள சிப்பாய்களது அகாலமரணங்கள் தொடர்பாக 2008 இறுதிக் காலப்பகுதியில்தான் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது.

தமது பிள்ளைகள் வடக்கே இடம்பெறும் யுத்தகளத்தில் எத்த கையவெற்றிகளையும் பெறப்போவதில்லையென்பதை தெற் கேயிருக்கும் சாதாரண கிராமத்து சிங்களப்பெற்றோர்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். பெரும்போர் நகரம் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி நகரை கைப்பற்றுவதற்காக பலமுனைகளில் பெரும்போர் இடம்பெற்றிருக்கின்றது. இதில் குறிப்பாக 2008ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் 17ம் திகதிகளில் இடம்பெற்ற உக்கிரசமர் காரணமாக டிசம்பர் மாதம் 19 திகதி 400இற்கும் மேற்பட்ட சிங்கள சிப்பாய்களது உடலங்கள் பொரளை ஜெயரட்ணம் மலர்ச் சாலைக்கு வன்னியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. இந்த விடயம் படிப்படியாக சிங்கள மக்களுடைய மனதில் வடக்குப் போர்நிலைமை தொடர்பான உண்மையான படத்தை விரிவடையச் செய்திருக்கிறது. இந்தச் சண்டையானது 17.12.2008 இராணுவத் தளபதி தனது பிறந்தநாள் பரிசாக கிளிநொச்சியை வல்வளைப்புச் செய்து முற்று முழுதாக கைப்பற்றிவிடும்நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கையில் மகிந்த அரசிற்கு ஏற்பட்ட பேரிழப்பும் யாரொருவருடைய பிறந்ததினக்கொண்டாட் டத்திற்காக தமது பிள்ளைகள் கொல்லப்படுகின்ற கொடூரமான இராணுவ ஏற்பாடுகளும் சிங்கள மக்கள்மத்தியில் சீற்றத்தைஏற்படுத்தியிருக்கின்றன. இந்த தினத்தை சண்டே ரைம்ஸ் பத்திரிகை கறுப்புச்செவ்வாய் (Black Tuesday)என வர்ணித்திருக்கின்றது. லக்பிம ஆங்கில ஏடு இதே தினத்தை இரத்தம் தோய்ந்த செவ்வாய் (Bloody Tuesday) என வர்ணித்திருக்கின்றது. இந்த இரு பத்திரிகைகளும் கொழும்பி லிருந்து வெளிவருகின்றவையாகும்.



**பொருளாதார நிலைமை.**

2008ம் ஆண்டு இலங்கைத்தீவின் பொருளாதார நிலைமை யானது மிக மோசமான கட்டத்தை அடைந்தது. வாழ்க்கைச் செலவு உயர்வு, வாழ்க்கைத்தர வீழ்ச்சி, பங்குச் சந்தையின் வீழ்ச்சி, பணவீக்கம், பொருட்கள்விலையேற்றம் காரணமாக சாதாரண பொதுமக்களால் தமது அன்றாட சீவனோபாயத்தை கொண்டுநடத்தமுடியாது அல்லல்படும் அவலநிலைமை என்பன ஏற்பட்டன. தென்னிலங்கையில் சிங்கள பொதுமக்களுடைய நுகர்வுக்குரிய பொருட்களைப் பெற்றுக்கொள் வதில் ஏற்பட்ட இடர்பாடுகள் மகிந்த ராஜபக்சவினுடைய அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மையை படிப்படியாக வளர்க்கத்தொடங்கியுள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணை ஒருபீப்பாவின் விலை 144 டொலராக அதிகரித்தபோது மகிந்தராஜபக்ச அரசாங்கம் எரிபொருளின்விலையை பெருமளவில் ஏற்றியது. ஆனால் அதன்விலை 2008 இறுதிக்காலப்பகுதியில் 44 அமெரிக்க டொலராக குறைந்தபோதும் எரிபொருள் விலையை அது குறைக்கமறுத்தது. இந்த மறுப்பிற்குக் காரணம் போருக்கான செலவீனம் அதிகரித்திருப்பதாக மகிந்த அரசால் சுட்டிக் காட்டப்பட்டது. இறுதியில் உயர்நீதிமன்றம்தலையிட்டு பெற்றோலின் விற்பனை விலையாக 100 ரூபாவை லீற்றர் ஒன்றிற்கு நிர்ணயம் செய்துள்ளது. அதை அரசாங்கம் ஏற்கமறுக்கிறது. இங்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் சுயாதீன நீதித்துறைக்குமிடையில் முரண்பாடு எழுந்துள்ளது. இது ஜனநாயக விழுமியங்களை தகர்த்தெறிந்து மகிந்த அரசு சர்வாதிகாரப்போக்கில் செல்வதற்கு முதல் காலடியை எடுத்துவைத்துவிட்டது. என்றே கணிப்பீடு செய்யப்படுகின் றது. சட்டவாட்சி தத்துவம் புறக்கணிக்கப்பட்டு சட்ட தத்துவங்கள் உதாசீனப் படுத்தப்பட்டு உயர் நீதிமன்றம் ஒருவகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் அவமானப் படுத்தப்பட்டுள்ளது. இதனுடைய எதிர் வினைகளை 2009 இல் நாம் நேரடியாக காணக் கூடியதாகவுள்ளது.

2008ம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரை ஒவ்வொருமாதமும் அவசரகால சட்ட நீடிப்பின்போது இலங் கையின் பிரதமமந்திரி அவசரகாலச்சட்ட நீடிப்புக்கான காரணங் களை பாராளுமன்றத்தில் எடுத்துச்சொல்லும்போது ஒவ்வொரு மாதமும் படையினருடைய உயிர் இழப்புகளையும் காயப்பட்ட படையினரின் எண்ணிக்கையும் சுட்டிக்காட்டி அவசரகாலச்சட்டத் தை நீடிக்க பாராளுமன்றம் அங்கீகாரம் தர வேண்டுமென்று கேட்பது ஒரு மரபாக இருந்துவருகிறது. ஆனால் ஒக்ரோபர் மாதக் கடைசியில் இனிமேல் படையினருடைய இழப்புக்களை வெளியிடு வதில்லை என்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமைய படையி னரது இழப்புக்கள் இப்போது வெளிவருவதில்லை. ஆனாலும் கூட இராணுவ உயர்அதிகாரிகள் சிலர் எதிர்க்கட்சிகளோடு கொண்டி ருக்கின்ற தொடர்புகள் காரணமாக வன்னியில் மரணிக்கும் சிங்களச் சிப்பாய்களது எண்ணிக்கை தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு எப்படியோ கிடைத்துவிடுகிறது. இதன்விளைவாக அவை கொஞ்சம் கொஞ்சமாக கசியத்தொடங்குகின்றபொழுது அவற்றை சில சுயாதீன ஊடகங்கள் வெளிப்படுத்திவிடுகின்றன. மங்கள சமரவீராவின் டிபென்ஸ் வோச், கொழும்புப்பேஜ் போன்ற சுயாதீன இணையத்தளங்களும் சண்டே ரைம்ஸ், சண்டே லீடர்

போன்ற அச்சு உடகங்களும் இவற்றை வெளிக்கொணர்ந்து இருக்கின்றன. கொழும்பில் இயங்கிவரும் இலத்திரனியல் ஊடகங்கள் தனியார் வானொலிகள் மீதான அளவுக்குமிஞ்சிய அழுத்தங்கள் காரணமாக அவை பெரும்பாலும் அடக்கிவாசிக் கின்றன. ஆனால் வன்னியில் இயங்கிவரும் சில ஊடகங்கள் வெளியிடும் தகவல்களை வைத்து சர்வதேச ஊடகங்கள் உண்மைத்தகவல்களை வெளிஉலகிற்கு துலாம்பரப்படுத்தி வந்திருக்கின்றன. இதனால் 2008 ம் ஆண்டு மகிந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட ஊடகங்கள் மீதான மிகப்பெரிய அழுத் தங்கள் கொலை அச்சுறுத்தல்கள் என்பன அரசிற்கு பாதக மாகவே அமைந்தன.





**சமாதானம் நோக்கிய அரசியல் நகர்வுகள்.**

2008 இல் ஜனவரி மாதம் 2ம் திகதி இலங்கை அரசாங்கம் தாம் விடுதலைப்புலிகளுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தி லிருந்து விலகிக்கொள்வதாக ஒருதலைப்பட்சமாக ஒரு முடி வை அறிவித்தது. ஆனால் விடுதலைப்புலிகள் தமது அரசியல் துறைப்பொறுப்பாளர் ஊடாக சர்வதேச சமூகத்திற்கு விடுத்த அறிக்கையில் தாம் போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகப் போவதில்லை எனவும் அதனைத்தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாகவும் மேலும் நோர்வேயின் சமாதான முயற்சிகளில் தாம் பூரணமான நம்பிக்கை வைத்திருப்பதாகவும் தெரித்தார் கள். மகிந்த ராஜபக்ச அரசாங்கம் இனிமேல் போர்நிறுத்தம் எதுவும் இல்லை என்றும் நோர்வேயின் சமாதான முயற்சிகள் கைவிடப்பட்டதாகவும் அறிவித்தார்கள் விடுதலைப்புலிகளின் இராஜதந்திர ரீதியிலான காய்நகர்த்தல் இலங்கை அரசாங்கத் தின் உண்மையான சொரூபத்தை சர்வதேசத்தின் முன்னால் வெளிச்சம்போட்டுக்காட்டியது. விடுதலைப்புலிகளோடு பேசுவ தில்லை என்ற மகிந்த அரசின் முடிவு உள்ளூர் யதார்த்தத்தை புறந்தள்ளியது. நோர்வேயின் சமாதான முயற்சிகளை ஏற்றுக்கொள்வதில்லை என்ற மகிந்த அரசின் முயற்சி சர்வதேச யதார்த்தத்தை ஒதுக்கித்தள்ளியது இலங்கையினுடைய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒன்றுதான் ஒரே வழி என மகிந்த அரசு அறைகூவல் விடுத்தது. விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியையும் சம்பிக்க ரணவக்க அங்கம்வகிக்கும் பெருமளவு பௌத்தகுருமார்களை உறுப்பினர்களாகக்கொண்ட ஜாதிகஹல உறுமய போன்ற பேரினவாத கட்சிகளையும் திருப்திப்படுத்துவதன் மூலம் தனது அரசியல் இருப்பையும் ஆட்சி அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற மகிந்தராஜபக்ச கொம்பனியினது எதிர் பார்க்கைகள் 2008இறுதிக்காலத்தில் விடுதலைப் புலிகளு டைய தொடர்ச்சியான உறுதியான தற்காப்பு தாக்குதல் கள் மூலம் தவிடுபொடியாகிப்போய்விட்டன. இதனால் மகிந்த அரசு தமதுஇராணுவத்தை விடுதலைப்புலிகள் தாக்கினால் தாம் விடுதலைப்புலிகளை தடைசெய்துவிடப்போவதாக அறிவித்து ள்ளது.

இத்தகைய தடைகள் கடந்த காலங்களிலும் ஜே.ஆர். ஜெயவர்தனாவின் அரசாலும் பிரேமதாசவின் அரசாலும் சந்திரிக்காவின் அரசாலும் போடப்பட்டன அவை எவையுமே விடுதலைப்புலிகளினுடைய இலட்சிய வேட்கையினையோ இலக்குநோக்கிய பயணத்தையும் பாதித்துவிடவில்லை மாறாக தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம் கூர்மையடைந்து முனைப்படைந்து வீச்சுப்பெற்றது. இதனால் விடுதலைப்புலிகள் இந்தத் தடைபற்றிய அறிவிப்பை கிஞ்சித்தேனும் கருத்தில் கொள்ளவில்லை. இந்த நிலையில்தான் மகிந்தராஜபக்ச பேரினவாதிகளைச் சந்தித்துவிட்டு 2009ம் ஆண்டை தரைப் படைகளின் ஆண்டாகப் பிரகடனப் படுத்தியிருக்கின்றார். இது வே அவர் 2008 மார்கழி மாதம் 25ம் திகதி விடுத்த நத்தார் தினச்செய்தியாகும். இந்த நத்தார்தினத்தில் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பானது கடற்படை, விமானப்படை, பொலிஸ் சேவைகள் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக் கிறது. அவர்கள் தம்மை மகிந்தஅரசு அலட்சியப்படுத்தி விட்டதாக கருதத்தொடங்கிவிட்டார்கள் இதன்விளைவுகள் 2009ம் ஆண்டில் மேலும் சிக்கலடையலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. இதேவேளை 2009ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தரைப்படைக்கென எழுபது பில்லியன் ஒதுக்கப் பட்டிருக்கிறது. கடந்தஆண்டு 2008 முப்பத்தாறு பில்லியன் ஒதுக்கப்பட்டது. இப்போது தரைப்படைக்கு இரண்டு மடங்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது அத்தோடு 2009ம் ஆண்டை தரைப் படையினரின் வெற்றிவிழா ஆண்டாக மகிந்த பிரகடனப் படுத்தியிருக்கின்றார். இது சாத்தியப்படுமா என்பது இன்று பெரிதாக எழுந்துள்ள ஒரு கேள்விக்குறியாகும். எத்தகைய மாற்றங்களையும் படையினரால் கொண்டுவரமுடியாதென்பது களயதார்த்தமாக உள்ளது. இதேவேளையில் விடுதலைப் புலிகள் யுத்தத்தின்போக்கை தீர்மானிக்கும் சக்திகளாக பலம் பெற்று நிற்பதே களயதார்த்தமாகும். ■

# சர்வதேசத்திற்கு தெரியாத வன்னியின் அவலம்



2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளாலும், சிறிலங்கா அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் சிங்கள இராணுவம் பின் நகர்த்தப்படுவதற்கு பதிலாக 11.08.2006ற்குப் பின் தொடர்ச்சியாக புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மாறாக முன்நகர்த்தப்பட்டு வருகின்றது.

சர்வதேச நாடுகளின் ஒன்றுதிரண்ட உதவியுடன் பதினாறு மில்லியன் சிங்கள மக்களிடம் இருந்து இராணுவத்திற்குப் படைகளை இணைத்து வருகின்றன. இலங்கையில் உள்ள இருபது மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் சிங்கள அரசிற்கு வரி செலுத்துகின்றார்கள். அவ்வரிப்பணத்தில் பெரும்பகுதியை போருக்கு சிங்களம் திருப்பிவிட்டுள்ளது.

எனவே உலக நாடுகளிடம் இருந்து தாராளமாக ஆயுத தளபாடங்கள் இறக்கப்பட்டு தமிழ் மக்களை நோக்கி திருப்பப்பட்டுள்ளது. அதேபோல் சிறிலங்காவில் வரி வருமானத்தின் பெரும்பகுதி தமிழ் மக்கள்மீதான போருக்கு திருப்பப்பட்டுள்ளது. அத்துடன் சிங்களப் படைவீரர்கள் அனைத்து கடல், தரை, ஆகாய, ஆயுத தளபாடங்களை ஒருங்கிணைத்து தமிழ் மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து அவர்களின் சொத்துக்களை சூறையாடி தமிழ் மக்களை கொன்று குவிக்கிறனர். இதற்கு பிரதி உபகாரமாக இராணுவத்திற்கு சிங்கள அரசு மகிந்த சிந்தனையின் கீழ் ரணவிரு கிராமங்களில் 50,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக வீதிகள், நீர், மின்சாரம், தொலைபேசி, வங்கி, வர்த்தக நிலையங்கள், மருத்துவமனை வசதிகள் கொண்ட 1500 வீடுகள் உள்ளடங்கிய படைவீரர் கிராமம் ஒன்றை நிர்மாணித்துள்ளார்கள்.

ஆக்கிரமிப்புப் படைகளில் பணிபுரியும் ஆக்கிரமிப்பாளர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக மலே வீதியில் கைவிடப்பட்டிருந்த பழைய கல்வி அமைச்சுக் கட்டிடம் தற்போது நவீன கல்வி நிறுவனம் ஒன்றாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு பாதீட்டில் ஆக்கிரமிப்புப் படையில் உள்ள வீரர்களுக்கு படைவீரர் கிராமங்களை அமைப்பதற்காக 3500மில்லியன் ரூபா ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு ஆக்கிரமிப்புப் படைகளின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு மட்டும் 4500மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவை மக்களின் வரிப்பணம். சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்கு எப்படி மாற்றப்படுகின்றது என்பதற்கு சிறந்த உதாரணங்கள் ஆகும்.

### திட்டமிட்ட உணவு உற்பத்தி உணவு விநியோகத் தடை

வன்னியில் உணவு பயிரிடப்படும் கணிசமான நிலங்களை சிங்கள இராணுவம் கைப்பற்றியுள்ளது. திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக உணவு உற்பத்தியை தடுப்பதற்கு சிங்கள இராணுவம் ஆக்கிரமிக்காமல் எஞ்சிய சிறிய நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள, விவசாயத்திற்கு தேவையான உரமெடுத்துவர சிங்கள அரசு முற்றாகத் தடைவிதித்துள்ளது. இதன் வெளிப்பாடு என்ன? சர்வதேச தொண்டு நிறுவனங்



களை வெளியேற்றியதன் நோக்கம் என்ன?

இதன் சாராம்சம் " உணவு உற்பத்தியைத் தடுத்து ஒரேயொரு பாதையால் செல்லும் உலக உணவுத்திட்ட உணவு விநியோகப் பாதையை மூடி அல்லது கட்டுப்படுத்தி பட்டினிச்சாவு அவலத்தை ஏற்படுத்தி இவ் அவலங்களை சர்வதேசத்திற்கு தெரியவராமல் கவனிப்பதுடன் தமிழ் மக்களை அடிபணியச் செய்து வவுனியாவில் உள்ள பெரிய முட்கம்பி வேலி கொண்ட முகாமில் அவர்களை அடைத்து, சிங்களம் தரும் தீனியையும், தீர்வையும் ஏற்கவைத்தல் ஆகும்" இரண்டு, நல்ல பதில் வன்னியிலுள்ள 0.4மில்லியன் தமிழ் மக்கள் விரைவில் சிங்களத்திற்கு அனுப்பி வைப்பார்கள் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

**உள்ளக இடப்பெயர்வு –இராணுவ நடவடிக்கை காரணமாக**

கிளிநொச்சி அரச அதிபர் அலுவலக தகவல்களின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் 219,878 மக்கள் தொகையில் 174,979பேர் (2008 ஒக்டோபர் தகவல்) இடம்பெயர்ந்துள்ளனர். இவ் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலக உணவுத்திட்ட அமைவில் ஒருவாரத்திற்கு ஒரு நபருக்கு 1400கிராம் அரிசி, 1400கிராம் மா, 420கிராம் பருப்பு, 140 கிராம் சீனி, 140கிராம் எண்ணெய் வழங்கப்பட வேண்டும்.

ஒரேயொரு பாதையால் வவுனியாவில் இருந்து உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டும் சிங்கள அரசு அடிக்கடி பாதையை மூடி முட்டுக்கட்டை போடுவதால் பெரும்பாலான வாரங்கள் மக்களுக்கு உணவு விநியோகிக்கப்படுவதில்லை. இதனால் மக்கள் உண்ண உணவின்றி அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே வாழ்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு கடந்தவாரத்திற்கு 127கிராம் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இது கஞ்சி குடிப்பதற்குக் கூட போதுமானதாக இல்லை. கிளிநொச்சி மாவட்ட அரச உயர்அதிகாரியின் தகவலின் பிரகாரம் 2008 ஒக்டோபர் மாதம் சிறிலங்கா அரசால் 400,000 லீற்றர் மண்ணெண்ணை அனுமதிக்கப்பட்டிருந்தும் திட்டமிடப்பட்ட பாதைத்தடையால் 270,000 லீற்றர் மண்ணெண்ணை கொண்டுவரப்பட்டது. மிகுதி 130,000லீற்றர் மண்ணெண்ணையை கொண்டு செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளுக்கு தாம் அனுமதிக்கும் தகவலை வெளியிடுவது அதன் பின் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டதன் பெரும்பகுதியை சிங்கள இராணுவம் தடுத்து வருகின்றது. வன்னியில் உணவு உற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப் படாத வகையில் கிருமிநாசினி உரவகைகளைக் கொண்டு செல்லப்படுவற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இதன் உத்தேச நோக்கம் என்ன? நிவாரணத்தையே நம்பி வாழ், குறைந்த உணவை உண்டு ஆரோக்கியமற்ற சமுதாயமாகத் தமிழன் உருவாகி நோய்வாய்ப்பட்ட பின் திட்டமிடப்பட்ட வகையில் மருந்துப்பொருட்கள் தடுக்கப்பட்டதன் விளைவாக தமிழ் மக்கள் போதிய சிகிச்சையின்றி சோமாலியா போன்ற நிலைக்குத் தள்ள சிறிலங்கா அரசு கங்கணம் கட்டியுள்ளது.

முல்லைமாவட்ட அரச அதிபரின் தகவலின் படி சிறிலங்கா இராணுவத்தின் அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பெரும் உணவு நெருக்கடியில் இருப்பதாகவும் 53,273குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையில் 35,268 குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தினூடாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்ததாகவும் கடந்த நவம்பர் மாதம் பதினொன்றரை நாட்களுக்கான உணவுப் பொருட்களே உலக உணவுத் திட்டத்தினூடாக மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

2008 டிசம்பர் மாதத்தில் முதலாம் வாரத்திற்கான உணவுப்பொருட்கள் கையிருப்பில் இல்லாததினால் நிவாரணம் வழங்கப்படவில்லை. இரண்டாம் வாரத்திற்கான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் வாரம் வந்துள்ள நிலையில் 17.12.2008வரை உணவுப் பொருட்கள் வராததினால் நிவாரணம் வழங்கப்படவில்லை.

15.12.2008 அன்றைய நிலையில் கணக்கொடுப்பில் 341 கிலோகிராம் அரிசி, 3124 கிலோகிராம் மா, 76,458. 32கிலோகிராம் பருப்பு, 12,187.04 கிலோகிராம் சீனி, 437.09 கிலோகிராம் எண்ணெய், என்பன இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 9.6கிராம் அரிசி விநியோகிக்கும் நிலையில் மூன்றாம் வாரத்திற்கான உணவுப் பொருட்களை

அரசும் சிங்களப்படைகளும் அனுப்ப முட்டுக்கட்டை போடுவார்களாயின் ஒரு குடும்பத்திற்கு 9கிராம் அரிசியும், 88.57கிராம் மாவும், 345.5 கிராம் சீனியும், 12.39 கிராம் எண்ணையும் விநியோகிக்கும், நிலையில் முல்லைத்தீவு அரச செயலகம் செயற்படுகின்றது.

**உள் உள்ளக இடப்பெயர்வு – கனமழை காரணமாக**

தற்போது வன்னியில் பெய்துவரும் கனமழை காரணமாக மக்கள் மீண்டும் அவலங்களை சந்தித்த வண்ணம் உள்ள னர். முன்னர் பெய்த கனமழை காரணமாக இடப்பெயர்வு களையும் உயிரிழப்புக்களையும், சொத்தழிவுகளையும் சந்தித்திருந்தனர்.

குடியிருப்புகள் அழிவடைந்தும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கமுடியாது வெளியேறிய மக்கள் பெரும் அவலங் களை சந்தித்துள்ளனர். இந்நிலையில் கடந்த சில தினங்களாக மழையின்மையால் மீண்டும் இடம்பெயர்ந் திருந்த இடங்களுக்கு செல்வதற்கு தயார்படுத்திய வேளை மீண்டும் கனமழை பெய்கின்றமையால் தொடர்ந்தும் தாம் இடம்பெயர்ந்திருந்த இடங்களுக்கு செல்லமுடியாத நிலை யில் வன்னியில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

மரநிழலில் வாழ்ந்த மக்கள் வெள்ளம் காரணமாக மரத்தி லேறி வாழவேண்டிய நிலை உருவாகியுள்ளது. சிங்களப் படைகளின் குண்டுமழை, கனமழை கடுமையாகப் பொழி கின்றது. இதனால் மக்கள் கொல்லப்பட்டும், காயப்படுத்தப் பட்டும் ஏதிலிகளாகி உள்ளனர். இவ்அவலங்கள் உலகத்தி ற்கு தெரிவிதில்லை.

கிளிநொச்சியை விரைவில் கைப்பற்றி விடலாம் என நினைத்த படையினருக்கு தற்போது புலிகள் கொடுக்கும் பதிலடி சிங்களப்படையினருக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்திவருகின்றது. வன்னிக்கான போரின் ஆரம்பம் முதலே போரிடும் ஆற்றல் மிக்க படையணிகள் பலத்த சேதத் தை சந்தித்து வந்ததால் இறுதிப்போரில் புதிய படையணிகளு டன் ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னியில் சிங்களப் படைகளுக்கு ஏற்படுத்தப்படும் இழப்புக்கள் குறித்து செய்திகள் முற்றுமுழுதாக இருட்டடிப்பு செய்யப்படுவதால் யுத்தத்தின் உண்மைநிலை குறித்து தென்பகுதி மக்களுக்கு தெரிவதில்லை. வன்னிச்செய்திகள் மட்டுமே அந்த மக்களுக்கு தெரியப்படுத்தப் படுவதால் அவர்கள் ஒரு மாயையில் இருக்கிறார்கள்.

படையினருக்கான இழப்புக்கள் குறித்த உண்மைநிலை தெரியவந்தால் அவர்கள் ஆட்சியை மாற்றி விடுவார்கள். யுத்த வெற்றி அரசியல் வெற்றிக்காக பயன்படுத்தப்ப டுவதால் யுத்தத்தில் ஏற்படும் தோல்வி குறித்த செய்திகள் ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்துவிடும் என்ற அச்சம் நிலவுகின்றது.

யுத்தத்தில் படையினருக்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்தோ அல்லது இந்த யுத்தத்தில் அரசும் வெற்றிபெற முடியாது என்றோ கூறுபவர்களை ஆளும் தரப்பினர் துரோகிகள் என்றும், புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் முத்திரை குத்தி விடுகின்றனர். படையினர் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்று வருகையில் அதனைச் சகிக்காத அரசியல்வாதிகளே வன்னிப்போரில் படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்படுவதென கூற முற்படுவதாகவும் தென்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

சிறிலங்காப் படைகளின் கோர யுத்தத்தை நேரடியாக எதிர்நோக்கியுள்ள வன்னியிலுள்ள கிட்டத்தட்ட 4இலட்சம் தமிழ் மக்கள் சிங்களப்படைக்கு எதிராக களமாடி தமிழீழ மண்ணை விரைவில் மீட்பது மட்டுமன்றி தமிழீழத்திலுள்ள சிங்களப்படைக்கு சொந்தமான அனைத்து இராணுவ தளபாடங்களை தனதாக்கிக் கொள்ளும் காலம் மிக விரைவில் வரும்அப்போது தான் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை உலகம் உணரும்.

**க.பாலகிருஸ்ணன்.** (B.COM)
**பொருளாதார ஆய்வாளர்**

## ஊர்மீட்டு வருவோம்

ஏக்கத்துடன் திரியும்
உங்கள் முகங்களைக்காண
எங்கள் இதயமும்
வலிக்கின்றது.
மூட்டைதூக்கி
மூன்று காசு உழைத்து
மரமேறி மாடாய்த் தேய்ந்து
உரமேறிய உங்கள் வியர்வையால்
நிலமேகிப் பயிர் செய்து
தேடிய தேட்டங்களில்
ஒட்டங்கண்டது
உங்களின் வாழ்க்கைப் பயணம்.
இப்போ சீரழிந்து கிடக்கும்
சொந்த வாழ்விடத்தைக் கண்டு
நொந்து போகும் உங்களுக்காய்
வெந்து உருகுகின்றோம்.
முகவரிகள் நிரந்தரமற்று
எத்தனையோ தற்காலிகங்களோடு
கழிகிறது உங்களின் தங்ககங்கள்.
நம்பிக்கையோடு செல்லுங்கள்.
எரிவைத் தாங்காத தங்கம்
பிரகாசமாய் ஒளிர்வதில்லை.
வலிகளை வாழ்வாக்கியது தான்
எங்களின் வரலாறு.
ஓடோடிச் சென்று ஊர் மீட்டு உங்கள்
காலடிக்கு வருவோம்.
வெல்லுகின்ற நாள் வரும்.
உங்கள் உள்ளங்கள்
மகிழ்வு பெறும்.

- புரட்சிநிலா

# மண்சுமந்தோர் கனவு

துயிலுமில்ல விதைப்பொன்றின் பின்னர்
வீடு திரும்பினேன்
படுக்கை விரித்துவிழ சாமக்கோழி கூவிற்று.
வித்துடல் தோளேற்றி நடந்ததால்
வலித்தது தோளும் மனமும்
தூக்கம் தொலைவாகிப்போனது.
கவிதையொன்று எழுதலாம்
எழுதலாம்தான் எப்படித் தொடங்குவது?
எழுதிச்சென்று எங்கே முடிப்பது?
பாட்டெழுதிப் பாட்டெழுதி
நான்படும் துயர் யாரறிவார்?
கூட்டுக்குள் கிடந்து குமைகிறது உயிர்
பூ அளிப்போட்டே புண்ணானது கைகள்.
நிதம் அழுதழுது
நீர் வற்றிப்போனது விழிகள்.
கண்மலரும் காலை ஒவ்வொன்றும்
வீரச்சாவுடன் தானே விடிகிறது.
இமை மூடும்பொழுதும்
இடிவிழுத்தித்தானே இருள்கிறது.
நிலவு முகந்திருந்திய நிர்மலப் பூங்குடிகளை
இழவு எடுத்து செல்கிறது நாளாந்தம்.
எத்தனை காலத்துக்கென்றுதான் இது?
பத்துப்பரப்பில்  விதைக்கத் தொடங்கிய வயல்
ஏக்கர் கணக்காக நீள்கிறது இன்று.
விதைக்கக் குழிதோண்ட வியர்க்கிறது நிலம்
காற்றின் விழிகலும்பது.
வெள்ளையடித்த கல்லறைக்குள்ளே
பள்ளி கொள்கின்றனர் பரமாத்துமாக்கள்.
நூல்பிடித்து ஓடியநேராய்
வரிசையான நாற்று நடுகை.
எல்லாம் முளைக்குமெனும் எதிர்பார்ப்பு
பொய்க்கவில்லை
கங்கும் களைமாக எங்கும் அரும்புகள்.
ஒருநாள் வந்து
உள்ளே புகுந்து ஒரு பூவைத்துப்பாரும்.
குழியிலிருந்து கேட்கும் குரல்
பார்க்கும் விழி
துடிக்கும் உயிர்.
எவர் சொன்னது இவர்களை இறந்துபோனவர் என்று?
எவர் சொன்னது எலும்பும் உக்கி எருவானார் என்று?
வெளியே வருவதில்லையே தவிர
குழிக்குள்ளேயே ஒரு ராஜாங்கமே நடக்கிறது.
கார்த்திகை இருபத்தேழு
தேசத்துக்கு உயிர்பெழுதும்நாள்.
சில்லிட்டுப்போகும் நிலம்
பூக்கொண்டு நடப்போம் புனிதரிடம்.

மெல்ல அருகமர்ந்து
கல்லறைகள் கழுவுவோம் கண்ணீரால்.
நெய்விளக்கு ஏற்றும் நேரம்
செல்வங்கள் விழிதிறப்பர்
செவிகேட்க சிரிப்பர்.
மௌனமொழியில்
பெற்றமனம் குரப்பேவர்
அதில் ஆயிரம் அர்த்தங்கள் அவிழும்.
“மொழியாகி எங்கள் மூச்சாகி” என்று
என்புருக வழியும் பாடலில்
சிலிர்த்துப்போய் சிலையாவோம்.
“பணிமுடித்து உறங்குகின்றோம்
மீதிவழி முன்செல்வீர்” என
தேவகுமாரனின் அசரீரி கேட்கும்.
“எமக்கானது பூவல்ல
எமக்கானது டரல்ல
எமக்கானது இந்தப்பாடல் மட்டுமல்ல
எமக்கானது விடுதலை
எமக்கானது தேசத்தின் விடிவு.”
காற்றிலேறும் இந்தப் பேரொலியுடன்
கல்லறைகள் மூடிக்கொள்ளும்
ஒளிபெறும் திசையில் பாதை தெளிவுறும்.
வாசல் கடந்துளியேவர
நிலம் விந்திருக்கும்.
எம் பயணம் தொடரும்
மண்மடிந்தோர் கனவு நனவாகும்வரை.



- புதுவை இரத்தினதுரை

# பிடரி மயிரை வேரோடு பிடுங்கு

வட ஆபிரிக்காவில் 1941 பிற்பகுதியில் நோபுறூக் முற்றுகையைக் கைவிட்டு மேர்சா எல் பிறீகாவரை ஜேர்மனியத் தளபதி றொமெல் பின்வாங்கினார். றொமெல் தோற்று பின்வாங்கிவிட்டார் என பிரித்தானியா மகிழ்ச்சியடைந்தது. மிகக்குறுகிய காலத்தில் றொமெல் பிரித்தானியப் படையணி மீது தொடுத்த வலிந்ததாக்குதலின் சுருக்கமிது. 1941 பிற்பகுதி யில் எகிப்துவரை முன்னேறிச்சென்ற ஜேர்மனியத் தளபதி றொமெல் போதிய உதவிகிட்டாததால் தோல்விகண்டு பின்வாங்கி மேர்சா எல்பிறீகாவில் (Mersa El Brega) நிலை கொண்டிருந்தார். பிரித்தானியர்கள் அவரையும் ஜேர்மன் இத்தாலியப் படையினரையும் விரைவில் வட ஆபிரிக்காவில் இருந்து கலைக்கலாம் என எண்ணி அதற்கான தாக்குதலுக் குத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

மத்திய கிழக்கிற்கான பிரித்தானியப் படைத்தளபதி பீல்ட் மார்சல் ஒச்சின் லேக்கும் (Achin Leck) 8ஆம் படையின் தளபதி ஜெனரல் ரிச்சியும் (Ritchie) உடனடியாக றொமெல் லால் எதிர்த்தாக்குதலைத் தொடுக்கமுடியாது என எண்ணினர். சனவரி மாத முற்பகுதியில் றொமெல்லுக்கு 55புதிய பன்சர் ராங்கிகளும் எரிபொருள்களும் படைக்கலங்களும் வந்துசேர்ந்தன. சனவரி 25 இற்குப் பின்பு 8ஆவது பிரித்தானியப் படை மேலும் படைக்கலங்களைப்பெற்று பலமடைந்துவிடும் என றொமெல் கருதினார். முக்கிய ஜேர்மன் தளபதிகளை அவர் அழைத்து சனவரி 21ஆம் நாள் தாக்குதலைத் தொடங்கப்போவதாக அறிவித்தார். அவர்களுக்கு அச்செய்தி ஆச்சரியமாக இருந்தது. பெப்ரவரி வரை பிரித்தானியருக்கு நேரம் தந்தோமோ எம்மை இவ்விடத்தைவிட்டே கலைப்பார்கள் அதற்கு முதல் அவர்களின் திட்டத்தை அழித்துவிடுகிறேன் என றொமெல் கூறினார்.

இத்தாலியப் படையணியில் பிரித்தானியர் ஊடுருவி இருந்ததால் தாக்குதலுக்குச் சற்று முன்புவரை அவர்களுக்கு விடயம் சொல்லப்படவில்லை. அத்துடன் தமது தலைமைச் செயலகத்திற்கும் (OKW-Oberkomm Andoder Wehrmacht) அவர் தாக்குதல் குறித்து அறிவிக்கவுமில்லை. மேர்சா எல் பிறீகாவை விட்டுப் பின்வாங்கப்போவதாக இத்தாலியத் தளபதிகளுக்கு அவர் பாசாங்குசெய்தார். அவர்களூடாக செய்தி இத்தாலியத் தலைநகரான ரோமுக்குத் தெரிவிக்கப்பட அங்கிருந்து பிரித்தானிய ஒற்றர்கள் மூலம் செய்தி ஒச்லேக்கிற்குக் கிடைத்தது.

இரவோடு இரவாகத் தன் ராங்கிகளை றொமெல் முன்னோக்கி நகர்த்தினார். பகலில் அவை நன்கு உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தன. சனவரி 19 பாலைவனத்தில் மண்புயல் வீசியதனால் பிரித்தானிய வேவு வானூர்திகளால் வேவு பார்க்க முடியவில்லை. 20ஆம் திகதி வேவுபார்த்த வானூர்திகள் மேர்சா எல் பிறீகாவின் துறையில் தகர்க்கப்பட்ட கப்பல்களையும் பல இடங்களில் பொருள்கள் எரிக்கப் படுவதையும் கண்டன. அவர்கள் றொமெல் திரிபொலிக்குப் பின்வாங்கப் போவதாக அறிவித்தன. றொமெல்லால் தகர்க்கப்பட்டவை பழைய கப்பல்கள் என்பதையும் அங்குள்ள கட்டடங்கள் ஒன்றிற்குள்ளும் ஜேர்மன் படையினர் இல்லை என்பதையும் பிரித்தானியர் கவனிக்கத்தவறிவிட்டனர்.

வட ஆபிரிக்காவின் இத்தாலியத் தளபதியான ஜெனரல் கம்பராவிற்கு (Gambarra) றொமெல் தான் சிறிய ஓர் எதிர்த்தாக்குதலை மட்டும் நடத்துவதாக அறிவித்தார். அவர் அதைப் பெரிதுபடுத்தி ரோமுக்கு அறிவிக்கமாட்டார் என றொமெல் கணிப்பிட்டார். கம்பரா இச்செய்தியை முக்கியமாகக் கருதாததால் ரோமுக்கு இது குறித்து அறிவிக்கவில்லை. அதனால் தாக்குதல் குறித்து முழுமையான தகவல்களை பிரித்தானியரால் முன்கூட்டியே அறியமுடியவில்லை. 21ஆம் திகதி காலை முன்னணியில் நின்ற பிரித்தானியப் படைகள் றொமெல்லின் தாக்குதலால் திகைப்படைந்தன. 22ஆம் திகதி ஏய்ச்டேபியா (Agedabia) ஜேர்மனியரிடம் வீழ்ச்சியடைந்தது. நடந்த மூன்று நாள் சமரில் பிரித்தானியரின் 01ஆம் கவச ஊர்தி டிவிசன் அழிக்கப்பட்டது. றொ மெல்லின் தாக்குதல் ஓர் அதிரடித் தாக்குதல் அல்ல. அது பெருமெடுப்பிலான வலிந்ததாக்குதல் என்பதை இத்தாலியரும் பிரித்தானியரும் அப்போதுதான் புரிந்துகொண்டார்கள்.



- யோ.செ.யோகி -

# வேன்



இத்தாலியின் தலைவர் முசோலினியும் படைத்தளபதி ஜெனரல் கவலெரோவும் (Cavallero) றொமெல்லின் வலிந்ததாக்குதலை நிறுத்தும்படி கேட்டனர். றொமெல் அவர்கள் வேண்டுகோளை ஏற்கவில்லை. றொமெல்லுடன் இணைந்து இத்தாலியப் படையினரை போரிட ஒப்புதல் தரமுடியாது என கவலெரோ தெரிவித்தார். றொமெல் அவர் கள் துணையின்றியே போரைத் தொடரத் தீர்மானித்தார். தனது மகன் மான்பிரட்டுக்கு "பழிக்குப்பழி வாங்கும் காலம் வந்துவிட்டது. பிரித்தானியரின் பிடரிமயிரை நாங்கள் பிடித்திருக்கிறோம். அவற்றை நான் வேரோடு பிடுங்கி எறியப்போகிறேன்" என எழுதினார். 30ஆம் திகதி றொமெல் பென்காசியைக் கைப்பற்றினார். கிட்லர் இவ்வெற்றியைத் தொடர்ந்து றொமெல்லை கேணல் ஜெனரலாகப் பதவி உயர் த்தினார். வட ஆபிரிக்காவிலிருந்து ஜேர்மன் படையை விரட்டி அடிக்க இருந்த பிரித்தானியரின் இரண்டு டிவிசன்கள் பெரு மிழப்பைச் சந்தித்தன. பிரித்தானியர் பலநூறு மைல்களுக் கப்பால் காப்பு நிலைகளை அமைக்கும் பணியிலீடுபட வேண்டியதாயிற்று.

## கசாலாச் சமர்

வட ஆபிரிக்காவில் 1942 ஆம் ஆண்டு ஜேர்மனியத் தளபதி றொமெல் இரண்டாம் முறையாக கசலாமீது நடத்திய தாக்கு தல் அவருக்குப் பெரும் புகழையும் ஜேர்மனிய, இத்தாலியப் படையணிகளுக்குப் பெரும் கௌரவத்தையும் பெற்றுத்தந்த தாக்குதல்களில் ஒன்றாகும். அதன் சுருக்கமிது. 1941 இல் வட ஆபிரிக்காவில் திரிபொலியிலிருந்து தோபுறூக் வரை முன்னேறிய ஜேர்மனியத் தளபதி றொமெல் 41இன் பிற்பகுதியில் பிரித்தானியப் படையின் கடும் எதிர்ப்பினாலும், படைக்கலப் பற்றாக்குறையினாலும் மேர்சா எல்பிறீகா வரை பின்வாங்கினார்.

றொமெல் தோல்விகண்டுவிட்டார். இனி அவரையும் அவரது படையினரையும் ஆபிரிக்காவைவிட்டு விரட்டிவிடலாம் எனப்பிரித்தானியா எண்ணியது. யாரும் எதிர்பாராத வகையில் றொமெல் சனவரி 21 1942 இல் பிரித்தானியப் படையினர்மீது வலிந்ததாக்குதலைத் தொடுத்தார். அயித் தாபல, பென்காசி ஆகியவற்றை விரைந்து கைப்பற்றிய றொமெல் பெப்ரவரி 6ஆம் நாள் கசலா வந்தடைந்தார்.

உருசியப் போர்முனையில் பல இடர்களைச் சந்தித்த கிட்லர் உடனடியாகக் கசலா மீது தாக்குதலைத் தொடர றொமெல் லுக்கு ஒப்புதல் தரவில்லை. ஏப்ரல் 42இல் றொமெல் தாக்குதலைத் தொடர கிட்லர் ஒப்புதல் தந்தார்.

கசலாவில் காப்பகழிகளில் நின்று சமர்புரியும் வகையில் அப்பகுதியில் காவல் நிலைகளைப் பிரித்தானியர் அமைத் திருந்தனர். கசலாக் கரையில் தென்னாபிரிக்க டிவிசன் நிலை கொண்டிருந்தது. 40மைலுக்கு அப்பாலிருந்த பேர்கச் சம்மில் 01ஆம் பிறீ பிரெஞ்சு பிரிகேட் நிலை கொண்டிருந் தது. முன்னணி நிலைகளின் பல பகுதிகள் சிறுசிறு பாசறை களாக அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் பாசறைகள் 02மைல் நீளமுடையவை. இவற்றில் ஒரு பிரிகேட் படையினர் நிலை கொண்டிருந்தனர். கசலாவிலிருந்து பேர்கச்சம் வரை பத்து இலக்கம் (1000000) கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டன. இவற்றிற்குப் பின்னால் கவச ஊர்திப் படையணிகள் நிலை கொண்டிருந்தன. கண்ணி வயல்களுக்குக் காவலாக இருக் கவும் அதேவேளையில் அதனூடாக ஊடுருவுவோரைத் தடுக்கவும் சிறு பாசறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அச்சு நாட்டுப்படைகள் ஜேர்மனியக் கூட்டணி இக்காப்பை ஊடுரு வினாலும் அதனைத் தடுக்கப் பலமாக அரண் செய்யப்பட்ட தோபுறூக், நைற்பிரிட்சு, அல் ஏடெம் ஆகிய பாசறைகள் அமைக்கப்பட்டிருந்தன.

சிறந்த இந்தக் காப்புத்திட்டத்தில் இருந்த ஒரு குறைபாடு அதனை அதனது இடப்புறமாக வளைத்துத் தாக்கலாம் என்பதுதான். முதலாம் உலகப்போரில் நிலையாக நின்று சமர்புரிந்த பிரித்தானியப் படையினருக்கு நகர்திறன் கொண்ட ஊர்திப்போர்முறை குறித்த பட்டறிவு போதாமல் இருந்தது.

ராங்கியை முதன்முதலில் பிரித்தானியாவே தயாரித்தது. ராங்கி, கவச ஊர்திகள், குண்டுவீச்சு வானூர்திகள் துணையுடன் நகர்திறன் கொண்ட போர்முறை குறித்த கருத்துக்களை முதன்முதலாக முன்வைத்த லிடல் காட், புலர் போன்றோர் பிரித்தானியரே ஆனால், ஜேர்மனியர்களே முதன்முதலில் இப்போர் முறையை நடைமுறையில் செயற்படுத்தினர். இதில் கெயின்சு குடேரியன் என்ற (Heinz Gudarian) ஜேர்மனியப் படைத்தளபதிக்குப் பெரும்பங்குண்டு.

கசலாப் பகுதி குறித்த றொமெலிடமிருந்த வேவுத்தகவல்களில் பல குறைபாடுகள் இருந்தன. கசலா எல்லையில் நின்ற 32ஆம் பிரிகேட், 22ஆம் கவச ஊர்திப் பிரிகேட் குறித்தும் நைட்பிரிட்சு பாசறையையும் அதில் இருந்த காவலர் பிரிகேட் குறித்தும், பெர் அல் கியூபியில் இருந்த 29ஆவது இந்தியப் பிரிகேட் குறித்தும் பேர்கச்சமிற்குத் தென் கிழக்கே இருந்த 3ஆம் இந்திய ஊர்திப் பிரிகேட் குறித்தும் றொமெல் அறிந்திருக்கவில்லை. அத்துடன் புதிதாக வந்திருந்த அமெரிக்க கிராண்ட் (Grant) ராங்கி குறித்தும் 57மி.மீ. ராங்கி எதிர்ப்புப் பீரங்கி குறித்தும் அவர் அறிந்திருக்கவில்லை.

பிரித்தானியரை அவர்களது இடதுபுறமாகச் சுற்றிவளைக்கும்போது பேர்கச்சம் உடனடியாக கைப்பற்றப்படாது போனால் வழங்கல்களில் மிகப்பெரிய சிக்கல்கள் ஏற்படும் என றொமெல்லுக்கு அவருடைய தளபதிகள் கூறினார்கள். அதை ஏற்றுக்கொண்ட றொமெல் “இடர் என்ற போதும் திட்டத்தை செயற்படுத்துவோம்” என்றார்.

26 மே 1942 பிற்பகல் 2மணிக்கு தாக்குதல் தொடங்கப்பட்டது. குறுவெல்லின் (Cruewell) தலைமையின் கீழ் திசைதிருப்பும் தாக்குதலை நாலு இத்தாலிய டிவிசன்கள் தொடுத்தன. அடுத்ததாகப் பெரும் தாக்குதல் ரிக்கப்சூ பகுதியை நோக்கியே நடக்கப்போகின்றது என்பதுபோல அப்பகுதியில் ஆட்டிலறி, வானூர்திகள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அத்துடன் வான்கல இயந்திரங்கள் பூட்டப்பட்ட தூசி கிளப்பும் பாரவூர்திகள் மூலம் பெருமளவில் புழுதியும் அப்பகுதியில் கிளப்பப்பட்டது.

இது பன்சர் ராங்கியோடு ஊர்திமயப்படுத்தப்பட்ட காலாட் படையினர் பெருமெடுப்பில் அப்பகுதியை நோக்கி நகருகின்றனர் என்பது போன்ற போலித் தோற்றத்தைக் கொடுத்தது. பிரித்தானியர் அடுத்த நாட்காலை ரிக்கப்சூ பகுதியில் பெரும் தாக்குதலை எதிர்பார்த்தனர். 22.30 மணிக்கு றொமெல் “வெனிசியா” (Venizia) என்ற குறி சொல்லைக் கூறியதும் படையணி தெற்கு நோக்கித் திரும்பியது. றொமெல்லின் படை மூன்று அணிகளாகப் பிரிந்து தாக்குதலை நடத்தியது. எறிக் கவசப்படையணி 21ஆவது பன்சர் அணியுடன் சேர்ந்து விடிவதற்குள் பேர்கச்சிம்மிற்கு தெற்கேயிருந்த 3ஆம் இந்திய ஊர்திப் பிரிகேட்டைத் தோற்கடித்தது. 90ஆவது இலகு டிவிசன் ரெட்மா சூரத்தைத் தாக்கி அழித்து அல் ஏடெம் நோக்கி நகர்ந்ததன் மூலம் 7ஆம் கவச டிவிசனின் பின்னணிக்கு வந்து சேர்ந்தன. நடுப்பகுதிக்கு ஊடாக ஊடறுத்த 15ஆவது பன்சர் டிவிசனின் பெரும் பகுதி 4ஆவது கவச பிரிகேட்டைத் தாக்கி தோற்கடித்தது. இங்குதான் முதல் முதலில் றொமெல் கிராண்ட் ராங்கியைக் கண்டார். ஆபிரிக்க கோச்ன் வேகமான முன் னேற்றத்தால் நிலைகுலைந்த 7ஆம் கவச டிவிசனின் தலைமையகத்தோடு, அதன் தளபதி ஜெனரல் மெசாலி கைதுசெய்யப்பட்டார். இரவுக்குள் அக்ரோமாவை அடைய றொமெல் விரைந்து சென்றார். ஆபிரிக்க கோச்ஜ நைற் பிரிட்ச்சுக்கு மேற்காகச் செல்லவிட்டு அதன் வழங்கல் அணிகள்மீது பிரித்தானியர் தாக்குதல் தொடுத்தனர். ரொமலின் அணி தன் தொடர்புவழி வழங்கல் அணி துண்டிக்கப்பட்டு சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் பொறிக்குள் மாட்டிக்கொண்டது. பேர்கச்சமை எதிர்பார்த்தபடியே உடனடியாக வெற்றிகொள்ள முடியாததால் றொமெல்லுக்கு படைக்கலன்கள் வரும் பாதை நீண்டதாக இருந்தது. இதனால் வழங்கல் பாதையைச் சுருக்க எண்ணிய றொமெல் 150ஆவது டிவிசனால் காக்கப்பட்டிருக்கும் கண்ணி வயல்களுக்கு ஊடாக வழி ஒன்றை அமைக்க முயன்றார். அவரது பொறியியலாளர்கள் இரண்டு வழிகளை கண்ணிகள் அற்றதாக ஆக்கிக் கொடுத்தனர். போதிய எரிபொருள் படைக்கலன்கள் அற்றிருந்த றொமெல் இந்தக்கண்ணி வழிக்குள் மே 31இல் தன் படையணியைப் பின்வாங்கச் செய்தார். தன்னைச் சூழ இருந்த எதிரியின் கண்ணி வயல்களைத் தனக்குக் காப்பாக மாற்றிக் கொண்டு 150ஆவது பிரிகேட்டையும் சுற்றி வளைத்து அடுத்த தாக்குதலுக்கான தளம் ஒன்றை அமைத்துக் கொண்டார்.

இதற்கிடையில் முன்னணி படைநிலைக்குப் பறந்து கொண்டிருந்த குறுவெல்லின் வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது. குறுவெலை பிரித்தானியர் கைதுசெய்தனர். றொமெல் இக்கட்டில் இருக்கும் போது குறுவெலை காணாத கேணல் வெசுற்பால் இத்தாலியப் படையணிக்குத் தளபதியாக இத்தாலியர் யாரும் பொறுப்பேற்றால் அவர்கள் சமரைச் சரியாக நடத்தமாட்டார்கள் எனப் பயந்தார். எனவே அங்கு அப்போது வருகை தந்த வான்படைத் தளபதி பீல்ட்மார்சல் கேசலிங்கை குறுவெல்லின் இடத்தில் பணியாற்றும்படி கேட்டார். முதலில் தயங்கினாலும் பின்பு பொது நன்மை கருதி பீல்ட்மார்சல் கேசலிங் கேணல் ஜெனரலின் தரத்திலுள்ள பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

150ஆவது பிரிகேட்டில் 3000படையினர், 124பீரங்கிகள், 80 பாரிய மேற்றிடா ராங்கிகள் (Matida tanks) போதியளவு ரவைகள் இருந்தபோதும் மே 30இல் றொமெல் தொடங்கிய தாக்குதலால் அது நிலைகுலைந்தது. அதற்கு வெளி உதவி கிடைக்கவில்லை. அதன் பின்னணியிலும் பெருமளவில் ஜேர்மன் படையினர் நின்றனர். யூன் 01 ஆம் நாள் சமர் கைகலப்புச் சண்டையாக மாறியது. முன்னணியில் நின்ற றொமெல் “எதிரி களைத்துவிட்டான். வெள்ளைக்கொடியைக் காட்டுங்கள். சரணடையச் சொல்லுங்கள்” எனக் கட்டளை




யிட்டார். தாக்குதல் அணித் தளபதி கப்ரன் ரெயிசுமான் நம்பமுடியாது இருந்த இக்கட்டளையை கட்டளைக்குப் பணிந்து செயற்படுத்தினார். அவர் ஆச்சரியப்படும் வகையில் பிரித்தானியர் கைகளை உயர்த்திய வண்ணம் தம் நிலையிலிருந்து வெளியே வரத்தொடங்கினார். பின்பு றொமெல்லின் சரிதையை எழுதி டென்மன்ட்யங்கிடம் ஜெனரல் யேயர்லீன் யூன் 1ஆம் நாள் நாம் 150ஆவது பிரிகேட்டை கைப்பற்றாது போயிருந்தால் பிரித்தானியரால் முழு ஆபிரிக்க கோச்ஜயும் பிடித்திருக்கமுடியும். 3ஆம் நாள் மாலை நாம் பகைவரால் சூழப்பட்ட நிலையிலும் எரிபொருளும் இல்லாத நிலையிலும் இருந்தோம் எனக்கூறினார்.

150ஆவது பிரிகேட்டைத் தோற்கடித்ததன் மூலம் கிழக்கு, மேற்காகச்செல்லும் பாலைவனப் பாதையான ரிக் கப்சு, ரிக் அல் அப்டுக்கான வழி திறக்கப்பட்டதுடன் கசலா பகுதியின் முக்கியமான நடுப்பகுதி றொமெல்லின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. யூன் 05இல் நேசநாட்டுப் படையணிகள் றொமெல்லைப் பலமாகத் தாக்கியபோது றொமெல் அவர்களை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தார். இரண்டு நாள் நடந்த சமரில் ரிச்சியின் தலைமையின் கீழ் செயற்பட்ட பிரித்தானியாவின் 08ஆம் படை அணி பெரும் இழப்புக்களைச் சந்தித்தது. 150 ராங்கிகள், 100 களப் பீரங்கிகள், 36 ராங்கி எதிர்ப்புப் பீரங்கிகள் என்பனவற்றையும் 10ஆவது இந்தியன் பிரிகேட்டையும் அந்தப் படை இழந்தது. 3000 பேர் கைதிகளாயினர்.

றொமெல் தோபுறூக்கை நோக்கி நகர்வதை பேர்கச்சம் மட்டும் தடுத்து நின்றது. யூலை 10,11 இல் பேர்கச்சமும் வீழ்ச்சியடைந்தது. ரிச்சி தன் படையணிகளுடன் ரிக் கப்சு நிலைக்குப் பின்வாங்கினார். இந்த நிலை யூன் 11இல் றொமெல்லால் தாக்கப்பட்டது. அன்றிரவு 123 ராங்கிகள் அல் ஏடெமுக்கு கிழக்கே ரிக்கப் சூவை ஊடறுத்துச் சென்றன. கசலா எல்லையில் நின்ற, தென் ஆபிரிக்க படையணிகளும் மற்றைய படையணிகளும் சுற்றி வளைக்கப்படலாம் என்ற நிலையில் அந்த அணிகள் தோபுறூக் நோக்கி பின்வாங்கின. கசலா சமரை தொடர்ந்து யூன் 21இல் தோபுறூக்கும் றொமெல்லிடம் சரணடைந்தது. ஜேர்மனியில் பீல்ட்மார்சல்களாக இருந்தோர் எல்லோரும் அந்த நிலையை அடைந்த அகவைகளிலும் குறைந்த அகவையில் – 50 றொமெல்லுக்கு கிட்லர் பீல்ட்மார்சல் நிலை தந்து அவரைக் கௌரவித்தார்.

- - - - - - - - - - - - - - -



# மன்னார் வாசியின் நிவாரணக்கணக்கு?!

ஒன்பது இடங்கள் பார்த்தாயிற்று.
சொந்தஇடம் தம்பனை.
தற்போது கட்டைக்காடு. இடையில்,
பண்டிவிரிச்சான் தட்சணாமருதமடு
பெரியமடு, இலுப்பைக்கடவை
வெள்ளாங்குளம் வன்னேரி முறிப்பு,
(மூச்சுவாங்குகிறது)
ஒவ்வொரு முறையும்
பல ஆயிரங்கள் கொடுத்துக் கொடுத்து
உடமைகள் காவி ஒருவாறு,
கடனோடும் மன உளைவோடும்
காலம் போனது.
வீடிழப்பு சொத்திழப்பு பெறுமதிகணித்து
நிவாரணம் கிடைக்குமாம்
மீளக்குடியேறும் காலம்.
ஆறுதல் வார்த்தைகளில்
மனம் ஆறினாலும்
ஐயங்கள் எழாமலில்லை.
உதாரணத்துக்கு ஒரு கணக்கு.
கூரைத்தகடு ஒன்றினது பெறுமதி
அடி 150 எனில் 12 அடி 1800/=
தகடு 30 எனில் 54000/=
ஏற்றியிறக்கலில் ஒவ்வொருமுறையும்
ஒன்றொன்று உடையின் 21
கூலிகள் செலவுகள்
மொத்தப் பெறுமதி குறைந்தது 50000/= ஆக,
தற்போதைய மொத்தப் பெறுமதி
54000+50000 = 104000
தற்போது ஒரு தகடு 104000/21
அது 4952.38/= (அடி412.69)
இரவொன்று சடுதியில்
மழையோடு வீசியபெருங்காற்றில்
நின்ற நெடுந்தென்னை தடாலென்று
குறுக்காக வீழ்ந்ததில்
கூரை முழுதும் உடைந்து நொருங்க
உயிர் மட்டும் தப்பி மீந்தது.
காற்றிற்படபடக்கும் ஒரு
கூரை விரிப்பின் கீழ்
ஈரமூறிய சேற்றிலிருந்து எழும்
ஆக மொத்த ஐயம்.
" இது ஒரு சாம்பிள் தான் தம்பி.
உப்படி உப்படி எல்லாத்துக்கும்
கணக்கிருக்கு.
சொத்துமதிச்சு இழப்பீடு தருவினமென்டால்
சொத்தின்ர முந்தின பெறுமதிக்கோ
இப்பத்தேப் பெறுமதிக்கோ தருவினம்?
எந்தப் பெறுமதிக்கு
ஆர் தம்பி தருவீனம்??"



– கை.சரவணன்
11.12.2008

# திட்டமிட்டுச் சிதைக்கப்படு



# ம் தமிழீழ மாணவர்களின் கல்வி

- அஞ்சலி

சிங்களப் பேரினவாத அரசின் தமிழர் மீதான இன அழிப்புக் கள் மேலும் வலுப்பெற்று வருகின்றது. விடுதலைப் புலிகளை அழிப்பதாகச் சர்வதேச சமூகத்திற்குப் பரப்புரை செய்து கொண்டு, மகிந்த அரசு அப்பாவித் தமிழ் மக்கள் மீதும், தமிழ் மாணவர்கள் மீதும் கொடூரமான தாக்குதல்களையும் மீண்டும் மீண்டும் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.

தமிழினத்தின் எதிர்கால சந்ததியினரான மாணவர்களின் கல்வியை சிதைப்பதிலும், அவர்களின் உயிர்களைப் பலி யெடுப்பதிலும் சிறிலங்காத் தரப்பு குறியாக இருக்கின்றது. 1970களில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மாணவர்மீதான தரப்படுத்தலில் இருந்து சந்திரிக்கா ஆட்சியில் நடைபெற்ற மாணவி கிருசாந்தி படுகொலை, இன்று மகிந்த அரசு மேற்கொள்கின்ற மாணவர் படுகொலைகள் வரை பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

அண்மையில் வன்னி மக்கள் மீது சிறிலங்கா அரசு வேண்டுமென்றே கட்டவிழ்த்துவிட்ட இராணுவக்கெடுபிடிகள், வான்தாக்குதல்கள் காரணமாக மக்கள் இடம்பெயர்த்தப்பட்டு பெரும் அவலச்சுமையைச் சுமந்து நிற்கின்றனர். இதில் 'பூவோடு சேர்ந்து வாழைநாரும் சென்ற கதையாக' வன்னி மாணவர்களின் நிலை மாறியுள்ளது. தமது கற்றல் உபகரணங்கள், பாடசாலைப் புத்தகங்களையும் கைவிட்டு ஓடிவந்த மாணவர்களின் கல்விநிலை அதோகதியெனும் நிலைக்குத்தள்ளப்பட்டது.

ஏற்கனவே சிறிலங்கா அரசாங்கம் வன்னி மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய இலவசப் பாடநூல்களை வழங்காது தடை செய்திருக்கின்றது. கிடைத்த ஒருசில பாடப்புத்தகங் களையும் கைவிட்டு ஓடிவந்த மாணவர்களின் நிலையை சிறிலங்கா அரசாங்கம் எள்ளளவும் சிந்திப்பதாக இல்லை. சிறிலங்கா அரசாங்கம் அவ்வாறு சித்திக்கப் போவதுமில்லை என்பது அனைவரும் அறிந்த விடயமே.

அத்துடன் சிறிலங்கா இராணுவக் கெடுபிடிகளால் வன்னிப்பகுதிகளில் இயங்கிவந்த 100ற்கும் மேற்பட்ட பாடசாலைகளும் மற்றும் மன்னார், கிளிநொச்சி மேற்குப் பகுதி, முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பாலான பாடசாலை கள், வவுனியா வடக்குப் பகுதிகளில் இயங்கிவந்த 50ற்கும் மேற்பட்ட பாடசாலைகளும், கல்வித் திணைக்களங்களும் இடம்பெயர்ந்துள்ளன. இந்நிலையில் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, விசுவமடு, தருமபுரம் ஆகிய பகுதிகளிலே இடம்பெயர்ந்த மக்கள் அதிகம் வசித்து வருவதால் இடம் பெயர்ந்த பாடசாலைகளும் அப்பகுதிகளிலே இருக்கின்ற ஒருசில பாடசாலைகளிலேயே இணைப்புப் பாடசாலைகளா கவும், மாலைநேரப் பாடசாலைகளாகவும் இயங்கிவருகின் றன. எனினும் இவ்வாறு இயங்குகின்ற பாடசாலைகளில் போதியளவு இடவசதியோ, மாணவர்கள் கல்வி கற்றலுக் குரிய சூழலோ இல்லாதநிலை காணப்படுகின்றது.

சிங்கள அரசு தமிழினத்தின் எதிர்கால சொத்துக்களான மாணவ சமுதாயத்தை வளரவிடாது அழித்தொழிக்கும் தனது எண்ணத்தை இவ்வாறே செயற்படுத்தி வருகின்றது. பாட சாலைகள் மீதும், மாணவர் விடுதிகள் மீதும், பாடசாலை பேரூந்துகள் மீதும் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்தி மாணவர்களின் வெள்ளைச் சீருடைகளை குருதியில் தோய்த்து கைகொட்டி மகிழ்கின்றது சிங்கள அரசு. இவற்றில் அண்மைய சில எடுத்துக்காட்டுகளை இங்கு நோக்குவோம்.

2008 சனவரி 29ஆம் திகதி தட்சணாமருதமடுப் பகுதியில் மாணவர்களும், மக்களும் பயணித்துக் கொண்டிருந்த பேரூந்தை இலக்கு வைத்து, சிறிலங்கா ஆழஊடுருவும் படையினரால் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 14 அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்பட்டது. அத்துடன் முறி கண்டிப் பகுதியில், நோயாளர் காவுவண்டியில முதலுதவிப் பயிற்சிக்குச் சென்றுகொண்டிருந்த மல்லாவி ஐயன்குளப் பாடசாலை மாணவர்கள் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஏழு மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் செஞ்சோலை மாணவிகள் மீது நடத்தப்பட்ட கோரமான விமானக் குண்டுத்தாக்குதலில் 53 மாணவிகள் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் 100ற்கும் அதிக மாணவிகள் காயமுற்றநிலையில் இன்னும் அதன் வலிகளையும், சுவடு களையும் தாங்கியபடியே கல்வியைத் தொடர்ந்துகொண்டிருக் கின்றனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி வள்ளிபுனம் பாடசாலைக்கு அருகில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் செல்வராசா சதீஸ்வரன் என்ற பதினைந்து அகவை மாணவன் படுகொலை செய்யப்பட்டிருந்தான். இச்சம்பவத் தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்வி கற்ற 2009

உயர்தர வகுப்பு மாணவியான நிவேதினி என்பவர் காய மடைந்திருந்தார்.

இவை மட்டுமின்றி சிறிலங்கா வான்படைத் தாக்குதல்கள் காரணமாக பரந்தன் இந்துமகாவித்தியாலய மாணவர்கள் பலர் காயமடைந்ததுடன் அப்பாடசாலையும் அண்மையில் அங்கிருந்து எறிகணைகள், விமானத் தாக்குதலால் இடம் பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வன்னிப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கின்ற சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை வீச்சுக் காரணமாக, 2008 டிசம்பர் 01 ஆம் நாளன்று பாடசாலை சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆறு அகவை மாணவி அருளா னந்தம் நிவேதா என்பவர் வட்டக்கச்சிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு இலக்காகிப் படுகொலை செய்யப் பட்டார். மற்றும் வட்டக்கச்சி கட்சன் வீதிப்பகுதியில் சிறிலங்கா படை எறிகணை வீச்சுக்கு இலக்காகி மற்றுமொரு மாணவன் கடந்த டிசம்பர் 17 அன்று படுகொலை செய்யப்பட்டான். இவை இன்னும் தொடரும் என்ற அச்சநிலை மாணவர்கள் மத்தியில் குடிகொண்டிருக்கின்றது.

சிறிலங்கா அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச, இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு விஜயம்செய்து பொதுமக்கள் மீதும், பொது அமைப்புக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்த மாட்டோம் என்று வாக்குறுதி அளித்த பின்னும் தமிழீழக் கல்விச்சமுதாயம் மீதான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. எனவே சிறிலங்கா அரச தலைவரும், சிறிலங்காக் கூலிப்படைகளும் இணைந்து எமது மாணவர்களின் கல்விநிலையை அழிக்கும் இலக்கை மேலும் வலுப்படுத்தி வருகின்றமையைக் காணமுடிகின்றது.

இவ்வாறான தாக்குதல்கள் மூலம் மாணவர்களின் கற்றல் சூழலும், அவர்கள் கற்றலை உள்வாங்கும் திறனும் வெகு வாகக் குறைக்கப்படுகின்றது. தற்பொழுது நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின்போது அதிகமான மாணவர்கள் பரீட்சையில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதும் மனோநிலையில் இருக்கவில்லை என்பது இங்கு நோக்கத்தக்க விடயமாகும்.

வெள்ளத்தில் நீந்திக்கொண்டிருக்கின்ற தற்காலிக கொட்ட கைக்குள்ளே பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் மாணவர் களின் மனதில் எப்போது குண்டுச்சத்தம் கேட்குமோ, எப் போது விமானங்கள் வருமோ என்ற அச்சம் கலந்த உணர் வே காணப்படுகின்றது. இவ்வாறான அச்ச நிலையில் எவ்வாறு மாணவர்கள் பரீட்சை வினாக்களுக்கு விடை எழுத முடியும் இதனை ஒவ்வொருவரும் தங்களுக்கு நிகழ் செயற்பாடுகளாக கற்பனை செய்துபார்த்தால் அதன் ஆழம் வெகுவாகப் புரிந்துகொள்ளப்படும்.

கல்விகற்றல், கற்பித்தல் என்பதற்கு ஏற்ற சூழலும், தகுந்த மனோநிலையும் இருத்தல் அவசியம். கல்வி என்பது தனியே பாடநூல்களைமட்டும் படித்தலாகாது. மாணவர்கள் சுதந்திர மாகவும், தகுந்த சுவாத்தியச் சூழலுடனும், இடவசதியுடனும் இருக்கும் போதுதான் கல்வியைக் கற்கவும் கற்பிக்கவும் முடியும். எனினும் வன்னி மாணவர்களைப் பொறுத்தவ ரையில் இவர்களுக்கான அடிப்படை வசதிகள் யாவும் தகுந்த முறையில் கிடைப்பதில்லை. இவை சிறிலங்கா அரசால் திட்டமிட்டவகையில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

எனவே தொடரும் தமிழ் மாணவர்கள் மீதான படுகொலை களும், கெடுபிடிகளும் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக் காட்டப்படுகின்ற போதும், இவை தொடர்பான தகுந்த நட வடிக்கைகள் எதனையும் சிறிலங்கா அரசு எடுக்கத் தவறியே வருகின்ற அதேவேளை இம்மாணவர்கள் மீதான நெருக் குதல்கள் மேலும் அதிகரித்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத் தக்கது.

இந்நிலை வன்னிக்குள் மட்டுமல்ல வன்னிக்கு வெளியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலும் மாணவர்கள் மீதான கெடுபிடிகள் நடந்தேறிய வண்ணமேயுள்ளன. அதிலும் சிறிலங்கா கூலிப்படைகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு இவர்கள் பெரும் துன்பத்தை அனு பவித்து வருகின்றனர். இவை இடைவிடாது தொடரும் சம்பவங்களாகவே நடந்தேறிக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான படுகொலைகள், சித்திரவதைகள் மற்றும் மாணவிகளான கிருசாந்தி, தர்சினி படுகொலைகள் தொடக்கம் திரு கோணமலை ஐந்து மாணவர்கள் படுகொலை, வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலைகள் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான கெடுபிடிகள் என்பன இவற்றுக்கான எடுத்துக்காட்டுகளாகச் சொல்ல முடியும்.

இவைகள் அனைத்தும் சிங்கள இராணுவப் படைகளும், அவர்களின் பின்னணியில் இயங்குகின்ற ஒட்டுக்குழுக் களும் சேர்ந்து அரங்கேற்றுகின்ற திட்டமிட்ட செயற் பாடுகளாகும். இந்த நடவடிக்கைகள் அனைத்துக்கும் பதில் கூறவேண்டிய சிறிலங்கா ஆளும் அரசாங்கம் இவற்றை ஒரு பொருட்டாகக்கூட எடுக்காது அரசுத்தலைவரும், அவரது குடும்ப ஆட்சியாளர்களும் போரை முன்னெடுப்பதிலே கரிசனைகாட்டி வருகின்றனர். இதனைத்தடுக்க சர்வதேச சமூகம் உதவாது சிறிலங்கா அரசுக்கு உதவிகளையே மேலும் மேலும் புரிந்து வருகிறது. எனினும் இவ்வாறான தாக்குதல் களுக்கு ஒரு நிரந்தரத்தீர்வு விரைவில் எட்டப்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். ■

இரக்கமற்ற சிங்களமே
நீ சாதிக்க நினைப்பது என்ன?
எம் மண்ணை ஏன் விழுங்குகிறாய்!
நாம் சளைக்க மாட்டோம் - எத்தனை
அழிவுகள் வரினும் எழுந்து நிமிர்வோம்





இவை எங்கிருந்து எங்கே நகர்ந்து கொண்டிருக்கின் றன? மாந்தை மேற்கில் தொடங்கிய சிங்களப் படை நடவடிக்கை துணு க்காய் அரச அதிபர் பிரி வினூடாக நகர்ந்து கிளி நொச்சி நகரைப்பிடிப்பது என விரிவடைந்தது.

குறிப்பிட்ட பகுதிகளில் மிகக் கொடூரமான வான் குண்டுத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுக் கள், கிளைமோர்த் தாக்குதல்கள் என் பவற்றிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளுவதற்காக நகரும் மக்கள் தான் இவர்கள்.

1996இல் சத்ஜெய படைநடவடிக்கை மூலம் சிங்கள அரசு கிளிநொச்சியை ஆக்கிரமித்தது. அக்காலப்பகுதியில் மக்க ளின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டன. வளங்கள் சிதைக்கப்பட்டன, கட்டடங் கள் தகர்க்கப்பட்டன. மக்கள் பல்வேறு அவலங்களுக்கு மத்தியில் வாழ்வை வாழ்ந்தனர்.

1998இல் ஓயாதலைகள் - 2 தொடர் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலி களால் கிளிநொச்சி நகர் கைப்பற்றப் பட்டது. தொடர்ந்து 2000ஆம் ஆண்டில்

# நகர்ந்து கொண்டிருக்கும் நகரம்

—ஆதிலட்சுமி சிவகுமார்

2008 செப்ரெம்பர் 14 ஆம் நாள் அது. பகல் 11.00 மணிப்பொழுது. பரந்தன் சந்தியில் இருந்து முல்லைத்தீவை நோக்கிச் செல்லும் சாலையில் ஒரு ரைக்ரர். அந்த ரைக்ரரில் 10அடிக்கு மேலான உயரத்தில் வீட்டுப்பொருட்கள், அல்ல ஒரு வீடே பயணித்துக் கொண்டிருந்தது. சீற்றுகள், மரத்தடிகள், தளபாடங்கள், கோழிக்கூடு, பூங்கன்றுச் சாடிகள் என்பவற்றோடு சங்கிலியிற் பிணைக்கப்பட்ட பொமரேனியன் நாய். ஒரு வயதான பெண், ஆண், இரண்டு பெண் பிள்ளைகள் சிறுவர்கள் பார்ப்பவர்கள் மலைத்துத்தான் போவார்கள். அந்த பரந்தன் - முல்லை சாலையில் இது போன்ற எத்தனையோ ரைக்ரர்கள், கன்டர்கள், லொறிகள், லான்ட் மாஸ்ரர்கள், மாட்டு வண்டில்கள், ஓட்டோக்கள் ஒவ்வொன்றிலும் வீடு அல்லது அலுவலகம் அல்லது நிறுவனம் அல்லது கடை என்று நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனையிறவு வெற்றி கொள்ளப்பட்டு மீண்டும் கிளிநகர் களைகட்டத்தொடங்கியது.

மக்களின் வரவு அதிகரித்து ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப் பட்டது. கட்டிடங்கள் முளைத்தன. பெருகின. வணிக நகராக உருப்பெற்றிருந்த கிளிநொச்சி நகர் வெளிநாட்டுப் பிரதி நிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சந்திப்பு நிகழும் அரசியல் செல்வாக்கு மிக்க நகராகியது. பற்றைகள் வளர்ந்து புதர்மண்டி, மிதிவெடிகளும், கண்ணி வெடிகளும் புதையுண்டிருந்த கிளிநொச்சி நகரக்காணிகளின் விலை எட்ட முடியாதளவுக்கு உயர்ந்தது.

இடிபாடுகள் எச்சசொச்சங்கள் வழித்து அகற்றப்பட்டு அல்லது மூடப்பட்டு வண்ணவண்ண கட்டடங்கள் சிரித்தன. பாட சாலைகள், அலுவலகங்கள் புத்துயிர்பெற்றன.

புதுவருடங்களின் பின் இப்போது மீண்டும் கிளிநொச்சியை இலக்குவைத்து சிங்கள இனவாதப் படைகள் ஏவிவிடப் பட்டுள்ளன.

மாந்தை கிழக்கில் தொடங்கி துணுக்காய்ப் பிரதேசம் உள் ளிட்டு அக்கராயன், வன்னேரி என்று சிங்களப்படை கைவீசி வந்து நிற்கிறது. தொடர்ந்தும் முன்னேறி கிளிநொச்சி நகரில் சிங்கக்கொடி ஏற்றிவிடலாம் என்ற கனவு பொய்யாக நகர முயல்வதும் முடியாமற் படுப்பதுமாக சிங்களப்படை தத்தளித் துக் கொண்டிருக்கிறது. அதேவேளை இயலாமையின் வெளிப்பாடோ அல்லது சிங்கள இனவெறின் வெளிப்பாடோ, தமிழ்மக்களின் வாழ்விடங்களின் மீது அகோர எறிகணைத் தாக்குதல்களும் வான் தாக்குதல்களும் மேற் கொள்ளப் படுகின்றன.

இந்த நிலையிற்தான் மக்கள் தமது உயிர்களைத் தற்காத்துக் கொள்ளவும், தாயக விடுதலைப் போரை தொடர்ந்து முன்னெடுக்கவும் ஏதுவாக இடம்பெயர்கின்றனர்.

மரங்கள், வயல்வெளிகள், உறவினரின் வீடுகள் எனப் பல்வேறு இடங்களில் மக்கள் தங்கியிருக்கின்றார்கள். மக்க ளுக்கு உதவி செய்யக்கூடிய தொண்டர் அமைப்புக்கள் சிறிலங்கா அரசால் வெளியேற்றப்பட்டுவிட்டன. மாரிமழை பொழிகின்றது மக்களின் அவலமோ வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

2002 பெப்ரவரியில் மேற்கொள்ளப்பட்ட போரோய்வு உடன் படிக்கையைத் தொடர்ந்து தமது இல்லங்களைப் புதுப்பித்து மெருகூட்டிய மக்கள் தற்போது மீண்டும் இருப்பிடம் இழந்துவிட்டனர். சசிகலா 27 வயது நிரம்பிய இளம் பெண். யாழ்.குடாநாட்டிலிருந்து 1995 இல் இடம்பெயர்ந்து முழங் காவிலில் வசித்தவர் தற்போதைய நிலையில் வன்னேரி, அக்கராயன், முருகண்டி, உதயநகர், எனப் பல இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து விசுவமடுவில் இப்போது தங்கியுள்ளார். “நாங்கள் இப்போது இருக்கிற இடம்



சரியான பள்ளக்காணி. மாரிமழைதொடர்ந்தால் எங்கட குடிசை நிலம் ஊறும். அதோட கிபிருக்கு பயந்து நாங்கள் வெட்டிவைச்சிருக்கிற பதுங்கு குழியும் முட்டிநிற்குது... என்ன செய்யப்போறமோ தெரியாது” என்று கூறினார்.

தங்கரத்தினம் கண்மணி 68வயது மூதாட்டி மிகவும் துயரப்பட்டு அவர் கூறிய வார்த்தைகள் இவை. “ஒரு காலமும் நாங்கள் படாத அவலத்தை இப்படுறம்... நாங்கள் எவ்வளவு கஷ்டத்தைப் பட்டாலும் பறவாயில்லை. உந்தச் சிங்களவனிட்டையிருந்து எங்கட நாடு மீண்டிடவேணும்...” இப்படித்தான் எத்தனையோ துயரங்களுக்கும், துன்பங்க ளுக்கும் மத்தியில் மக்கள் உறுதியோடும், நம்பிக்கை யோடும் வாழ்கிறார்கள். இரண்டு குழந்தைகளின் தந்தை யான இளங்குடும்பஸ்தர் அலெக்ஸ் “நாங்கள் நான்காவது தடவையாக இடம்பெயர்ந்திருக்கிறம்.. இப்படி எவ்வளவு காலத்துக்கு ஓடுறது. இந்தத்தடவை எப்படியாவது சண்டை யை வென்றிட வேணும் அதுக்காக நாங்களும் சேர்ந்து பாடுபடவேணும் என்றதை உணர்ந்திட்டம்... எங்கட பிள்ளை யளின்ர காலத்திலயாவது அதுகள் நிம்மதியா வாழவேணும்” என்று கூறுகிறார் அலெக்ஸ் இவருக்கு முப்பத்தி நான்கு வயது.

இருப்பிடம் இழந்தவர்களாய்... குடியிருந்த வீடுகளைக் கம்பும் தடியுமாய்க் கழற்றிக்கொண்டு அலையும் அவல முறும் நிலையில்தான் மக்களின் வாழ்வு நகர்கிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய கூரைவிரிப்பின் கீழ் (தரப்பாள்) மாரிமழைக்கும், நுளம்புக்கடிக்கும் ஈடு கொடுத்தபடி பல ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்றனர். எவ்வளவுதான் துயரங்கள் அழுத்தினலும் இந்த மக்கள் படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் அடியெடுத்து வைக்கவில்லை. மாறாக அவல வாழ்விலும் ஓர் அர்த்தத்தை உணர்கின்றனர். பாடசாலைகள், இடநெருக்கடிகள் மத்தியில் காலை, மாலை என இரு வேளைகளும் இயங்குகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் விடுமுறை நாட்களிலும் சுயநல மற்று மக்களுக்குப் பொருட்களை வழங்குகின்றன. கிரவல் தெருவில் இருபுறமும் கடைகள் கண்ணைப் பறிக்கின்றன. மக்களின் அன்றாட வாழ்வில் சில இடையூறுகள் ஏற்பட்டா லும் மக்கள் தம்மை இவ்வாழ்வுக்கு தகவமைத்துக் கொள்கின்றனர்.■

# அந்த வழியில் அவளும்

– முருகுபாரிமகன் –

கரிய இருள் எங்கும் பரவிக்கிடந்தது. விடிய இன்னும் நேரம் இருக்கிறதுபோலும் காகங்கள் கரையவில்லை. சேவல்கள் கூவவில்லை. குயில்கள் பாடவில்லை. வண்டுகள் ரீங்காரம் செய்யவில்லை. எங்கும் எல்லாம் மௌனமாய் இருந்தன.

காலம் எல்லாம் இப்படித்தான் இருந்து விடுமோ? இல்லை புயலுக்குப் பின்னே அமைதி என்பார்கள். அப்படித்தானோ என்னவோ! பூமா புரண்டு படுத்தாள். பனிக்குளிரில் படபடக்கும் உடலை கைகளால் இறுகப் பற்றியபடி கால்களை மடக்கியபடி முழங்கால்கள் வலித்தன. கால்களை நீட்டி மடக்கினாள் கைகள் உளைந்தன. உதறிக் கொண்டாள். விலாசமாக விரிந்து சென்ற வாழ்வின் எதிர்பார்ப்புக்கள் யாவும் குறுகிக் கிடந்தன.

எத்தனை காலம் தான் வாழ்வுக்காகப் போராடுவது போராடினால் தான் வாழ்வு என்ற நிலையாகிவிட்டது. நீண்ட நெடு மூச்சு எழுந்து மடிந்தது. மீண்டும் புரண்டு கொண்டாள். விடிந்தால் இதே குடியிருப்பில் அவள் ஆசிரியை....! வசந்தன் இருந்தால் எவ்வளவு மகிழ்ந்திருப்பான்....! போர்வைக்குள் சுருண்டு குறாவித் தூங்கிக் கொண்டிருந்தது அவளது குழந்தை.

அன்றும் விடிவதற்கு முன்னே அவள் வீட்டிற்கு அருகில் விழுந்த எறிகணைகளால் கிராமமே அதிர்ந்தது. அல்லோல கல்லோலப்பட்டது. நிகழ்கால நகர்வுகள் அப்படித்தான் இருந்தன. யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்ற பழமொழி மறுவடிவம் பெற்றது.

எறிகணை வரும் முன்னே படைவரும் பின்னே என்பது நடைமுறையானது. மக்கள் குலைந்து போனார்கள். கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு சிதறி ஓடினார்கள். “இராணுவம் வருகுதாம்” குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. “உவங்கட கையில பிடிபடக் கூடாது” அவள் தனிமரம் தான் இந்தக்குழந்தை ஒன்று தான் அவள் சொத்து. அதைக் காப்பாற்றவேண்டும்.

கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டாள். குழந்தையைத் தூக்கினாள். அவளுடன் இடம்பெயர்ந்தாள். தொண்டர் அவளை இங்கு கொண்டு சேர்த்தனர். இந்த நலன்புரி நிலையம் ஐந்தாவது இடம். இங்கு அவள் ஒரு மாத காலமாக இருக்கிறாள்.

வசந்தன் நீ....



திருமணமாகி இரண்டாண்டுகள். முதலாவது குழந்தை அது தான் அவளது செல்வம்.

எங்கோ தொலைவில் எறிகணை வீச்சில் அகோர ஒலிகள் அவள் காதுகளில் விழுந்து கொண்டிருந்தன. கிட்டக் கிட்டக் கேட்பதுபோன்ற உணர்வுகள் இந்த ஒலியே அவளை ஓட வைத்தது. பிறந்த கிராமத்தைவிட்டு இடம்பெயர வைத்தது.

இன்றும் அவள் விடியலுக்காகவே கண் விழித்திருந்தாள். எறிகணை வீச்சுக்குத் தூர எல்லையில் இடம்பெயர் நலன்புரி நிலையத்தில் தங்கி இருந்தும் அவள் மனம் அச்சத்தில் ஆடியது.

வசந்தன் அயராத முயற்சி உடையவன். தன் உடல் உழைப்பின் மூலம் தன் உடன்பிறப்புக்களைக் காப்பாற்ற அரும்பாடுபட்டான். தமக்கென இருந்த முப்பது பட்டி தோட்டத்தில் அவன் வியர்வை கலந்து செழிப்புற்றது. குடும்ப வறுமை காரணமாக தனது உயர்கல்வியை பாதியில் நிறுத்தி விட்டு உழைத்தான். விமானத் தாக்குதல் தாயின் உயிரைப் பலி எடுத்தது. தந்தையின் ஒரு காலை எடுத்தது. தந்தையால் குடும்பப் பாரத்தைச் சுமக்கமுடியவில்லை. குடும்பத்தில் மூத்தவன் வசந்தனே, குடும்பப் பாரம் அவன் தலையில் விழ அவன் தன் கல்வியை உடன்பிறப்புக்களின் எதிர்காலத்தைச் சிந்தித்தான்.

ஒருகால் இல்லாதபோதும் தன்னால் முடிந்தவரை மிதிவண்டி திருத்தும் வேலையை அவர் செய்தார்.

குடும்பம் ஓரளவு வாழ முடிந்தது. தங்கையும், தம்பியும் கல்வியில் காட்டிய கவனம் அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. விளையாட்டிலும் அவர்கள் திறமையைக் காட்டி னார்கள்.

தங்கை புனிதா பூவாக மலர்ந்தாள். உறவினர் பலர் கூடினர். விழாக்கொண்டாடினர். வசந்தனின் ஒரே தங்கையின் நிகழ்வு என்பதால் தன்னால் இயன்ற அளவு செலவு செய்தான். நிகழ்வு சிறப்பாகநடந்தது. வந்தவர்கள் வாழ்த்தினார்கள். பரிசுகள் வழங்கினார்கள், கூடி உண்டார்கள், படம் எடுத்தார் கள் போய் விட்டார்கள்,

வான் மேகங்களில் இறங்கி வந்தன. அம்மா இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பா. அப்பா என்றாலும் எங்க ளுடன் இருக்கிறார். கண்களைத் துடைத்துக் கொண்டான். எழுந்த பெருமூச்சை வெளித்தள்ளி ஓய்ந்துகொண் டான். வருடங்கள் சில உருண்டன.

ஊர் நிலைமை சிக்கலானது. விமானக் குண்டு வீச்சுக்கள் உக்கிரமடைந்தன. எறிகணை வீச்சுக்கள் காதுகளைக் கிளித் தன. ஊர்குழம்பிக் காணப்பட்டது. கடலிலும் பீரங்கிச் சத்தங்கள் காயப்படுவோர் இறப் போர் என நிலைமை மோசமாகியது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தனது பிடிக்குள் கொண்டுவருவதற்கு இராணுவ முயற்சிகள் தீவிரமாகின. போராளிகள் தடுப்புப்போர் தொடுத்து படை நடைவடிக் கைகளை தடுத்து வந்தனர். தாக்குதல் பெரிய யுத்தத்திற் கான தோற்றத்தைக் கொடுத்தது. இராணுவம் கொடிய நகர்வுகளை மேற்கொண்டு சொத்துக்களை அழித்து உயிர் களைப் பறித்து ஈவிரக்கமற்ற தாக்குதல் மூலம் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதனால் விடிவினைத்தேடும் நீண்ட பயணம் ஆரம்ப மானது. உயிரிழப்புக்களைத் தவிர்ப்பது எதிரியின் முற்று கையை உடைத்து வெளியேறுவது. பகைவனுக்கு பேரழி வைக் கொடுப்பது என்ற தந்திரோபாய நகர்வை மேற் கொள்ள மக்களும் போராளிகளும் முடிவெடுத்தனர். தாம் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு முடிந்தளவு கொண்டு போகக் கூடிய பொருட்களுடன் ஒரே இரவில் எல்லோருமாக வெளியேறிய வரலாற்று நிகழ்வு நடந்தது.

வசந்தனும் தன் உறவுகளுடன் வன்னிக்கு வந்து சேர்ந்தான். வெய்யிலிலும் மரநிழலிலும் மழையிலும் அவல வாழ்வு தொடர்ந்தது. அவலம் தொடர்ந்து உதவி நிறுவனங்களின் உணவுப் பொட்டலங்கள் ஓரளவு பசியைத் தீர்த்தன.

நாட்கள் கரைந்தன. இந்த நிலையில் தான் பூமாவின் தந்தையார் வசந்தனின் தந்தையாரைச் சந்திக்க நேர்ந்தது. இருவருக்கும் ஏற்கனவே பழக்கம் இருந்தது. இடர் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருந்த பூமாவின் தந்தையார் நிலைமை தெரிந்துகொண்டு தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று தனது காணியில் ஒருசிறு துண்டு நிலத்தைக் கொடுத்து குடிசை ஒன்றை அமைக்க உதவினார். வசந்தன் உழைப்புத் தேடினான். கோடைப் பயிர்கள் செய்ய நினைத்தான் பூமா வின் தந்தையார் அதற்கும் உதவினார்.

ஒரு மரநிழலில் வசந்தனின் தந்தை மிதிவண்டி திருத்தும் வேலையை ஆரம்பித்தார். நாளாந்தம் செலவுக்கு வழி பிறந்தது. பூமா புனிதாவுடன் இணைந்து கொண்டாள். இருவரும் ஒன்றாகவே பாடசாலை சென்றுவந்தனர். நட்பு மலர்ந்தது. பூமாவும் தாயில்லாமலே வளர்ந்த செல்லக் குழந்தை அவளுக்கு எந்தக்குறையும் இருக்கவில்லை. தனக்கு ஒரு நல்ல துணைகிடைத்ததில் அவளுக்கு மகிழ்ச்சி அதிகம்.......



நாட்கள் ஆண்டுகளாகக் கரைந்து போயின. வசந்தன் தந்தையாரைக் கேட்கவில்லை இளைய மகனையும் கூட்டிக்கொண்டு யாழ்ப் பாணம் போனவர் திரும்பி வரமுடியாமல் அங்கேயே தங்கிவிட்டார். தங்கை புனிதா தன்னை விடுதலைப் போராட்டத்தில் இணை த்துக் கொண்டாள். வசந்தன் மனம் உடைந் து காணப்பட்டான். பூமா அவனுக்கு ஆறுதல் கூறினாள்.

அன்பு உள்ளங்கள் ஒன்றோடு ஒன்று சங்கமித்தன. வசந் தன் தான் எடுத்த முடிவை மாற்றிக்கொண்டான். பூமா தடையானாள். இருவரின் நெருக்கமும் பூமாவின் தந்தை யாருக்கு வேதனையைக் கொடுத்து அவர் தன் சகோதரியின் மகனுக்கு கொடுக்க விரும்பினார். பூமா அதை விரும்ப வில்லை. என்பதைப் புரிந்து கொண்டவர் வீட்டை விட்டு வெகுதூரம் போய் வவுனியாவில் தங்கிவிட்டார்.

பூமா வசந்தனை பதிவுத் திருமணம் செய்துகொண்டாள். அவன் அவளுக்குத் தைரியம் ஊட்டினான். வாழ்க்கை மகிழ்ச்சியாகக் கழிந்தது. வசந்தன் தன்னை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளா விட்டாலும் தன்னா லான பணிகளைச் செய்து வந்தான். பூமா தாயாகிக் கொண்டிருந்தாள். இருவருக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி பூரித்துப் போனார்கள்.

ஒருநாள் வசந்தன் அன்றைய செய்தித்தாள் ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான். வீட்டு முன்புறத்தில் ஒரு வாகனம் நிற்பதைக்கண்டு திகைப்படையவில்லை புரிந்து கொண்டான். பூமா.... கரு.... அவள் திடமானவள்.

தன் ஆருயிர் தங்கை உயரிய தற்கொடையால் பகைமுகாம் எரிந்து வெடித்த செய்தி உலகமே அதிர்ந்திருக்கும்.

அவன் மூச்சிரைக்க ஓடி வந்தான். பூமாவின் விழிகள் அவனைப்.... அவன் செய்தித்தாளை நீட்டினான். செய்தி இருவருக்கும் தெரிந்தது தான். அமைதிக்குள் எரிமலை எரிந்து கொண்டதை இருவரும் புரியாது இருந்தனர். என்பது தான் உண்மையானது. செய்தி அறிந்து பலரும் வந்து போயினர். எல்லோரையும் பூமா ஆடிஓடி உபசரித்தாள். புனிதாவிற்கு வீரவிழா எடுக்கப்பட்டது. மிக எழுச்சியுடன் நடந்ததில் பலரும் அவளின் பெருமைகளை எடுத்துக் கூறினர் வசந்தனும் பூமாவும் அமைதியாக இருந்தனர்.

குழந்தை பிறந்தது புனிதா என்றே பெயரிட்டனர். அவளே வந்து பிறந்து விட்டதாக எண்ணிக் கொண்டனர்

வசந்தன் புனிதாவின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளில் ஈகச்சுடர் ஏற்ற வருவான் துயிலுமில்லம் சென்று நடுகல்லுக்கு மலர்தூவி வணக்கம் செய்யலாம் என்று காத்திருந்தாள் பூமா அவன் வரவில்லை. அவளே சென்று மலர்தூவி ஈகச் சுடர் ஏற்றி மலர்சூட்டி வந்தாள்.

மறுநாள் செய்தி வந்தது. மஞ்சள் சிவப்புக் கொடியுடன் பலரும் வந்தனர். படமும் வந்தது. போருதவிப்படை மாவீரன் லெப்ரினன்ட் சுருளி என்று திக்குத் தெரியாத நிலையில் பூமா கையில் புனிதா அவன் மட்டும் போய்விட்டான். வசந்தன் நீ என் அருகில் இருந்தால்.... அவள் எண்ணங்கள் அவனைச்சுற்றியே வந்தன. ம்... ம்! அவளுக்கு தூக்கம் கலைந்து வெகுநேரமாகி விட்டது.

கொடுங்கோலர்கள் நிலைப்பதில்லை.

வரலாறு இவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் ஆட்சி அதிகாரங்களுக்காக எத்தனை மக்களை பலி எடுக்கின்றார்கள். அவர்களுக்குக் காலம் பதில் சொல்லும் இவர்கள் அழிந்து போவர்கள் என எத்தனை மனங்கள் சபித்துக் கொண்டிருக்கும் என அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

எறிகணை வீச்சின் எல்லையைத் தாண்டிய குடியிருப்புக்கள் என்றாலும் வான் தாக்குதல்கள் நடவாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. கொடியவரின் குண்டுகள் இடம் பெயர்ந்து அவலப்படும் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்தது. பல உயிர்களை பசி தீர்த்த சம்பவங்கள் பலவற்றை அவள் அறிந்திருக்கிறாள். நேரிலும் பார்த்திருக்கிறாள். இந்த நினைவுகள் அவளை எச்சரித்துக் கொண்டிருக்கும்.

பகைவனின் வலைக்குள் விழாமல் எம்மை நாமே பாதுகாக்க வேண்டும் எமது இழப்புக்கள் எதிரிக்கு வெற்றியாக அமைந்து விடக்கூடாது என்பதில் அவள் தெளிவாக இருந்தாள். காலை இன்னும் விடியாமலே இருந்தது. காகங்கள் இன்னும் கரையாமலே இருந்தன. குடியிருப்புக்கள் இன்னும் அமைதியாகவே தூங்கிக் கொண்டிருந்தது. வான்வெளியில் பேரிரைச்சலுடன் குண்டுவீச்சு விமானங்கள் எச்சரிக்கை மணி ஒலித்தது. பூமா மிக வேகமாக எழுந்தாள். குழந்தையைத் தூக்கிக்கொண்டு பாதுகாப்பு அரணுக்குள் இறங்கினாள்.

மக்களின் பாதுகாப்புக்காக பல இடங்களிலும் பாதுகாப்பு அகழிகள் அமைக்கப்பட்டிருந்தன. டும்.... டும்.... டும்....

பல குண்டுகள் நிலத்தை அதிரவைத்து விழுந்து வெடித்துச் சிதறின. காப்பகழிகள் அதிர்ந்தன. ஆனாலும் காப்புத் தேடியவர்கள் பலர் உயிர் பிழைத்தனர். அவலக்குரல்கள் வான்முட்டி எழுந்தன. வானிலிருந்து கலக்கிய விமானங்கள் ஓடி மறைந்தன. நிலவெளுத்து வந்தது பலர் இரத்த வெள்ளத்தில் வயது வேறுபாடின்றி சிலர் சிதறிப் போயினர். மீட்புத் தொண்டர்கள் வேகமாகச் செயற்பட்டனர். காயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். அவலப்பட்ட மனிதன் மீதும் அவலம் சுமத்தப்படுகிறது. என்ன கொடுமை.



# அந்த வழியில் அவளும்

பூமா வெளியில் வந்தாள். குழந்தை அழுது கொண்டிருந்தது. அவள் விழிகளைச் சுழலவிட்டாள் அவள் திறப்புவிழா செய்யவிருந்த பாடசாலைக் கொட்டில் சிதறிக்கிடந்தது. அவள் கண்ட காட்சிகள் உள்ளத்தை சிதறடித்தது. பூமாவின் இதயம் உரமாகியது. “போராடினால் தான் வாழலாம் போராடிய மக்கள் தான் விடிவு பெற்றார்கள்”

- - - - - - - -